NAVA LAW
PROFESSIONAL CORPORATION
Real Estate · Commercial
Business · Will & Estates
10 Milner Business Court, Unit 210
Scarborough, ON, M1B 3C6
416.321.1100 www.nava.law

May 2017
# ஏகுருவி
ekuruvi.com






# தாயகத்தில் டயஸ்பொறா முதலீடு: எந்த நோக்கு நிலையிலிருந்து?

இகுருவி விருதுகள் 2017



சமுதாய சிற்பி விருது
Sinnathamby Gunaseelan



சமூக மாற்றத்திற்கான விருது
Dr.Ramanathan Lambotharan



சிறந்த சேவைக்கான விருது
Dr. Coomarasamy Kiruba



இணைக்கும் வேர்கள் விருது
Vairamuthu Sornalingam



சிறந்த நிதி சேவைகள் துறையில் முன்னோடி விருது
Raj Nadaraja



சிறந்த தலைமைத்துவ பண்பிற்கான விருது
Kumar Yogaratnam



சிறந்த இணைய வணிக விருது
Kish Raveendran

Century 21
Regal Realty Inc., Brokerage*
Jeyan Inpanayagam Comm.Eng
Sales Represntative
Direct: 416-877-3300
Tel: 416-291-0929 www.ihomeandcondo.com


GT Brokers
Protect You & Your Family
"JOIN OUR TEAM"
Get your industry licence at no cost...
Comprehensive skills training and mentoring by over 30 yrs.Experienced industry legend
Free in class teaching
Guna Thuraisingham M.A.Sc (Eng.), P.Eng.
416 528 1407


எனது வாடிக்கையாளர்கள், நண்பாகளுக்கும்
புதுவருட, தைத்திருநாள் வாழ்த்துகள்....
ROYAL LEPAGE
IGNITE REALTY- BROKERAGE
Ram Krishnamurthy
SALES REPRESENTATIVE
Direct 416-526-4996
795 Milner Ave. Toronto, ON M1B 3C3 | Off: 416-282-3333


Punch Sockalingam
Broker
Century 21
Affiliate Realty Inc. Brokerage -416-290-1200
For All Your Real Estate Needs
416-786-2463


We Make Your Water Clean & Clear
Thermo Care
Heating & Cooling Inc.
416 825 9373 416 640 1174

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ekuruvi.com
www.ekuruvi.com
Tel: 416-272-8543
Email: ekuruvi@gmail.com

முள்ளிவாய்க்கால் சத்தியம்!

நாங்கள் முள்ளிவாய்க்கால் கொடூரங்களைச் சந்தித்து எட்டு ஆண்டுகளாகிறது. எதிர்வரும் 18ஆம் திகதி 'முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்' நிகழ்வுகளுக்காக மீண்டும் ஒருமுறை கூடிப் பிரியப் போகின்றோம். ஆனால், முள்ளிவாய்க்காலில் இருந்து நாம் மீண்டெழுந்து விட்டோமா என்கிற கேள்விக்கான பதிலை யாராவது வைத்திருக்கின்றோமா? இல்லை! நிச்சயமாக இல்லை!!

எழுபது ஆண்டுகளாக அரசியல் உரிமைப் போராட்டத்தை முன்னெடுத்து வரும் சமூகம், கல்வியிலும் பொருளாதாரத்திலும் முன்னோக்கி பயணிப்பது தொடர்பில் பெரும் ஆர்வத்தோடு இருந்து வந்திருக்கின்ற சனக்கூட்டம் என்கிற அடையாளங்களோடு இருக்கின்ற ஈழத்தமிழர்கள் இன்று எந்த இடத்தில் வந்து நிற்கின்றோம். நாம் சந்தித்த படுகுழிகளை எவ்வாறு கடப்பது என்பது தொடர்பில் குழப்பங்களுக்கிடையே அல்லாடிக் கொண்டிருக்கின்றோம். இலகுவாக எதிராளிகளினாலும் சதிகாரர்களினாலும் பிரித்தாளவும், கையாளவும் கூடிய கூட்டமாக மாறிப்போயிருக்கின்றோமா? ஆம், அப்படித்தான் நிலைமை மோசமாக மாறி வருகின்றது!

ஆயுதப் போராட்டத்தினை அர்ப்பணிப்போடும் மூர்க்கமாகவும் முன்னெடுத்த சமூகமொன்று சந்தித்து நிற்கின்ற வீழ்ச்சி சில நாட்களுக்குள் மீள் கட்டிமைத்துவிட முடியாதது. அதுவும் முப்பது வருடங்களாக நீண்ட ஆயுதப் போராட்டம் ஏற்படுத்தும் அகபுற மாற்றங்கள் பெரியது. குறிப்பாக, போர் வெற்றிகள் மாத்திரமே மேல் மட்டத்தில் கோலொச்சிக் கொண்டிருக்கின்ற தருணத்தில் தாயகத்தின் பொருளாதாரமும், கல்வியும் வீழ்ச்சிப் பாதையில் சென்றுகொண்டிருந்தன. அது, போராடும் சமூகம் தவிர்க்க முடியாமல் சந்திக்கும் விடயம். ஆனால், அதனை, தக்கவைப்பதற்கான ஏற்பாடுகள் என்பது, கூட்டுப் பொறுப்புக்களினூடு நிறைவேற்றப்பட வேண்டியது.

இன்றைக்கு தாயகத்தின் பொருளாதார நிலைகள், சமூக குழப்பங்கள், கல்வியின் பெருவீழ்ச்சி பற்றி நாங்கள் சமூக ஊடகங்களிலும், மேடைகளிலும் அவ்வப்போது பேசிக் கொள்கின்றோம். ஆதங்கப்படுகின்றோம். ஆனால், ஏன் அவற்றை கடந்த எட்டு ஆண்டுகளில் சிறிய அளவில் கூட வெற்றிகரமான பக்கத்தில் கொண்டு சேர்க்க முடியவில்லை என்பது தொடர்பில் ஆராய்கின்றோமா? புலம்பெயர் தேசங்களிலுள்ளர்களின் உதவிகள் தாயகத்திலுள்ள மக்களுக்கு தேவைப்படுகின்றது. அவை, தனிமனிதர்களினூடு கிடைக்கவும் செய்கின்றது. ஆனால், ஆயுதப் போராட்ட காலத்தில் வழங்கப்பட்ட கூட்டுப் பங்களிப்புப் போன்றதொரு நிலையை வெளிப்படையாகவும் ஊழலற்ற ரீதியிலும் ஒருங்கிணைந்து ஏன் இன்னமும் செய்ய முடியாமல் இருக்கின்றது.

கடந்த இரண்டு ஆண்டுகளாக இலங்கையை நோக்கி புலம்பெயர் தேசங்களிலிருந்து வர்த்தக முனைவோர், புத்திஜீவிகள், செயற்பாட்டாளர்கள் பெருமளவு சென்று போகின்றார்கள் இவர்களில் பலரும் தனி மனிதர்களாகவும் அமைப்பு ரீதியாகவும் வந்து செல்கின்றார்கள். **இவர்களில் குறிப்பிட்டளவானவர்கள் இலங்கை அரசாங்கத்தின் அழைப்பின் பேரிலும், இன்னும் சிலர் வடக்கு மாகாண சபையின் அழைப்பின் பேரிலும், இன்னும் சிலரோ தன்னார்வமாகவோ வந்து செல்கின்றார்கள்.** ஆனால், இவர்களின் வருகை உரையாடல் வெளியிலும் செயற்பாட்டுத்தளத்திலும் ஏற்படுத்திவிட்ட மாற்றங்கள் என்று சொல்லக்கூடிய ஒன்றும் ஈழத்தமிழர்களினால் இன்னமும் உணரப்படவில்லை. ஏன் இப்படி நிகழ்கின்றது என்கிற கேள்விக்கான விடையையும் தாயக புலம்பெயர் தமிழ்த் தரப்புக்கள் ஆராய்ந்து கொள்ள வேண்டிய தருணம் இது.

தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் போராட்டமும், நீதிக் கோரிக்கையும், பொருளாதார முன்னேற்றமும் தாயக மக்களோடு புலம்பெயர் மக்களும் இணைந்து நிற்கும் போதுதான் வலுப்பெறும். ஆனால், அதற்கான சந்தர்ப்பங்களை உருவாக்குவதற்குப் பதிலாக சிதறுண்டு போயிருக்கிறோம். அதிகமாக அடித்துக் கொள்கின்றோம்.

இலங்கை அரசாங்கத்தின் விருந்தினர்களாக வந்து செல்லும் புலம்பெயர் முக்கியஸ்தர்கள், இராணுவத்தோடு இணக்கமாக இருப்பது பற்றி உரையாடிச் சென்றுள்ளதான செய்தி தாயக மக்களை எவ்வளவு வருத்தமுற வைக்கும். இராணுவம் ஆக்கிரமித்துள்ள காணிகளை விடுவிக்கக் கோரியும், இராணுவத்திடம் சரணடைந்த உறவுகளை விடுவிக்கக் கோரியும் 75 நாட்களைத் தாண்டி போராட்டங்கள் தொடர்ச்சியாக நீடித்து வரும் சமயத்தில் இவ்வாறான சந்திப்பு நிகழ்ந்திருப்பதை எவ்வாறு ஏற்றுக்கொள்வது?

நாங்கள் முள்ளிவாய்க்காலோடு முடங்கிப்போய்விட முடியாது. எங்களுக்காக போராடி வாழ்க்கையைத் தொலைத்துவிட்டிருக்கின்ற 12000க்கும் அதிகமான முன்னாள் போராளிகள், அங்கவீனமுற்றுள்ளவர்கள், கணவனை இழந்துவிட்டு பொருளாதார நெருங்கடியை எதிர்கொள்ளும் 90,000 குடும்பங்கள், தாய் தந்தையை இழந்துவிட்டு வாழ்க்கையின் சூனியத்தை எதிர்கொண்டுள்ள பிள்ளைகள் குறித்தெல்லாம் நாம் தனித்தனியாக சிந்தித்து அழுது புலம்புவதால் எதுவும் மாறிவிடாது. மாறாக, கூட்டுணர்வோடும் பொறுப்போடும் சிந்தித்து செயலாற்ற வேண்டும்.

அதுதான், முள்ளிவாய்க்காலில் நாம் மேற்கொள்ள வேண்டிய சத்தியம். அதுவே, நம்மை உண்மையான மனிதர்களாகவும் உணரவும் வைக்கும்!

நவஜீவன் அனந்தராஜ்

தாயகத்தில் டயஸ்பொறா முதலீடு: எந்த நோக்கு நிலையிலிருந்து? - நிலாந்தன்

அபிவிருத்தியும் தொலையும் கனவுகளும் - ரமணன் சந்திரசேகரமூர்த்தி

கனடா தமிழர் வரலாறு 12 - குரு அரவிந்தன்

கனடாவின் குடிவரவு மாற்றங்கள் - மெனகா சத்தியமூர்த்தி

புதிய சாதனை படைக்கும் ஈழத் தமிழர்கள் - குயின்ரஸ் துரைசிங்கம்

புரட்சி சிறுமிக்கு கனடா கொடுத்த பரிசு - ஜெயந்தி

முன்னாள் போராளிகள் குறித்த தமிழரசுக் கட்சியின் முடிவு - புருசோத்தமன் தங்கமயில்

அரசியல் தலையீட்டிற்கு எதிராக உலகளவில் ஆர்ப்பாட்டங்கள் - bbc

வலி சுமக்காத மேனியர் - வல்வை ஆனந்தன்

நிறைவுற்ற BBC தமிழோசையும் அருகிப் போகும் வானொலிப் படைப்பாற்றலும் - கானா பிரபா

தேர்தல் வரும் பின்னே வெகுமதிகள் வரும் முன்னே ! - நக்கீரன்

கனடாவில் கவனமில்லாமல் தவறவிட்ட உங்கள் பணம் உங்களை தேடுகின்றது - சிவ.பஞ்சலிங்கம்

சினைபைகட்டியா மாதவிலக்கு கோளாறா,குழந்தை-யின்மையா இனிஎதற்கு கவலை - Dr எழில்மதி

கனடிய தமிழர் வர்த்தக சமேலன விருது விழா புகைப்படங்கள்

புதிய தலைமுறையினரின் அமோக ஆதரவுடன் விஜய் வெற்றி

இகுருவியின் விருது விழா சிறப்பு பக்கங்கள்

இகுருவியின் விருதுகள் முழுவிபரம்

இகுருவி விழாவில் குரு அரவிந்தனின் நூல் வெளியீடு


சுப்பர் விசாவும் சுப்பர் விசாவுக்கான காப்புறுதியும் - Supervisa.Today

இகுருவி விருது விழாவில் சின்னத்தம்பி குணசீலன் ஆசிரியருக்கான விருது - நவஜீவன் அனந்தராஜ்

இளையோருக்கான புதிய வெளிச்சத்தின் வெற்றி- ராஜ் மோகன் செல்லையா

இகுருவி விழா புகை புகைப்படங்கள் ..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இகுருவிக்காக நிலாந்தன்

# தாயகத்தில் டயஸ்பொறா முதலீடு: எந்த நோக்கு நிலையிலிருந்து?

கடந்த மாதம் நடுப்பகுதியளவில் கொழும்பில் ஒரு சந்திப்பு நடந்தது. வறுமை ஆய்வுக்கான நிலையம் Centre for Poverty analysis (CEPA) என்ற ஒரு சிந்தனைக்குழாத்தினால் இச்சந்திப்பு ஒழுங்குசெய்யப்பட்டது. நோர்வீஜிய அரசாங்கம் மற்றும் இலங்கை வெளிவிவகார அமைச்சு என்பவற்றின் அனுசரணையுடனான இச்சந்திப்பில் டயஸ்பொறா தமிழர்கள் மத்தியிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் பங்குபற்றியிருக்கிறார்கள். இவர்களுள் 2009 மே மாதத்திற்கு முன்பு தீவிரமாக அரசியலில் ஈடுபட்டவர்களும் உண்டு, தீவிரமாக அரசியலில் ஈடுபட்டிராத இரண்டாம் தலைமுறையினருமுண்டு. இவர்களுக்கான பயணச் செலவுகளை மேற்படி நிறுவனமே பொறுப்பேற்றது.

வடக்கு கிழக்குப் பகுதிகளில் டயஸ்பொறா முதலீடுகள் மற்றும் உதவிகள் தொடர்பான ஒரு சந்திப்பு இதுவென்று கூறப்படுகின்றது. நான்கு மாகாண சபைகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. ஆனால் வடக்கு கிழக்கில் இயங்கும் சிவில் அமைப்புக்களுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. மத்திய வங்கி ஆளுநர், முதலீட்டுச் சபைத் தலைவர் ஆகியோரும் உட்பட சம்பந்தப்பட்ட அமைச்சுக்களின் செயலாளர்கள் பலரும் இதில் பங்கேற்றியிருக்கிறார்கள். கிழக்கு மாகாண சபையிலிருந்து அதன் ஆளுநரும், தமிழரான ஒரு அமைச்சரும் பங்குபற்றியிருக்கிறார்கள். வடமாகாண சபையிலிருந்து சில அதிகாரிகள் பங்கேற்றியிருக்கிறார்கள். அவர்களோடு அவுஸ்திரேலியாவை வசிப்பிடமாகக் கொண்டவரும், முதலமைச்சருக்கு நெருக்கமானவரும், முதலமைச்சரின் மூலோபாய ஆலோசகர் என்று விளிக்கப்படும் ஒருவரும் இச்சந்திப்பில் பங்குபற்றியிருக்கிறார்;

இச்சந்திப்பில் கலந்துரையாடப் பட்ட விடயங்கள் தொடர்பில் உத்தியோகபூர்வமான அறிவுப்புக்களோ, செய்திகளோ வெளிவரவில்லை. இச்சந்திப்பில் பங்குபற்றிய சிலர் தரும் தகவல்களின்படி வடக்கு கிழக்கில் டயஸ்பொறா முதலீடுகளை ஊக்குவிப்பது தொடர்பாகவும், தொழில்சார் திறன்களை டயஸ்பொறாவிலிருந்து பெற்றுக் கொள்வது தொடர்பாகவும் உரையாடப்பட்டதாக தெரிகிறது. இதில் பங்குபற்றிய டயஸ்பொறாத் தமிழர்கள் சிலர் வடமாகாண சபையின் நிர்வாகத் திறன் தொடர்பில் விமர்சனங்களோடு காணப்பட்டார்கள். ஓர் உத்தியோகபற்றற்ற கலந்துரையாடலின் போது ஒரு டயஸ்பொறாத் தமிழர் வட மாகாணசபை அதிகாரி ஒருவரிடம் பின்வருமாறு கேட்டாராம். 'கடந்த மூன்று ஆண்டுகளில் நீங்கள் சாதித்தவற்றைக் கூற முடியுமா'? என்று. அதற்கு அந்த அதிகாரி சொன்னாராம் 'பிராந்திய மற்றும் உள்ளூர் தெருக்களை திருத்தியிருக்கிறோம்' என்று.

அதே சமயம் கிழக்கு மாகாண சபையைப் பொறுத்தவரை அதன் சார்பாக ஆளுநர் அச்சந்திப்பில் பங்கு பற்றியிருக்கிறார். ஓர் அமைச்சரும் பங்கு பற்றியிருக்கிறார். இது வட மாகாண சபையோடு ஒப்பிடுகையில் கிழக்கு மாகாண சபையானது இது போன்ற சந்திப்புக்களில் அதிகம் ஆர்வம் காட்டுவதைக் குறிக்கின்றது என்று ஒரு டயஸ்பொறாத் தமிழர் சொன்னார். ஆனால் கிழக்கு மாகாண சபை ஆளுநர் மேற்படி சந்திப்பை ஒழுங்குபடுத்திய அரசு சாரா அமைப்பைப் போன்ற நிறுவனங்களோடு நீண்ட காலமாக நெருங்கிச் செயற்படும் ஒரு வரலாற்றைக் கொண்டவர் என்பதால் இது போன்ற சந்திப்புக்களில் அவர் ஆர்வத்தோடு பங்குபற்றியிருக்கலாம் என்று ஒரு மூத்த சிவில் அதிகாரி சுட்டிக்காட்டினார்.

அதிகம் பிரசித்தமாகாத இச்சந்திப்பைக் குறித்து பல்வேறு வகைப்பட்ட அபிப்பிராயங்களும் உண்டு. நோர்வேயைச் சேர்ந்த ஒரு முகநூல் பதிவர் இது தொடர்பில் கடுமையான விமர்சனங்களை முன்வைத்திருந்தார். 2009மேக்குப் பின் மற்றவர்களை அளக்கப் பயன்படுத்திய அதே அளவு கோல்களை இச்சந்திப்பில் பங்குபற்றியவர்கள் தங்களுக்கும் பயன்படுத்த வேண்டும் என்ற தொனிப்பட அவர் பதிவிட்டிருந்தார். ஒரு முன்னாள் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில் தமிழ் டயஸ்பொறாவை பிளவு படுத்தும் அரசாங்கத்தின் முயற்சி இதுவென்று சுட்டிக்காட்டினார். ஏற்கெனவே ஆட்சி மாற்றத்தின் முன் பின்னாக சிங்கப்பூரிலும், லண்டனிலும் நடந்த சந்திப்புக்களின் விளைவே இதுவென்று அவர் குறிப்பிட்டார். சில டயஸ்பொறா அமைப்புக்கள் அரசாங்கத்தோடு இணங்கிச் செயற்பட தொடங்கிவிட்டன என்றும் இந்த 'றிவேர்ஸ் லொபியின்' ஒரு பகுதியாகவே இச்சந்திப்பைப் பார்க்க வேண்டும் என்றும் ஒரு டயஸ்பொறா அவதானி கூறினார்.

டயஸ்பொறாத் தமிழர்கள் அவர்கள் நினைத்தபடி வடக்கு கிழக்கில் சுயாதீனமாக முதலீடுகளைச் செய்ய முடியாது. வடக்கு கிழக்கில் முதலீடு செய்ய முன் வருவோரை முதலீட்டுச் சபையே திசை திருப்பி விடும் சந்தர்ப்பங்களும் உண்டு. தெற்கில் உள்ள ஓர் இடத்தில் நீங்கள் முதலீடு செய்தால் உங்களுக்கு பின்வரும் சலுகைகள் கிடைக்கும் என்ற ஒரு பட்டியலைக் காட்டி முதலீட்டாளர்களை தெற்கை நோக்கிக் கவரும் உத்தியை அவர்கள் பயன்படுத்தியது உண்டு என்று மேற்சொன்ன முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுட்டிக்காட்டினார். வெளித் தோற்றத்திற்கு இது தாயகத்திற்கும் டயஸ்பொறவிற்கும் இடையிலான பொருளாதார உறவுகளை விருத்தி செய்யும் ஒரு சந்திப்பாக தோன்றினாலும் அதன் உள் நோக்கங்களைக் கருதிக் கூறின் டயஸ்பொறாவை பிளவுபடுத்தும் அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலுக்கு உட்பட்டதாகவே இச் சந்திப்பை பார்க்க வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இவ்வாறான ஐயங்களின் பின்னணியில்தான் சில வாரங்களுக்கு முன் கனடாவில் இருந்து வந்த வணிகர்களின் தூதுக்குழு ஒன்றை வடமாகாண முதலமைச்சர் சந்திக்க மறுத்தாரா? என்ற கேள்வியும் எழுகின்றது. அது போலவே அண்மையில் தான் கட்டிக் கொடுத்த வீடமைப்புத் திட்டத்தை கையளிக்கும் நிகழ்ச்சிக்காக ஒரு தமிழ் கோப்ரேட் நிறுவனம் ரஜனிகாந்தை அழைத்து வர முற்பட்ட பொழுது அதற்கு கடும் எதிர்ப்பு காட்டப்பட்டது. குறிப்பிட்ட கோப்ரேட் நிறுவனம் தொடர்பாகவும் மேற்கண்டவாறான விமர்சனங்கள் உண்டு. இந்த விமர்சனங்கள் யாவும் ரணில் மைத்திரி ஆட்சி மாற்றங்களுக்குப் பின்னானவை அல்ல. அதற்கும் முந்தியவை. அதாவது 2009 மேக்குப் பின்னரான புதிய வளர்ச்சிகளின் பாற்பட்டவை.

2009 மேக்குப்பின் தமிழ்த் தேசிய அரசியலின் கூர் முனை போல டயஸ்பொறாவே காணப்பட்டது. ஆயுதப் போராட்டத்தின் வீழ்ச்சிக்குப் பின் ஈழத்தமிழ் அரசியலை டயஸ்பொறாவே முன்னெடுக்கப் போகிறது என்ற ஒரு தோற்றம் கட்டியெழுப்பப்பட்டது. இத்தகையதோர் பின்னணியில் 2009 மேக்கு முன் தமிழ் டயஸ்பொறாவில் தீவிரமாக அரசியலில் ஈடுபட்ட பலரும் தாயகத்திற்கு திரும்பி வருவதில் சட்டத் தடைகளும், அச்சுறுத்தல்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பொழுது boycot பற்றி கதைப்பவர்கள் குறைவு. பெரும்பாலானவர்கள் Engage பண்ணுவது பற்றியே கதைக்கிறார்கள். நவீன ராஜதந்திரம் எனப்படுவது ஒரு விதத்தில் Engage பண்ணுவது தான். ஆனால் எந்த நோக்கு நிலையிலிருந்து Engage பண்ணுவது என்பதுதான் இங்கு முக்கியமானது. அரசாங்கத்தின் நோக்கு நிலையிலிருந்தா? அல்லது மேற்கு நாடுகளின் நோக்கு நிலையிலிருந்தா? அல்லது தமிழ்த் தேசிய நோக்கு நிலையிலிருந்தா?


ஏற்பட்டன. அதே சமயம் ஓர் இனப்படுகொலை மூலம் ஆயுதப் போராட்டத்தை தோற்கடித்த ராஜபக்ஷ அரசாங்கத்தை புலம்பெயர்ந்த தமிழர்கள் புறக்கணிக்க வேண்டும் என்ற ஒரு கோரிக்கையும் வலிமை பெற்றது. ஒரு புறம் ஒரு தொகுதி அரசியற் செயற்பாட்டாளர்கள் தாயகம் வந்துபோகமுடியாத நிலை. இன்னுமொரு புறம் ராஜபக்ஷ அரசாங்கத்தை — Boycott — புறக்கணிக்க வேண்டும் என்ற ஒரு கோரிக்கை.

2009 மேக்குப் பின்னரான கொந்தளிப்பான ஈழத்தமிழ் உளவியற் சூழலில் குறிப்பாக டயஸ்பொறாவில் ராஜபக்ஷ அரசாங்கத்தின் புறக்கணிப்பதா? அல்லது தமிழ்ப் பகுதிகளில் அபிவிருத்தியில் பங்கேற்பதா — boycott or engage- - என்ற வாதம் அதிகம் அழுத்தம் பெறலாயிற்று. இவ்வாறான வாதப்பிரதிவாதங்களின் பின்னணியில் கொழும்புக்கு வந்த டயஸ்பொறா முதலீட்டாளர்கள் பலரும் மகிந்தவின் ஆட்களாகவே பார்க்கப்பட்டார்கள். அவர்கள் மகிந்தவின் ஆட்களோ இல்லையோ அவர்கள் தாயகத்துள் நுழையும் பொழுது ராஜபக்ஷ அரசாங்கத்தோடு ஏதோ ஒரு விகிதமளவிற்கு சுதாகரிக்க வேண்டிய ஒரு அரசியற் பொருளாதாரச் சூழலே நாட்டில் நிலவியது என்ற ஒரு நம்பிக்கை தமிழ் மக்கள் மத்தியில் பலமாக ஏற்பட்டு விட்டது. ஈழத்தமிழர்கள் மத்தியில் செயற்படும் மிக நீண்ட பாரம்பரியத்தைக் கொண்ட ஒரு மனித உரிமை அமைப்பைச் சேரந்தவர்கள் அந்நாட்களில் அரசாங்கத்தோடு இணங்கிச் செயற்படும் தமிழ்க் கட்சிகளோடு ஏதோ ஒரு விகிதமளவிற்கு தொடர்புகளைப் பேணினால்தான் தமிழ்ப் பகுதிகளில் செயற்பட முடியும் என்று நம்புமளவிற்கே நிலமைகள் காணப்பட்டன.

இவ்வாறான ஓர் அரசியல், இராணுவச் சூழலுக்குள் டயஸ்பொறவிலிருந்து நாட்டுக்குள் வந்த பெரும்பாலான முதலீட்டாளர்கள் கடுமையாக விமர்சிக்கப்பட்டார்கள். இந்த விமர்சனங்களின் தொடர்ச்சி தான் இக்கட்டுரையில் முன்னர் குறிப்பிட்ட தமிழ் கோப்பரேட் நிறுவனத்தின் மீதும் கனடாவிலிருந்து வந்த முதலீட்டாளர்கள் மீதும் முன்வைக்கப்பட்ட விமர்சனங்களாகும்.

இவ்வாறு boycott or engage- என்ற விவாதம் நிலவிய ஒரு சூழலில் மேற்கு நாடுகள் தமிழ் டயஸ்பொறாவை தமது நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப குறிப்பிடத்தக்க அளவிற்கு பயன்படுத்தின. ராஜபக்ஷ அரசாங்கத்திற்கு எதிரான போர்க்குற்றச் சாட்டுகளை பெருமளவிற்கு தொகுத்தது தமிழ் டயஸ்பொறாதான். ராஜபக்ஷவை வழிக்குக் கொண்டு வருவதற்கு டயஸ்பொறாவை ஒரு கருவியாக மேற்கு நாடுகள் பயன்படுத்தின. அதில் வெற்றியும் கண்டன.

ஆனால் ஆட்சி மாற்றத்தின் பின் அதே மேற்கு நாடுகள் டயஸ்பொறாவின் தீவிரத்தைத் தணிக்க முற்படுகின்றன. அரசாங்கத்தால் தடை செய்யப்பட்ட அமைப்புக்கள், மற்றும் நபர்களின் மீதான தடைகளை நீக்குவதன் மூலம் டயஸ்பொறாவிற்கும், தாயகத்திற்கும் இடையிலான தூரத்தைக் குறைத்து டயஸ்பொறாவையும், தாயகத்தையும் நெருங்கி உறவாட வைத்து அதன் மூலம் டயஸ்பொறாவின் தீவிர நிலையை தணிக்கலாம் என்று மேற்கு நாடுகள் சிந்திக்கின்றன. ஆட்சி மாற்றத்தின் பின் தமிழ் டயஸ்பொறாவானது தாயகத்தோடும், அரசாங்கத்தோடும் இடையூடாடத் தேவையான நகர்வுகளை மேற்கு நாடுகளே முன்னெடுக்கின்றன. அதாவது இப்பொழுது boycott இல்லை. எல்லாவற்றிலும் Engage- பங்கெடுப்பது தான்.



அதாவது தமிழ் டயஸ்பொறாவையும், அரசாங்கத்தையும் நெருங்கச் செய்ய வேண்டும் என்று மேற்கு நாடுகளும் ஆர்வத்தோடு உள்ளன. இலங்கை அரசாங்கமும் ஆர்வத்தோடு உள்ளது. டயஸ்பொறாத் தமிழர்களில் ஒரு பகுதியினரும் ஆர்வத்தோடு உள்ளார்கள். இம் மூன்று தரப்புக்களுக்கும் வெவ்வேறு நிலையான நலன்கள் இருக்க முடியும். அவை சில சமயம் ஒரு புள்ளியில் சந்திக்கவும் முடியும்.

மேற்கு நாடுகளைப் பொறுத்தவரை இந்த அரசாங்கத்தைப் பாதுகாக்க வேண்டும். அதற்கு டயஸ்பொறா ஒரு தடையாக இருக்கக் கூடாது. எனவே டயஸ்பொறாவை அரசாங்கத்தோடு ஏதோ ஒரு விகிதமளவிற்கு நெருங்கச் செய்ய வேண்டும்.

அரசாங்கத்தைப் பொறுத்தவரை டயஸ்பொறாவை உடைக்க வேண்டும். *2009* மேக்குப் பின் தமிழ்த் தேசிய அரசியலின் கூர்முனை போலக் காணப்பட்ட ஒரு டயஸ்பொறாவை பல துண்டுகள் ஆக்க வேண்டும். சிங்கள, பௌத்த அரசுக்கு எதிராக அனைத்துலக அபிப்பிராயத்தை உருவாக்கி வரும் ஒரு டயஸ்பொறாவை பல துண்டுகளாக உடைத்து பலவீனப்படுத்த வேண்டும். எனவே அவர்களும் டயஸ்பொறாவோடு Engage—பண்ணத் தயார்?

டயஸ்பொறாவிலுள்ள ஒரு பகுதியினரைப் பொறுத்தவரை அவர்கள் வர்த்தக நோக்கத்தோடு வருகிறார்கள், அவர்கள் தமது வர்த்தக சாம்ராஜ்யத்தை தாயகத்திலும் விரிவாக்க விரும்புகிறார்கள். ஆனால் தாயகத்தின் சமூக, பொருளாதார விவகாரங்களில் பங்கெடுக்க முன்வரும் எல்லாருமே வர்த்தக இலக்குகளைக் கொண்டவர்கள் அல்ல. போரினால் பாதிக்கப்பட்ட தமது உறவுகளுக்கு எதையாவது செய்ய வேண்டும் என்று விரும்புவோரும் உண்டு. 'எனது பிள்ளை எல்லா வளங்களோடும் படித்துக் கொண்டிருக்கும் போது அதையே மற்றவர்களின் பிள்ளைகளும் அனுபவிக்க வேண்டும் என்று நான் ஆசைப்படுகிறேன்' என்று மேற்படி சந்திப்பில் பங்கு பற்றிய ஒருவர் சொன்னார்.

இவ்வாறு தாயகத்தில் முதலீடு செய்வதற்கோ அல்லது அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதற்கோ விரும்பும் டயஸ்பொறா தமிழர்களில் அநேகர் வடமாகாண சபையை அதிகம் விமர்சிக்கிறார்கள். வயதால் மிக இளைய வடமாகாண சபையானது தனக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைக் கூட முழுமையாக பிரயோகிக்க முடியாமல் திண்டாடுகிறது என்ற ஒரு குற்றச்சாட்டை அவர்கள் முன் வைக்கிறார்கள்.

இந்த இடத்தில் ஒரு விடயத்தைத் தெளிவு படுத்த வேண்டும். வடமாகாண சபையை விமர்சிப்பவர்கள் மூன்று நோக்கு நிலைகளிலிருந்து அதைச் செய்கிறார்கள். முதலாவது முதலமைச்சரின் தலைமைத்துவப் பண்பை குறை சொல்பவர்கள். இவர்கள் இந்த விமர்சனத்தை மாகாண சபையின் நிர்வாகச் செயற்பாடுகளில் காணப்படும் தவறுகளுக்கூடாக சுட்டிக் காட்டுகிறார்கள். இரண்டாவது வகை அரசாங்கத்தின் நோக்கு நிலையிலிருந்து வடமாகாண சபைமீது வைக்கப்படும் விமர்சனம். வட மாகாணசபைக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் போதாது என்பதோடு ஏற்கெனவே வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பிரயோகிப்பதற்கும் அரசாங்கம் தடையாகக் காணப்படுகின்றது என்று முதலமைச்சர் கூறுகிறார். குறிப்பாக முதலமைச்சர் நிதியத்தை உருவாக்குவதற்கு அரசாங்கம் இன்று வரையிலும் சம்மதிக்கவில்லை என்பதை அவர் சுட்டிக்காட்டுகிறார். இவ்வாறு வடமாகாண சபைக்குள்ள அதிகாரங்களைக் குறித்து விமர்சிக்கும் ஒரு முதலமைச்சரை மட்டந்தட்டுவதற்கு அரசாங்கத் தரப்பு கவர்ச்சியான ஓர் உத்தியைக் கையாள்கிறது. அது என்னவெனில் ஏற்கெனவே வழங்கப்பட்ட அதிகாரங்களையே அவரால் கையாளமுடியவில்லை என்பதுதான். அதாவது அவருக்கு நிர்வாகம் செய்யத்தெரியாது என்று காட்டப் பார்க்கிறார்கள். இது இரண்டாவது வகை.

மூன்றாவது வகை முதலமைச்சரை தனிப்பட்ட ரீதியில் முடக்கும் ஒரு வேலைத்திட்டம். தமிழ்த் தேசிய அரசியலில் மாற்று அரசியல் கட்சி ஒன்றுக்கு அவர் தலைமை தாங்கக் கூடும் என்று ஊகிக்கப்படுகிறது. எனவே அவரையும் அவருக்கு விசுவாசமான அமைச்சரையும் விமர்சிப்பதன் மூலம் ஒரு மாற்றுத் தலைமையாக அவர் மேலெழுவதை தடுப்பது. இதை அவருடைய சொந்தக் கட்சிக்காரர்களும் செய்கிறார்கள். அரசாங்கமும் செய்கிறது.

எனவே வடமாகாண சபையின் நிர்வாகத் திறன் குறித்த விமர்சனங்களை முன் வைக்கும் டயஸ்பொறாத் தமிழர்கள் குறிப்பாக முதலீட்டாளர்களும் அபிவிருத்தித் திட்டங்களை கையில் வைத்திருப்பவர்களும் வடமாகாண சபையை விமர்சிக்கும் போது மேற்சொன்ன விடயங்களை கவனத்தில் எடுக்க வேண்டும். தமிழ் மக்களின் கூட்டுரிமைகளைப் பாதுகாக்கும் விதத்தில் சுயநிர்ணய உரிமையின் பாற்பட்ட ஒரு சமஷ்டித் தீர்வை தமிழ் மக்கள் கோரி வருகிறார்கள். அப்படியொரு தீர்வையும் உள்ளடக்கி ஒரு புதிய யாப்பை உருவாக்குவதற்கு அரசாங்கம் இன்று வரையிலும் பின்னடிக்கிறது. இது தொடர்பில் அரசாங்கத்தினரின் மீது அழுத்தங்களைப் பிரயோகிப்பதற்கு மேற்கு நாடுகளும் தயாரில்லை. இத்தகையதோர் பின்னணியில் பலவீனமான, வயதால் மிக இளைய ஒரு மாகாண சபைக்கூடாக முதலீடுகளைச் செய்யலாம், அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்கலாம் என்று டயஸ்பொறாத் தமிழர்களை நோக்கி விடுக்கப்படும் அழைப்புக்களை அவர்கள் அதன் அரசியல் உள்நோக்கங்களுக்கூடாக விளங்கிக் கொள்ள வேண்டும்.

இப்பொழுது boycot பற்றி கதைப்பவர்கள் குறைவு. பெரும்பாலானவர்கள் engage பண்ணுவது பற்றியே கதைக்கிறார்கள். நவீன ராஜதந்திரம் எனப்படுவது ஒரு விதத்தில் engage—பண்ணுவது தான். ஆனால் எந்த நோக்கு நிலையிலிருந்து engage—பண்ணுவது என்பதுதான் இங்கு முக்கியமானது. அரசாங்கத்தின் நோக்கு நிலையிலிருந்தா?,அல்லது மேற்கு நாடுகளின் நோக்கு நிலையிலிருந்தா? அல்லது தமிழ்த் தேசிய நோக்கு நிலையிலிருந்தா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SELLING A HOME?

GET A FREE HOME EVALUATION DONE.



**KAMAL** AMIRTHALINGAM*

**JAY** PARAMANATHAN*

**ELANGO** EESWARAPATHAM*

TEAM | JAY
REAL ESTATE PROFESSIONALS

ROYAL LEPAGE IGNITE REALTY, BROKERAGE

www.teamjay.ca

DIRECT: 416.700.2222 | OFFICE: 416.282.3333 info@teamjay.ca

INDEPENDENTLY OWNED & OPERATED | SALES REPRESENTATIVES*

#BuyandSellWithTeamJay / #TeamJay

ROYAL LEPAGE 100 YEARS SINCE 1913

THE HOME HUB

CondoFinder.ca


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளையோருக்கான புதிய வெளிச்சம்

ராஜ்மோகன் செல்லையா



கனேடிய மண்ணில் வாழும் இளையோருக்கான புதிய வெளிச்சத்தின் செயலமர்வு மார்ச் மாதம் 31 ஆம் திகதி வெற்றிகரமான ஓர் ஆரம்பத்தைத் கொடுத்திருந்தது. 500 க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் மற்றும் இளையோர்கள் கலந்து கொண்டு சிறப்பித்த இந்த நிகழ்வு பேராசிரியர் கலாநிதி ஜெயந்தி பாலகிருஷ்ணன் தலைமையில் விதி முறைகளைத் தாண்டிய ஒரு சிறப்புக் கூட்டமாக நடைபெற்றது. இளைய தலைமுறையினர் எதிர்கொள்ளும் பிரச்சனைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து, அவர்களுக்கும், தாயக உறவுகளுக்குமான தொடர்பு நிலையின் அவசியத்தை வலியுறுத்தி நடைபெற்ற ஒரு வெற்றிகரமான செயலமர்வாக இந்த நிகழ்வு கருதப்படுகின்றது. கனேடிய தமிழரின் வரலாற்றில் முதன்முறையாக இளைய தலைமுறையினரின் உணர்வுகளை ஒன்றிணைத்து, அவற்றை அடையாளப்படுத்திய புதிய வெளிச்சத்தின் இந்த நிகழ்வு சாதனைத் தடங்கள் பலவற்றை பதிவு செய்து நிற்கின்றது.

நாங்கள் யார்? பண்பாடு என்றால் என்ன? பண்பாடு என்பது எப்படி வரையறுக்கப்படுகின்றது? நாம் வளரும் சூழல் எமக்கு ஏற்றதாக உள்ளதா? இல்லாவிடில் அதை எவ்வாறு ஏற்றுக்கொள்வது? எதைத் தவிர்ப்பது? எதை ஏற்பது? எங்கே செல்லுகின்றோம்? எவ்வளவு தூரம் செல்லப் போகின்றோம். தமிழ் அறிவு மூலம் எதை சாதிக்க முனைகின்றோம்? இந்தப் பிரச்சனை எனக்கு மட்டும்தானா அல்லது எல்லோருக்கும் பொதுவானதா? இப்படி தமக்குள்ளேயே பேசிக்கொண்டு குழம்பி இருக்கும் எமது இளைய தலைமுறையினரின் கேள்விகளுக்கு விடை காண்பது என்பது இலகுவான விடயம் அல்ல. ஆனால், இந்த விடயத்தை உளவியல் ரீதியாக சிந்தனை செய்து, தனது ஆணித்தரமான பேச்சாற்றல் மூலம் சிறப்புடன் உரையாற்றி இருந்தார் மீகுருவியின் பிரதம பேச்சாளர் பேராசிரியர் கலாநிதி ஜெயந்தி பாலகிருஷ்ணன். சிறந்த உதாரணங்கள் பலவற்றுடன் கூடிய அவரது பேச்சின் மூலம் கூட்டத்தில் இருந்த இளையோர்கள் தமது சிந்தனைகளை எல்லாம் ஒருமுகப்படுத்தி அவரது பேச்சில் தோன்றிய ஒவ்வொரு வரிகளின் வலிகளையும் உணர்ந்து பின்னர் அதனுடாகப் பயணித்து மனதில் உறுதி கொண்டதை அவதானிக்க முடிந்தது.

சமூகத்திற்கும், இளைய தலைமுறையினருக்கும் இடையில் காணப்படும் விரிசல்கள், அதற்கான அடிப்படைக் காரணங்கள், மொழியின் தேவை பற்றிய கேள்விக்குறிகள் அதனுடன் தொடர்புபட்ட குழப்பங்கள் மற்றும் நெருடல்கள், மாறுபட்ட பண்பாட்டுச் சூழலை எதிர்கொள்ளும் நிலைப்பாடு போன்ற பல விடயங்கள் விவாதப் பொருளாகி அங்கு தெளிவு நிலை காணப்பட்டது குறிப்பிடத்தக்கது. பெற்றோர்கள் தங்கள் எண்ணங்களையும், வழிமுறைகளையும் பிள்ளைகள் மீது வலுக்கட்டாயமாகத் திணிப்பதுதான் இளைய தலைமுறையினரின் பிரச்சனைகளின் அடிப்படைக் காரணம் என்ற பேராசிரியர் கலாநிதி ஜெயந்தி பாலகிருஷ்ணன் தன்னுடைய வாழ்க்கைப் பயணத்தில் நேரடியாக சந்தித்துக் கொண்ட பல அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டார். 2009 ஆம் ஆண்டுக்குப்




பின்னர் விடுபட்டுப் போன இளைய சமுதாயத்தினரின் தாயகத் தொடர்பு நிலையின் அவசியத்தைப் பற்றியும், எமக்கு முன்னால் மனதில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள கடமைகளையும் தெளிவுபடுத்தினார். அவரது வெளிப்படையான பேச்சின் மூலம் கவரப்பட்ட மாணவர்கள் தமக்கும் தாயகத்திற்குமிடையிலான உறவுப்பாலத்தின் அடிப்படைகளையும் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய திட்டங்களின் அவசியத்தையும் அறிந்து கொண்டார்கள்.

எண்ணற்ற பரிமாணங்களைக் கொண்டிருக்கும் வாழ்க்கையின் யதார்த்தங்களை சிந்திப்பதற்கு எவரும் விரும்புவதில்லை. இதனால் வாழ்க்கையின் மீது பொய்யான கனவுகளைச் சுமத்தி யதார்த்தங்களில் இருந்து தப்பித்து விடுகின்றோம். இது ஒரு எல்லை வரையிலுமே எம்மைக் கொண்டு செல்லும். பெற்றோர் — பிள்ளைகளின் உறவுகளில் மனத்தாங்கல் ஏற்படும் போது, பிள்ளைகள் பெற்றோர்களின் கண்காணிப்பிலிருந்து விலகிச் செல்கின்றனர். பிரச்சனைகளை எதிர்கொள்ளத் தயங்கி நிற்கும் இயல்பு மனித பலவீனங்களில் மிகவும் முக்கியமானது. புறத்திற்கு ஒரு வாழ்வும் அகத்திற்கு ஒரு வாழ்வுமாகக் கூறுபோட்ட நிலையில் பல துண்டுகளாக வாழும் எமது புலம்பெயர் தேசத்தின் வாழ்க்கை முறை மாற்றப்படவேண்டும். அதற்காக நாம் தொடர்ந்து வழி வந்த நமது சிந்தனைகளுடன் உலகின் எந்த ஒரு பகுதியிலும் அரும்பியுள்ள புதிய சிந்தனைகளையும் தயக்கமின்றித் தழுவிக்கொள்ள வேண்டும். இதன் மூலம் சமுதாயம் — பெற்றோர் — பிள்ளைகளின் உறவு மேம்படுத்தப்பட வேண்டும்.

கணத்திற்குக் கணம் மாறிக் கொண்டிருக்கும் இன்றைய உலகில் மனங்கள் சார்ந்த நுட்பமான புரிதல் மட்டுமே தேவைப்படுகின்றது. இதுதான் புதிய வெளிச்சத்தின் ஆரம்பம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்தியும் தொலையும் கனவுகளும்




ஆடுகள் தங்களை ஆடுகள் என்று உணரும் போது மந்தையில் இருந்து விலகிக் கொள்கின்றன என்பது கலீல் ஜிப்ரான் அவர்களின் புகழ் பெற்ற வாக்கியம். தமிழ் சூழலில் அண்மை நாட்களாக நடைபெற்று வரும் நிகழ்வுகளை அவதானிக்கும் போது தவிர்க்க முடியாமல் இந்த வாக்கியம் நினைவிற்கு வந்து தொலைக்கின்றது.

ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்கு ஜீ.எஸ்.பி வரிச்சலுகையினை வழங்கக் கூடாது என்பதை கோரும் பிரேரணை கடந்த மாதம் 27ம் திகதி ஐரோப்பிய ஒன்றியத்தில் தோல்வி அடைந்துள்ளது.

இலங்கைக்கு எதிரான பிரேரணைக்கு எதிராக 436 பேரும் ஆதரவாக 119 பேரும் வாக்களித்திருந்தனர்.

இலங்கையின் மனித உரிமை நிலைமைகளின் மாற்றம் ஏற்படவில்லை எனக் கருதும் ஐரோப்பிய ஒன்றிய பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜீ.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகையினை மீளவும் இலங்கைக்கு வழங்கக் கூடாது என்பதை வலியுறுத்தி வருகின்றனர்.

கடந்த மாதம் 27ம் திகதி நடைபெற்ற வாக்கெடுப்பிற்கு முன்பாக இலங்கையின் பிரதி வெளிவிவகார அமைச்சர் ஹர்ஷ டி சில்வா தலைமையிலான குழு பிரசல்ஸிற்கு விஜயம் மேற்கொண்டிருந்தது.

இந்த விஜயத்தின் முக்கிய நோக்கம் இலங்கைக்கு எதிரான நிலைப்பாட்டை கொண்டுள்ள ஐரோப்பிய ஒன்றிய பாராளுமன்ற உறுப்பினர்களை சந்தித்து சாமாதானப்படுத்துவதாகவே அமைந்திருந்தது.

இலங்கை அரசாங்கத்தின் இந்த குழுவில் சுனில் ஹந்துன்நெட்டி , வாசுதேவ நாணயக்கார ஆகிய கடும் போக்குடைய அரசாங்க தரப்பு உறுப்பினர்களுடன் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தமிழ் தேசிய முகமாக தன்னை அடையாளப்படுத்தி வரும் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் அவர்களும் இடம்பெற்றிருந்தார்.

அதே சமகாலத்தில் நோர்வே மற்றும் சுவிஸ் அரசாங்கங்களின் அனுசரணையுடன் அரச சார்பற்ற நிறுவனம் ஒன்று இலங்கையின் அபிவிருத்தி திட்டங்கள் குறித்து ஆராயும் நோக்கில் ஏற்பாடு செய்திருந்த கருத்தரங்கில் புலம்பெயர் தமிழர் அமைப்புகளின் பிரதிநிதிகள் சிலர் கலந்து கொண்டுள்ளனர்.

புலம் பெயர் தமிழ் மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் அமைப்புகள் சிலவற்றின் பிரதிநிதிகள் இலங்கை அரசாங்கத் தரப்புடன் 'அபிவிருத்தி' குறித்து பேச்சுவார்த்தை நடத்துகின்றார்கள்.

இலங்கைக்கு பாவவிமோசனம் பெற்று தரும் நோக்கில் ஐரோப்பிய ஒன்றிய பாராளுமன்ற உறுப்பினர்களை தமிழ் மக்களினால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதி ஒருவர் சந்திக்கின்றார்.

இந்த இரு நிகழ்வுகளும் ஒரே புள்ளியில் சந்திக்கின்றமையும் அந்த சந்திப்பு தமிழ் மக்களின் நீண்டகால அரசியல் அபிலாசைகளையும் உரிமைகளையும் வென்றெடுப்பதை தடுக்கும் நோக்கில் திட்டமிடப்பட்ட இராஜதந்திர நகர்வின் மையம் கொண்டுள்ளது என்பதை புரிந்து கொள்வதும் அவ்வளவு சிரமமானதல்ல.

இலங்கையின் வடக்கு கிழக்கில் வாழ்வாதார திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு அங்குள்ள மக்களின் இழந்த வாழ்வை மீளக் கட்டியெழுப்ப வேண்டும் என்ற அடிப்படையினை யாரும் நிராகரிக்க முடியாது.

யுத்தம் முடிவடைந்த பின்னர் புலம்பெயர் தேசங்களில் இருந்து தாயகத்திற்கு சென்று பல்வேறு தன்னார்வ அமைப்புகள், பாடசாலை நலன்புரி சங்கங்கள், ஊர்ச் சங்கங்கள் என பல்வேறு அமைப்புகளும் தனி நபர்களும் தம்மாலான உதவித் திட்டங்களை அங்கு மேற்கொண்டு வருகின்றனர்.

இலங்கையின் வடக்கு கிழக்கில் புலம்பெயர் தமிழர்களின் பங்குபற்றுதலுடன்; ஏராளமான வேலைத் திட்டங்கள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டும் வருகின்றன.

இந்த நிலையில் புலம்பெயர் தமிழ் அமைப்புகளையும் தொழில் முனைவோரையும் வலிந்து அழைத்து அபிவிருத்தி பணிகளை மேற்கொள்ளுங்கள் என வேண்டி நிற்கும் இலங்கை அரசாங்கத்தின் இந்த திடீர் கரிசனை குறித்து நாம் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

இலங்கையின் தமிழ் மக்களின் உரிமைக்காக கடந்த மூன்று தசாப்தங்களாக தொடர்ந்த ஆயுதப் போராட்டம் 2009ம் ஆண்டு மௌனிக்கச் செய்யப்பட்டுள்ளது.

ஆனால் யுத்தத்திற்கான காரணம் இன்னமும் தீர்வு காணப்படாமலேயே தான் இருக்கின்றது. தமிழ் மக்களுக்கான குறைந்த பட்ச அதிகார பரவலாக்கத்தை மேற்கொள்வதற்கு கூட இந்த அரசாங்கம்

**தமிழர்களின் ஒன்று பட்ட பலத்தை இல்லாதொழித்து தமிழர் தரப்பை பிரித்தாள்வது.**

தயாரில்லை என்பதை இலங்கை அரசாங்கத்தின் நல்லிணக்கத்திற்கு பொறுப்பான அமைச்சர் மனோ கணேசன் இங்கிலாந்தில் தெளிவாக தெரிவித்திருக்கின்றார்.

தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்ற வடக்கு கிழக்கு இணைப்போ, சமஸ்டி முறையிலான அதிகாரப் பரவலாக்கமோ, மனித உரிமை மீறல்கள் தொடர்பான சர்வதேச விசாரணைக்கான வாய்ப்போ இலங்கை அரசாங்கத்தால் ஒரு போதும் வழங்கப்பட மாட்டாது என்றும் இந்த இணக்கப்பாட்டிற்கு கூட்டமைப்பிற்கும் தெளிவாக தெரியும் அதனை அவர்கள் தமிழ் மக்களிடம் இருந்து மறைப்பது அந்த மக்களுக்கு செய்யும் துரோகம் என்றும் மனோ கணேசன் குறிப்பிட்டிருக் கின்றார்.

இந்த பின்னணியில் இலங்கையின் அழைப்பில் அங்கு சென்று வந்த புலம்பெயர் கனவான்கள் இலங்கை அரசாங்கத்துடன் புலம்பெயர் சமூகம் தொடர்புகளை ஏற்படுத்த வேண்டியது அவசியம் என்று பாடம் நடத்தத் தொடங்கியிருக்கின்றார்கள்.

இலங்கையில் நடைபெற்ற யுத்தத்தில கொல்லப்பட்ட பல இலட்சக் கணக்கான தமிழர்களின் கல்லறைகளை ஏறி மிதித்த வாறும், கணவனை இழந்து விதவை களாக்கப்பட்ட தாய்மாரின் கண்ணீர் வழியும் முகங்களை முறைத்துப் பார்த்தவாறும், காணமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளின் நிலை குறித்து போராடும் மக்களின் உணர்வுகளின் மீது காறி உமிழ்ந்தவாறும் நாம் இலங்கை அரசாங்கத்தோடு அபிவிருத்திக்காக கைகுலுக்க வேண்டும் என்று அவர்கள் எங்களிடம் கோருகின்றார்கள்.

**மார்ச் மாதம் ஜெனீவாவில் இலங்கை அரசாங்கத்தின் மனித உரிமை மீறல்களுக்கு எதிராக குரல் எழுப்பியதாக சொல்லும் கனேடிய தமிழர் பேரவை ஏப்பிரல் மாதம் இலங்கை அரசாங்கத்தின் வெளிவிவாகர அமைச்சரோடு கைகுலுக்குவது எவ்வாறான இராஜதந்திரம் என்பது புரிபடவே இல்லை.**

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய நிவாரணங்கள் வழங்கப்படாமல் இருக்கின்ற நிலையில் அபிவிருத்தி என்ற மையைப் பூசி காயங்களை மறைத்துவிடும் முயற்சிக்கு துணைவருமாறு அவர்கள் புலம்பெயர் சமூகத்தை அழைக்கின்றார்கள்.

நடந்தது நடத்து விட்டது இனி நடக்க வேண்டியதை பார்க்கலாம் நடந்ததையே நினைத்துக் கொண்டிருந்து என்ன புடுங்கப் போகின்றீர்கள் என்று பதில் கேள்வி கேட்டு இது போன்ற விசனங்களையும் விமர்சனங்களையும் அவர்கள் கடந்து சென்று விடுவார்கள். காரணம் அவர்கள் செல்வாக்கு மிக்கவர்கள், செல்வந்தர்கள், அவர்கள் சொன்னால் ஆமாம் சாமி போட, அவர்களுக்கு பின்னால் அலையும் கூட்டம் என என எல்லாம் பெற்றவர்கள் எல்லாம் வல்லவர்கள்.

இந்த ஆபத்தை பரிந்து கொள்ளாமல் இருப்பது அல்லது அது குறித்து ஒரு சிறு எதிர்வினையினை கூட வெளிப்படையாக ஆற்ற முடியாமல் முடங்கிப் கிடப்பது தான் எமது மிகப் பெரிய சோகம் அதுவே எமது பலவீனமும் கூட.

இலங்கையில் இப்போது எல்லாம் சுமூகமாகிவிட்டது என்ற தோற்றப்பாட்டை சர்வதேச சமூகத்தின் மத்தியில் ஏற்படுத்த வேண்டிய தேவையை இலங்கை அரசாங்கம் கொண்டுள்ளது. அதற்காகவே அவர்கள் புலம்பெயர் சமூகத்தை நோக்கி நேசக்கரம் நீட்டுகின்றார்கள்.

இலங்கையில் இனங்களுக்கிடையில் ஐக்கியம் தோன்றி விட்டது நடந்தவற்றை மறந்து தமிழர்கள் அரசாங்கத்தோடு இணைந்து செயல்பட தொடங்கிவிட்டார்கள் என்பதை உலகத்திற்கு அறிவிப்பதே இலங்கை அரசாங்கத்தின் பிரதான நோக்கம்.


இலங்கையில் வாழும் தமிழ் மக்களால் அதி கூடிய விருப்பு வாக்குகளை பெற்ற நாடாளுமன்ற உறுப்பினர் அரசாங்கத்திற்கு ஆதரவாக ஐரோப்பிய ஒன்றியத்திடம் ஜீ.எஸ்.பி பிச்சை கேட்கின்றார்.

மறுபுறும் சர்வதேச ரீதியில் இலங்கையின் மனித உரிமை மீறலகள் குறித்த சர்வதேச விசாரணையை கோரி வந்த கனேடிய தமிழர் பேரவையின் முக்கிய பிரமுகரும் கடந்த காலங்களில் மாவீரர் தினத்தை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர உழைத்தவருமானவர் கொழும்பில் வெளிவிவகார அமைச்சரையும் முக்கிய அரசியல் தலைவர்களையும் சந்தித்து அபிவிருத்தி குறித்து பேசுகின்றார்.

இவை எல்லாமே இலங்கை அரசாங்கத்தை சர்வதேச அழுத்தங்களில் இருந்து காப்பாற்றுவதற்காக மேடை ஏற்றப்படும் நாடகங்கள். ஆனால் அவற்றின் கதாபாத்திரங்களாக தமிழர்கள் நடிக்க வைக்கப்படுகின்றார்கள்.

இலங்கை அரசாங்கத்தின் மீதான சர்வதேச அழுத்தங்கள் குறைவடையும் போது ஜீ.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகை போன்று மேலதிகமான பல வெளிநாட்டு வரப்பிரசாதங்களும், முதலீட்டு வாய்ப்புகளும் அதிகரிக்கும் அதன் மூலமாக இலங்கை அரசாங்கம் தன்னை வலுவானதான மாற்றிக் கொள்ளும். தேற்கில் புதிய தொழில் முயற்சிகளும் அபிவிருத்திகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**இலங்கையில் இப்போது எல்லாம் சுமூகமாகிவிட்டது என்ற தோற்றப்பாட்டை சர்வதேச சமூகத்தின் மத்தியில் ஏற்படுத்த வேண்டிய தேவையை இலங்கை அரசாங்கம் கொண்டுள்ளது. அதற்காகவே அவர்கள் புலம்பெயர் சமூகத்தை நோக்கி நேசக்கரம் நீட்டுகின்றார்கள்.**



**ரமணன் சந்திரசேகரமூர்த்தி**

பாரிய அளவில் மேற்கொள்ளப்படும். வடக்கும் கிழக்கும் வழமைபோலவே தொடர்ந்தும் கவனிப்பாரற்று கிடக்கும்.

இலங்கையின் வடக்கு கிழக்கில் போடப்பட்டுள்ள கம்பள வீதிகளில் வழுக்கிக் கொண்டு சென்று வரும் வெளிநாட்டு தமிழர்களுக்கு வடக்கு கிழக்கில் பாரிய அபிவிருத்திகளை அரசாங்கம் மேற்கொண்டிருப்பதாகவே தென்படும்.

ஆனால் அபிவிருத்தி என்பது வெறும் தார் வீதிகளில் இல்லை என்பதும் அது ஒட்டு மொத்தமான ஒரு சமூதாய வளர்ச்சியாக இருக்க வேண்டும் என்ற உண்மை பாவம் அவர்களுக்கு புரிவதே இல்லை. 2009ற்கு பின்னர் வடக்கு கிழக்கிலும் நாட்டின் ஏனைய பாகங்களிலும் ஏற்படுத்தப்பட்டுள்ள அபிவிருத்திகளையும் வேறுபாடுகளையும் உற்று நோக்கி அவானித்தால் இந்த உண்மை தெளிவாக புலப்படும்.

இலங்கை அரசாங்கம் தன் மீதுள்ள பாவக் கறைகளை கழுவி தன்னை சுத்திகரிப்பதற்கு கறைதுடைப்பான்களாக (விளக்குமாறு) தமழர்களை பயன்படுத்துகின்றது என்ற உண்மையை புரிந்து கொள்ளாமால் அங்கே எல்லாம் மாறிவிட்டது, அரசாங்கம் தரும் காணிகளில் நாங்கள் தொழிற்சாலை அமைத்து அங்குள்ளவர்களுக்கு வேலைவாய்பினையும் வாழ்வாதாரத்தையும்; வழங்குவோம் என்று பேசுவது மற்றுமொரு முள்ளிவாய்காலை நோக்கிய நகர்வாகவே கருதப்பட வேண்டும்.

இந்த அபிவிருத்திக்காகவா இத்தனை உயிர்களையும் உடைமைகளையும் தமிழினம் இழந்தது?

கடந்த 40 ஆண்டுகளாக தொடர்ந்த யுத்தத்தினால் பல்வேறு இழப்புகளை சந்தித்த ஒரு இனம் இனி வரும் நாட்களில் ஒரு போதும் மீண்டெழவே முடியாத அளவிற்கு மிக மோசமான தாக்கங்களை ஏற்படுத்தும் முயற்சிகளை இலங்கை அரசாங்கம் தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றது.

அதில் மிக முக்கியமானது தமிழர்களின் ஒன்று பட்ட பலத்தை இலலாதொழித்து தமிழர் தரப்பை பிரித்தாள்வது.

துரதிஸ்டவசமாக இந்த நோக்கத்தை இலகுவாக்கும் செயல்பாடுகளை தான் நமது தலைவர்கள் தெரிந்தோ தெரியாமலோ செய்து கொண்டிருக்கின்றார்கள்.

மார்ச் மாதம் ஜெனீவாவில் இலங்கை அரசாங்கத்தின் மனித

**இலங்கை அரசாங்கத்தின் 'அபிவிருத்தி' என்ற பசப்பு வார்த்தைகளில் எமது உரிமைகள் தொலைந்து போவதை ஒரு போதும் அனுமதிக்க முடியாது.**

உரிமை மீறல்களுக்கு எதிராக குரல் எழுப்பியதாக சொல்லும் கனேடிய தமிழர் பேரவை ஏப்பிரல் மாதம் இலங்கை அரசாங்கத்தின் வெளிவிவாகர அமைச்சரோடு கைகுலுக்குவது எவ்வாறான இராஜதந்திரம் என்பது புரிபடவே இல்லை.

சர்வதேச ரீதியில் தமிழ் மக்கள் மீது இன அழிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதை தனது படைப்புகள் மூலம் கொண்டு சென்ற மாயா எனப்படும் மாதங்கள் அருள்பிரகாசத்தை அழைத்து கௌரவித்து வெள்ளி விழா கொண்டாடிய கனேடிய தமிழர் வர்த்தக சம்மேளனமும் தனது பிரதிநிதிகளை இலங்கைக்கு அனுப்பி இலங்கை அரசாங்கத்தை பாதுகாக்கும் நகர்வுகளுக்கு துணைபோய் நிற்கின்றது.

கனேடிய தமிழர்களின் வர்த்த முயற்சிகளை முன்னேற்றுவதற்கென உருவாக்கப்பட்ட ஒரு அமைப்பு எவ்வாறு இலங்கை அரசாங்கத்தின் அரசியல் சூழலில் சிக்கிக் கொண்டது என்பதும் ஆராயப்பட வேண்டியுள்ளது.

யுத்தம் முடிந்து போயிருக்கலாம், யுத்தத்தினால் சேதமான கட்டிடங்கள் மீளக் கட்டி முடிக்கப்பட்டிருக்கலாம் ஆனால் யுத்தம் கொண்டு சென்ற உயிர்களை யாராலும் திருப்பி தர முடியாது, யுத்தம் களவாடிப் போன ஒரு தலைமுறையின் இளைமையை யாராலும் வாங்கிக் கொடுக்க முடியாது, போராடப் புறப்பட்டு வாழ்வை தொலைத்துவிட்டு முன்னாள் போராளிகள் என்ற அடை மொழிகளோடு நாளாந்தம் அல்லலும் எமது சகோதர சகோதரிகளுக்கான தொலைந்து போன வாழ்வினை புன்னகைக்கும் உங்கள் முகங்களோடு விரியும் முகப்புத்தகப் புகைப்படங்களால் திருப்பிக் கொடுக்க முடியாது.

யுத்தத்தினால் தமது உறவுகளை இழந்து தவிக்கும் இலட்சக்கணக்கான மனித மனங்களுக்கு அபிவிருத்தி என்ற மூலாம் பூசிய சலுகைகள் மூலம் ஆறுதல் அளிக்க முடியாது.

ஒரு இனம் தனது விடிவிற்காக நடத்திய தியாக வேள்விக்கு நியாயம் சேர்ப்பதற்கு ஒவ்வொரு தமிழனுக்கும் தார்மீகக் கடமை உண்டு. போராடி மடிந்தவர்களும், யுத்தின் மடியில் வீழ்ந்தழிந்து போனவர்களும் அர்ப்பணித்த உயிர்களின் மதிப்பினை உங்களால் மதிப்பீடு செய்ய முடியாது.

எமது மக்களுக்கான வாழ்வாதாரங்களும் மீண்டும் வாழ்வதற்கான ஒத்துழைப்புகளும் ஏற்படுத்தப்பட வேண்டியது எவ்வளவு தூரம் அவசியமானதோ அதேபோன்று இத்தனை வருடகால துன்பியல் வாழ்வினில் நாம் சந்தித்த அத்தனை அவலங்களுக்குமான நியாயமான தீர்வு பெற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்பதும் அவசியமானது தான்.

இலங்கை அரசாங்கத்தின் 'அபிவிருத்தி' என்ற பசப்பு வார்த்தைகளில் எமது உரிமைகள் தொலைந்து போவதை ஒரு போதும் அனுமதிக்க முடியாது.

தமது தரப்பில் உள்ள யுத்தக் குற்றவாளிகளையும் தமிழ் மக்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்களை மேற்கொண்டவர்களையும் சர்வதேசத்திடம் இருந்து காப்பாற்றுவதற்கு சிங்கள தேசம் ஒன்று பட்டு நிற்கின்ற நிலையினை தமிழர் தலைமைகள் தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும்.

தமிழர்களுக்கு குறைந்த பட்ச அதிகாரங்களை கூட வழங்க தயராக இல்லாத அரசாங்கத்தை நம்பி அவர்களின் மூலமாக அவர்கள் தரும் காணிகளில் புலம் பெயர் தமிழர்கள் தொழிற்சாலைகளை அமைப்பதும் முதலீடுகளை மேற்கொள்வதும் பாதுகாப்பானதா என்பதை நாம் சிந்தித்து பார்க்க வேண்டும்.

இந்த ஆபத்தான இலக்கினை நோக்கி தமிழர்களை பயணப்பட வைப்பதற்கு முயற்சிகளை மேற்கொள்பவர்கள் இந்த ஆபத்தை உண்மையில் உணராமல் இருக்கின்றார்களா ? அல்லது அதை தாண்டிய ஏதாவது அனுகூலங்களை அவர்கள் பெற முயல்கின்றார்களா என்பதையும் நாம் ஆராய வேண்டும்.

சர்வதேச அழுத்தங்கள் அதிகரித்து காணப்படும் இன்றைய நிலையில் கூட தமிழ் மக்களுக்கான அடிப்படை

**நாம் மீண்டும் சர்வதேச சமூகததின் ஒத்துழைப்பை பெற முடியாத சூனிய வெளிக்குள் தள்ளப்பட்டு விடுவோம்.**

உரிமைகளை வழங்குவதற்கு தயாரில்லாத இலங்கை அரசாங்கம் தமிழர் தரப்பின் உதவியுடன் சர்வதேச அழுத்தங்களை நீர்த்துப் போகச் செய்யும் முயற்சியில் வெற்றி பெற்றால் எவ்வாறான விளைவுகளை தமிழினம் எதிர் கொள்ளும் என்பதையும் நாம் சந்தித்துப் பார்க்க வேண்டும்.

அவ்வாறான நிலை ஏற்படுமானால் தமிழ் மக்களின் பிரச்சினைகள் ஐநா மனித உரமை பேரவை , ஐரோப்பிய ஒன்றியம் போன்றவற்றில் இருந்து அகற்றப்படும்.


இது ஒட்டு மொத்த தமிழர் நலன்களுக்கும் பாதகாமன பல விளைவுகளை ஏற்படுத்தும் என்பதையும் அதன் பின்னர் நாம் மீண்டும் சர்வதேச சமூகததின் ஒத்துழைப்பை பெற முடியாத சூனிய வெளிக்குள் தள்ளப்பட்டு விடுவோம் என்பதையும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

தாயகத்திலும் புலம்பெயர் தேசத்திலும் தமிழர்கள் ஒற்றுமையோடு எழுந்து நின்றால் மட்டுமே இந்த சவால்களை தமிழினம் எதிர் கொள்ள முடியும்.

தட்டினால் மட்டும் தான் கதவுகள் திறக்கும், கதவுகள் திறந்தால் தான் தமிழர்களுக்கு நிலையான நிம்மதியான வாழ்வு மலரும்;.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடாவின் குடிவரவு மாற்றங்கள்






மெனகா சத்தியமூர்த்தி

## வாழ்க்கைத் துணையைக் கனடாவிற்கு வரவழைக்கும் நிபந்தனைகளைத் தளர்த்தியது லிபரல் அரசு

வாழ்க்கைத் துணையைக் கனடாவிற்கு வரவழைத்ததன் (Spousal sponsorship) பின்னர், வரவழைக்கப்பட்டவர் கனடாவில் நிரந்தர வதிவுரிமை பெற இரண்டு வருடங்கள் இணைந்து வாழவேண்டும் என்ற நிபந்தனையை லிபரல் அரசு சென்ற வாரம் இரத்துச் செய்துள்ளது.

கனடாவின் குடிவரவு அமைச்சர் அஹமட் ஹுசேன் அவர்களினால் சென்ற வாரம் வெளியிடப்பட்ட இவ்வறிவித்தல், குடிவரவுச் செயற்பாட்டாளர்களினால் பெரிதும் பாராட்டப்பட்டுள்ளது. ஆயினும் கனடாவிற்குள் நுழைவதற்காக நடாத்தப்படும் போலித் திருமணங்களைத் (marriage frauds) தடுத்து நிறுத்தும் முகமாக, முன்னைய பழமைவாத அரசினால் 2012 ஆம் ஆண்டில் அறிமுகம் செய்யப்பட்ட இந்த விதிமுறை தளர்த்தப்பட்டதன் காரணமாக மீண்டும் போலித் திருமணங்கள் பல தலைதூக்கலாம் என்ற கருத்தும் விமர்சகர்களால் முன்வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த குடிவரவு அமைச்சர் "நிபந்தனைக்குட்பட்ட நிரந்தர வதிவுரிமை" (Conditional permanent residency) என அழைக்கப்படும் இந்த விதிமுறை காரணமாக, குடும்ப வன்முறை மற்றும் துஷ்பிரயோகம் என்பன உள்ள திருமண பந்தங்களில் உள்ளவர்கள், 2 வருட காலத்திற்கு அவற்றை விட்டு வெளிவர இயலாத நிலைகளில் இருக்க நிர்ப்பந்திக்கப்படுவார்கள். ஆதலால் இவ்விதி தளர்த்தப்பட்ட அதேவேளை, போலித் திருமணங்களைக் கண்டுபிடிப்பதில் லிபரல் அரசு இருமடங்கு கவனம் செலுத்தும் எனவும் அவர் கூறினார்.

மேலும் முன்னரங்கக் குடிவரவு அலுவலர்கள் போலித் திருமணங்களைக் கண்டுபிடிப்பது தொடர்பாக மிகக் கடுமையான பரிசீலனை முறைகளை மேற்கொள்வார்கள் எனவும், ஒருதடவை வாழ்க்கைத்துணையை வரவழைக்க அனுசரணை (Sponsor) செய்தவர்கள், மீண்டும் ஒரு தடவை அவ்வாறு செய்ய 5 வருடங்கள் காத்திருக்க வேண்டும் என்ற விதியில் எதுவித மாற்றமும் செய்யப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

## அகதிக் கோரிக்கைகள் துரிதமாகப் பரிசீலிக்கப்படும் - குடிவரவு அமைச்சர்

அகதிக்கோரிக்கைகளைப் பரிசீலிக்க எடுக்கும் நீண்டகால அவகாசம் தொடர்பான பிரச்சினை 2019 ஆம் ஆண்டளவில் தீர்க்கப்பட்டுவிடும் எனக் கனேடியக் குடிவரவு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கனடாவிற்குள் அகதிகளை தனியார் அனுசரணை (privately-sponsoredrefugees)மூலம் அழைத்துவரும் நிறுவனங்கள், அகதிக் கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட எடுக்கும் நீண்ட கால அவகாசம் தொடர்பாகக் கவலை கொண்டுள்ளதாக அண்மையில் நடாத்தப்பட்ட கருத்துக் கணிப்பு ஒன்று தெரிவிக்கின்றது.

எனினும் இந்த தாமதம் முன்னைய அரசின் காலத்திலிருந்தே தொடர்வதாகவும், பரிசிலனைக் காலம் 12 மாதங்களுக்குக் குறைவானதாக ஆக்கப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## பெற்றோர், பேரன் பேத்தி ஆகியோரை வரவழைக்கும் திட்டம் - குலுக்கல் முறையில் 10,000 விண்ணப்பதாரிகள் தெரிவு

தமது பெற்றோர் அல்லது பேரன் பேத்தி ஆகியோரை கனடாவிற்கு வரவழைக்க விரும்புவோரைத் (Sponsors) தெரிவு செய்ய கனேடியக் குடிவரவுத் திணைக்களத்தால் இவ்வருட ஆரம்பத்தில் அறிமுகம் செய்யப்பட்ட குலுக்கல் முறைமூலம் 10,000 இறுதி விண்ணப்ப தாரிகள் (Sponsors) தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் தமது பூரணமான விண்ணப்பத்தையும், ஆவணச் சான்றுகளையும் சமர்ப்பிப்பதற்கு 90 நாட்கள் கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது.

கனேடியக் குடிவரவுத் திணைக்களத் தரவுகளின்படி, இந்த 10,000 விண்ணப்பதாரிகளும் (sponsos) ஏறத்தாள 17,000 பேரைக் கனடாவிற்கு வரவழைப்பதற்கு விண்ணப்பித்துள்ளனர். இக்குலுக்கல் முறை மூலம் தமது பெற்றோர் அல்லது பேரன் பேத்தி ஆகியோரை கனடாவிற்கு வரவழைக்க 95,000 பேர் விருப்பந் தெரிவித்திருந்தனர். இவர்களில் இருந்து 10,000 பேர் மட்டுமே எழுமாற்றாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

விருப்பந் தெரிவித்திருந்த ஒவ்வொருவரையும் கனேடியக் குடிவரவுத்திணைக்களம் தனித்தனியே தொடர்பு கொண்டு அவர்களது விண்ணப்பம் தெரிவு செய்யப் பட்டதையோ அல்லது நிராகரிக்கப் பட்டதையோ அறிவித்துள்ளதுடன் , இத்தடவை தமது விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டவர்கள் 2018 ஆம் ஆண்டு மீண்டும் விண்ணப்பிக்கலாம் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

## குடியுரிமைக்கான விதிகளை கனடா தளர்த்தும்

பிரதமர் ஜஸ்டின் ரூடோவின் அரசின் கீழ் கனடா தனது குடியுரிமையைப் பெற்றுக்கொள்வது தொடர்பான சட்டங்களை மேலும் தளர்த்தியுள்ளது. இதேவேளை ஏனைய மேற்கத்திய நாடுகள் தத்தமது நாடுகளில் குடியுரிமையைப் பெற்றுக்கொள்வதற்கான சட்டங்களை மென்மேலும் இறுக்கி வருகின்றமையையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

ஆஸ்திரேலியப் பிரதமர் Malcolm Turnbull அந்நாட்டின் குடிவரவு மற்றும் குடியுரிமை வலையமைப்பில் அண்மையில் பாரிய மாற்றங்களை அறிமுகப்படுத்தி இருந்தார். மேலும் ஆங்கில மொழித் தேர்ச்சிப் பரீட்சை மற்றும் ஆஸ்திரேலியா நாடு தொடர்பான அறிவுப் பரீட்சை என்பன மேலும் தரமும் உயர்த்தப்படும் எனவும் அறிவித்திருந்தார்.

கனடாவில், முன்னைய பழமைவாத அரசினால் அறிமுகம் செய்யப்பட்ட இறுக்கமான குடிவரவு விதிமுறைகளை லிபரல் அரசு தளர்த்தியுள்ளது. புதிய குடிவரவாளர்கள் இலகுவாகக் கனேடியக்குடியுரிமை பெறுவதற்கான வழிமுறைகளை லிபரல் அரசு அறிமுகம் செய்துள்ளது.

புதிய குடிவரவாளர்கள் 54 வயதைக் கடந்தவர்களாக இருக்கும் பட்சத்தில் அவர்கள் ஆங்கில மொழித் தேர்ச்சிப் பரீட்சையில் இருந்து விலக்களிக்கப்படுவதற்கு லிபரல் அரசு சட்டமூலம் —6 இன் மூலம் வழிசமைக்கப்பட்டுள்ளது.

ஆங்கில மொழி பேசும் நாடுகளில் மிகத்தளர்வான குடிவரவு விதிகளைக் கொண்ட நாடாக தற்போது கனடா விளங்குகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இகுருவி ஐயாவுக்கு கனேடிய பிரதமர் ஜஸ்டின் ரூடோவின் வாழ்த்துச் செய்தி

CANADA

PRIME MINISTER · PREMIER MINISTRE


**Ekuruvi Night 2017**

It is with great pleasure that I welcome you to Ekuruvi Night 2017.

For many years, Ekuruvi newspaper has engaged our Tamil-Canadian community with their quality coverage of both international and local news. Canada is strong not in spite of our diversity, but because of it, and it is important that Canadians have an opportunity to maintain valuable links to their heritage and consume media in their native language, a service which Ekuruvi provides with great distinction.

This year, I wish to take this opportunity to especially highlight the work of Mr. Perinpanathan Sinnathambi Kandiah, who has long been a leader in our Tamil-Canadian community. He has, as well, greatly contributed to the success of Ekuruvi through his high-quality photojournalism, a reflection of his great talent.

Thank you to the organizers of this amazing event and to all of you who are in attendance tonight to celebrate Ekuruvi Night 2017. Please accept my best wishes for a memorable event.



Ottawa
2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### *Best Leadership Award*

**சிறந்த தலைமைத்துவ பண்பிற்கான விருது**

**திரு.குமார் யோகரட்ணம்**

**Kumar Yogaratnam**

'ஒரு நல்ல தலைவன் தனக்கான பாதை எது என்பதை அறிந்து கொண்டு அந்த பாதை வழியே பயணிப்பான் அத்துடன் மற்றவர்களுக்கும் சரியான பாதையை காண்பிப்பான்'

திரு.குமார் யோகரட்ணம். இலங்கையில் இருந்து புலம்பெயர்ந்து ஜேர்மனியில் சில காலம் வாழ்ந்து பின்னர் கனடாவில் குடியேறியவர். கல்வி கற்கும் காலத்தில் பகுதி நேரத் தொழில் புரிவதற்காக Swiss Chalet உணவு விடுதியை தேர்வு செய்தார். செய்யும் எந்த தொழிலையும் மிக நேர்த்தியாகவும் நேசிப்புடனும் செய்தால் பல உயரங்களை தொட முடியும் என்பதை தனது அனுபவம் மூலம் உணர்த்தி நிற்கின்றார். பாத்திரங்கள் கழுவும் பணியில் ஆரம்பித்த இவருடைய பயணம் இன்று வருடாந்தம் 100 மில்லியன் டொலர்களை ஈட்டும் பெரு வணிகமாக வளர்ச்சி பெற்று நிற்கின்றது. சிறப்பான தலைமைத்துவ ஆற்றல் திட்டமிடல் முகாமைத்துவம் ஆகியவற்றால் இன்று 20க்கு மேற்பட்ட முன்னணி உணவகக் கிளைகளின் உரிமையாளராக 2000க்கும் மேற்பட்ட தொழிலாளர்களுக்கு தொழில் வாய்பினை வழங்கும் தொழில் வழங்குனராக உயர்ந்து நிற்கின்றார். முகாமைத்துவ அனுபவங்களையும் வெற்றிக்கான படிமுறைகளை யும் வாசிப்பின் மூலமாக வளர்த்துக் கொண்டுள்ள திரு குமார் யோகரட்டணம் தலைமைத்துவ பண்பிற்கான முன்னுதாரணமாக எம்மத்தியில் திகழ்கின்றார். இந்த வருடம் சிறந்த தலைமைத்துவ பண்பிற்கான விருதினை வழங்கி இகுருவி திரு.குமார் யோகரட்ணம் அவர்களை கௌரவிக்கின்றது.

( இவ்விருதை IBC தமிழ் நிறுவன அதிபர் திரு பாஸ்கரன் கந்தையா அவர்கள் வழங்கி கௌரவித்தார்)

*This Award Sponsored By:*

IBC தமிழ்



"A good leader is one who identifies his path and travels by it. Further, he shows correct path to others also"

Kumar Yogaratnam migrated from Sri Lanka, spent few years in Germany and has now settled in Canada. As he was pursuing his studies, he chose Swiss Chalet for a part-time job. As a person committed to excellence and passionate performance, he realized that greater heights could be reached through experience. His journey which started as a dishwasher has taken him to the dizzy heights of being the owner of an industry with a turnover of more than $100 million a year. Remarkable managerial skills paired with planning and leadership qualities, Kumar Yogaratnam runs more than 20 restaurants and provides jobs to more than 2,000 employees.

We applaud and honour the commendable experience of Kumar Yogaratnam and his insightful leadership which have made him a role model amongst us. Ekuruvi is proud to present Kumar Yogaratnam with the BEST LEADERSHIP AWARD.



"Follow your dreams and they will show the right path for you"

Kish Raveendran was born in Chavakacherry, Sri Lanka and grew in Paris, the city of human civilization. At present, he lives in Canada. As a renowned costume designer, he has evolved into brand ambassador for many companies that manufacture men's apparel and accessories. Through innovative initiatives in Web and Online marketing, Kish Raveendran is a forerunner for the present day youths. Moreover, he is also an example for those believe that commitment and passion combined with desire for excellence can help anyone reach great altitudes. He markets new arrivals of apparels and foot wears and continues to constantly provide his customers with the latest.

Ekuruvi takes immense pride in honoring Kish Raveendran for his bold and winning moves in making the optimum use of modern web technology and awards him with WEB AND ONLINE MARKETING AWARD.

### *Web and Online Marketing Award*

**சிறந்த இணைய வணிக விருது**

**Kish Raveendran**

உங்கள் கனவுகளை பின்தொடருங்கள் அவை உங்களுக்கான சரியான பாதையினை காணப்பிக்கும்'

இலங்கையின் சாவகச்சேரியில் பிறந்த திரு.கிரிஸ் ரவீந்திரன். மனித நாகரீகத்தின் அடையாளங்களில் ஒன்றான பாரீஸ் மாநகரில் வளர்ந்தவர். தற்போது கனடாவில் வாழ்ந்து வருகின்றார் பிரத்தியேக ஆடை வடிவமைப்புகளை தனது வாடிக்கைளார்களுக்காக மேற்கொண்டு வரும் இவர் உலகின்; முன்னணி ஆடை அணிகலன் உற்பத்தி நிறுவனங்களின் விளம்பரத் தூதுவராகவும் தன்னை வளர்த்துக் கொண்டுள்ளார்.இணைய செயற்பாடுகள் மூலமாக தனது வர்த்தக நடவடிக்கைகளை வெற்றிகரமாக முன்னெடுத்து வரும் திரு.கிரிஸ்.இளம் தலைமுறையினரின் வர்த்தக முனைவிற்கு சிறந்த முன்னுதாரணமாக கருதப்படக் கூடியவர். தனது விருப்பங்களை தொலைத்துவிடமால் தான் விரும்பும் துறையில் ஈடுபாட்டோடு இயங்கினால் சிகரங்களை தொட முடியும் என்பதற்கான ஒரு எடுத்துக் காட்டாக திரு.கிரிஸ் விளங்குகின்றார். பல்வேறு நாடுகளினதும் புதிய வரவு ஆடைகள் மற்றும் பாதணிகள் போன்றவற்றை தனது இணையத் தளங்களின் மூலமாக சந்தைப்படுத்தி வருகின்றார். அத்துடன் நவநாகரீக அடை அலங்காரங்கள் , நவீன வரவுகள் போன்றவற்றையும் தனது வாடிக்கையாளர்களுக்கு தொடர்ந்து அறிமுகம் செய்து வருகின்றார். இணைய உலகின் வளர்ச்சிப் போக்கினை சிறந்த முறையில் பயன்படுத்தி தனது தொழில் முனைப்புகளை அதன் ஊடாக சிறபான முறையில் முன்னெடுத்து வெற்றிகளை பெற்று வரும் திரு.கிரிஸ் ரவீந்திரன் அவர்களுக்கு சிறந்த இணையத் தள வணிக முயற்சிகளுக்கான விருதினை வழங்குவதில் இகுருவி பெருமிதம் கொள்கின்றது.

(இவ்விருதினை RE/MAX COMMUNITY REALTY INC சார்பாக அதிபர் ராஜிவ் கோணேஸ்வரன் அவர்கள் வழங்கி கௌரவித்தார்)

*This Award Sponsored By:*

RE/MAX COMMUNITY Realty Inc., Brokerage

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *Making a Difference Award*

### சமூக மாற்றத்திற்கான புதிய வெளிச்சம் விருது

### Dr.Ramanathan Lambotharan

'அர்பணிப்பான அரவணைப்பு கிடைக்குமானால் பூமியில் தூவப்படும் விதைகள் எல்லாம் நாளை முளைக்கும் பின்னொரு நாளில் அவை பெருமரமாகும்'

ரொன்ரோ பெரும்பாகத்தில் வாழும் மருத்துவ ஆளுமைகளில் முக்கியமானவர் வைத்திய கலாநிதி லம்போதரன். இவரை காண்பதற்கும் மருத்துவ சிகிச்சைகளை பெறுவதற்கும் தினமும் பல நூற்றுக் கணக்கானவர்கள் காத்திருக்கின்றார்கள். மருத்துவர்களுக்கே உரிய கனிவோடும் பொறுமையோடும் தன்னை நாடி வருவபவர்களை அரவணைத்துக் கொள்ளும் ஒருவர். நெருக்கடி மிக்க, நேரமின்மை என்பதே தாரக மந்திரமாகிப் போன கனேடிய வாழ்கைச் சூழலிலும் தான் வாழும் சமூகத்திற்கான பங்கு மிக அவசியமானது என்பதை தனது செயல்கள் மூலம் பலருக்கும் வைத்திய கலாநிதி லம்போதரன். உணர்த்தி வருகின்றார். சர்வதேச மருத்துவ சுகாதார அமைப்பின் (IMHO) தீவிர செயற்பாட்டாளராக விளங்கும் வைத்திய கலாநிதி லம்போதரன் அந்த அமைப்பின் மூலம் தயாகத்தில் வாழும் மக்களுக்கு பல்வேறு விதாமான மருத்துவ சுகாதார உதவிகளை தொடர்ச்சியாக வழங்கி வருவதில் முன்னிற்கின்றார்.ஒரு வருடத்தில் சில வார காலப் பகுதியை தாயக மக்களுக்கான மருத்துவ சுகாதார உதவிகளை வழங்குவதற்காகவே அர்பணித்துள்ளார். கொடிய யுத்தம் காரணமாக ஆதரவற்று நிற்கும் இளம் குழந்தைகளை அரவணைத்து அவர்களுக்கான அனைத்து தேவகைளையும் பூர்த்தி செய்யும் புனிதப் பணியை பல்வேறு சாவால்களின் மத்தியிலும் அயராது தொடர்கின்றவர். சமூகப் பொறுப்புணர்வுடன் மற்றவர்களின் வாழ்வில் விடியலை ஏற்படுத்தும் நோக்கில் தன்னலமற்று இயங்கி வரும் வைத்திய கலாநிதி லம்போதரன் அவர்களின் முன்னுதாரணம் மிக்க செயற்பாடுகளுக்கும் அர்பணிப்பிற்கும் நன்றி தெரிவிக்கும் வண்ணம் 'புதிய வெளிச்சம்' எனும் சிறப்பு விருதை வழங்கி இகுருவி பெருமிதம் கொள்கின்றது.

(இவ்விருதை Nava Law Professional Corporation நிறுவன அதிபரும், சட்ட வல்லுனரும் திரு Kubes Navaratnam அவர்கள் வழங்குவதை படத்தில் காணலாம்)

*This Award Sponsored By*

NAVA LAW
PROFESSIONAL CORPORATION



"Every seed sown would germinate tomorrow and grow up to be a huge tree later if only it receives care and compassion"

Dr. Lambotharan is one of the most remarkable medical personalities of Toronto. Hundreds of people queue up every day to meet him for medical consultation. His approach is filled with patience and empathy. Dr..Lambotharan through his commendable service to his society sensitizes every one that want of time is no excuse for neglecting one's duty to the community. As a dedicated member of IMHO, Dr.Lambotharan has extended is medical assistance to the people of Sri Lanka . Every year he spends a considerable period in his mother land to provide service to the poor and the needy. His service includes destitute and orphaned children. His tireless, immaculate work is highly noble and praise worthy. With a great social accountability, Dr. Lambotharan designs a better dawn to the people of a war torn country.

EKuruvi derives immense pride in honouring Dr.Lambotharan with the special award PUTHIYA VELICHAM and registers its gratitude.

## *Connecting Roots Award*

### இணைக்கும் வேர்கள் விருது

### Vairamuthu Sornalingam



"We may not be able to help every one of the needy, but if we join together we may help at least a few"

Vairamuthu Sornalingam is one who still holds strong his emotional umbilical cord with his mother land Sri Lanka. Physically distanced he may be though from his place of birth, he continues to energize the sons of the soil with a faith that we would rise. He has been heading for the past thirty years a successful manufacturing industry in Canada. He has proved firmly that as an entrepreneur one can establish and provide perennial life support to the Sri Lankan Diaspora. His untiring hard work and indomitable optimism have made the ready-made apparel factory in Sri Lanka a fore-runner for Canadian- Sri Lankan investors. It has evolved into a profitable company within three years braving against every possible obstacle.

Ekuruvi commends immensely the service rendered by Vairamuthu Sornalingam in nourishing and preserving our roots with our Mother Land and awards him with CONNECTING ROOTS Award.

'உதவி தேவைப்படும் எல்லோருக்கும் நாம் உதவிகளை வழங்கிவிட முடியாது ஆனால் நாம் எல்லோரும் சேர்ந்தால் உதவி தேவைப்படும் சிலருக்கேனும் உதவ முடியும்'

திரு. வைரமுத்து சொர்ணலிங்கம் தான் பிறந்த மண்ணை மறவாமால் நேசிக்கும் ஒரு மனிதர். ஊர் பிரிந்து வந்த பின்னும் அந்த ஊரோடு உறவாடும் எண்ணத்தை தன்னில் சுமந்து கொண்டு இருப்பவர். தாய் மண்ணை பிரிந்த புலம்பெயர் தமிழர்களில் ஊருக்கு ஒரு சொர்ணலிங்கம் இருந்தால் போதும் நாம் நிமிர்ந்து விடலாம் என பலரும் சொல்லும் அளவிற்கு தனது மண்ணிற்றும் அங்கு வாம் மக்களுக்கும் தொடர்ந்தும் தன்னால் முடிந்த உதவிகளை வழங்கி வருகின்ற ஒருவர் கனடாவில் கடந்த 30 வருடங்களுக்கு மேலாக மிக வெற்றிகரமாக இயங்கி வரும் ஒரு உற்பத்தி நிறுவனத்தின் தலைவர், தொழில் முனைவினை மேற்கொள்ள முடியும் என்பதை நிரூபித்துகாட்டிய முன்னோடி. .புலம்பெயர் தமிழர் சமூகம் தாயக மக்களின் வாழ்வாதார அபிவிருத்திக்கு நிலையான பங்களிப்பினை எவ்வாறு வழங்க முடியும் என்பதற்கான முன்னுதாரணத்தை ஏற்படுத்திக் காட்டியவர் இவருடைய அயராத உழைப்பினாலும் தளராத நம்பிக்கை-யினாலும் அவருடைய ஊரில் ஆரம்பித்துவைக்கப்பட்டுள்ள ஆடை உற்பத்தி தொழிற்சாலை. இந்நிறுவனமானது கனடா உடுப்பிட்டி நலன் புரிச் சங்கதினால் ஆரம்பித்து வைக்கப்பட்டு மிகவும் வெற்றிகரமாக வல்லை வெளியில் ஆரம்பித்துவைக்கப்பட்டுள்ள ஆடை உற்பத்தி தொழிற்சாலை புலம்பெயர் தமிழர்களின் முதலீட்டு வாய்புகளுக்கான தொடக்கப்புள்ளி என்றே கருதப்படுகின்றது. பல சாவால்களையும் தாண்டி மூன்று ஆண்டுகளில் இலாபமீட்டும் ஒரு நிறுவனமாக அது வளர்ச்சிபெற்று நிற்கின்றது. இந்த தொழில் முயற்சி புலம் பெயர் தமிழ் சமூகத்தை ஆக்கபூர்வமாக முறையில் தாயகத்தில் முதலீடுகளை மேற்கொள்ளவதற்கு தூண்டுகோலாய் அமைந்துள்ளது. நாம் இழந்து வந்த வேர்களை இணைக்கும் அவரின் உன்னதமான சேவையினை பாராட்டி கௌரவிக்கும் வகையில் ' இணைக்கும் வேர்கள் என்ற விருதினை வழங்கி இகுருவி அவரை மரியாதை செய்வதில் பெருமகிழ்வடைகின்றது.

(இவ்விருதை CANTAM GROUP LTD நிறுவன அதிபர் யசோ சோமலிங்கம் மற்றும் அவரது மனைவி கோமதி சோமலிங்கம் அவர்கள் வழங்கி கௌரவித்தார்கள்)

*This Award Sponsored By*

CANTAM
Group Ltd.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

#1 Outstanding Agent *for* Outstanding Results.

# FOR SALE




Bedrooms:6+2/ Washrooms:5
Toronto




Bedrooms:4/ Washrooms:2
Markham




Bedrooms:3 / Washrooms:3
Aurora




Bedrooms:4+2/ Washrooms:4
Richmond Hill




Bedrooms:5 / Washrooms:6
Vaughan




Bedrooms:4 / Washrooms:5
Richmond Hill




Bedrooms:1+1 / Washrooms:1
Toronto




Bedrooms:1/ Washrooms:1
Toronto



RE/MAX Excel Realty Ltd., Brokerage*
Bus: 905.475.4750 Fax: 905.475.4770
50 Acadia Ave. Suite 120, Markham, ON L3R 0B3
*Independenlty Owned And Operated
*Not intended to solicit Sellers or Buyers currently under written contract with another Realtor.*

Raj Nadarajah
Sales Representative
Dir: 416.333.6115
nanohomes@gmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Pioneer in Financial Services Industry Award

**நிதி சேவைகள் துறையில் முன்னோடி விருது**
**Raj Nadaraja**

'கதைகளை சொல்வதை விட வரலாற்றை உருவாக்குவது மிக முக்கியமானது '

திரு. ராஜ் நடராஜா Mega Financial என்ற தமிழரனின் நிர்வாகத்தில் உருவாக்கப்பட்ட முதலாவது காப்புறுதி முகவர் நிறுவனத்தின் அதிபர்:. மிக கவனமான திட்டமிடப்பட்ட வர்த்தக முயற்சி எவ்வாறு வெற்றியடையும் என்பதற்கு 25 ஆண்டுகாலமாக இவர் தலைமை தாங்கி நடத்தி வரும் Mega Financial நிறுவனமே சாட்சி. பல்லின சமூகங்களையும் சேரந்த நூற்றுக்கும் அதிகமான காப்புறுதி முகவர்கள் அவர்களுக்கான சிறந்த பயிற்சிகள், தலைமைத்துவ வழிகாட்டல் கருத்தரங்குகள் என நிதிச் சேவைகள் துறையில் முன்னோடியாக திகழ்கின்றார். தனது நிறுவனத்தில் பணியாற்றும் ஒவ்வொருவரினதும்; தனிப்பட்ட வளர்ச்சிக்கு உறுதியான பங்களிப்பை இவர் வழங்கி வருகின்றார். அதேபோன்று தாயகத்தில் வாழும் மக்களின் அவலங்களை துடைக்கும் பணிகளையும் சத்தமின்றி மேற்கொண்டு வருகின்றார். திரு.ராஜ் நடராஜா அவர்களின் தனித்துவமான ஆழுமையை கௌரவிக்கும் வகையில் 'நிதிச் சேவைகள் துறையின் முன்னோடி ' என்ற விருதை வழங்கி கெரரவிக்கின்றது இகுருவி.

இவ்விருதை HomeLife/Future Realty Inc அதிபர் திரு செல்வா வெற்றிவேல் அவர்கள் வழங்குவதை படத்தில் காணலாம் .



*This Award Sponsored By*

FUTURE REALTY INC., BROKERAGE
Independently Owned and Operated

"It's more important to create history than narrate stories"

Raj Nadaraja of Mega Financial heads the first Insurance Company established by Tamils in Canada. His twenty five year old organization Mega- Financial is a standing example for how meticulous planning and foresight can bring stable success in this field. He has emerged as a role model in this multi- racial society for hundreds of Insurance Agents. He conducts special workshops, seminars and conferences to imbibe leadership qualities and professional skills. His contribution towards the progress of every one of his employee is noteworthy. Similarly, he has been offering silently great help in eradicating the misery of the people of the mother land.

Ekuruvi lauds his originality and appreciates his services and takes pride in honouring him with the PIONEER IN FINANCIAL INDUSTRY AWARD.



## Commitment to Service Award

**சிறந்த சேவைக்கான விருது**
**Dr. Coomarasamy Kiruba**

'நீங்கள் செல்லும் இடங்களில் எல்லாம் அன்பைத் தூவுங்கள் உங்களை நாடி வருகின்ற அனைவரையும் மகிழ்ச்சியுடன் திரும்பிச் செல்ல வையுங்கள் உலகம் அமைதி பெறும் '

வைத்திய கலாநிதி குமாரசாமி கிருபானந்தன். தமிழர்கள் செறிந்து வாழும் Scarborough பகுதியில் உள்ள Scarborough Hospital இன் மகப்பேற்றுத் துறையின் முக்கியமான மருத்துவ ஆழுமை. அல்லைப்பிட்டி என்ற சிறு தீவில் பிறந்து வளர்ந்த இவர் தனது கடினமா முயற்சிகளால் சிகரம் தொட்ட சாதனையாளராக மாறியவர்.ஏறத்தாள மூன்று தசாப்தங்களாக கனேடிய மண்ணில்; வைத்திய கலாநிதி கிருபானந்தன் அவர்கள் மகப்பேற்று மருத்துவத் துறையில் ஆற்றி வரும் சேவைகள் அளப்பெரியவை. கனிவான பேச்சும் நம்பிக்கையளிக்கும் அணுகுமுறையும் Scarborough வைத்தியசாலைக்கு மகப்பேற்று சிகிச்சைக்காக வரும் பலரையும் கவர்ந்துள்ளது. இதனால் தான் இவரின் மருத்துவ ஆலோசனைகள் மற்றும் சிகிச்சைகளை பெறுவதற்காக ரொரன்ரோ பெரும்பாகத்தில் இருந்தும் பலநூற்றுக் கணக்கானவர்களை Scarborough வைத்தியசாலையை நாடிவரவைத்துள்ளது. ரொரன்ரோ பெரும்பாகத்தில் மகப்பேற்று மருத்துவத் துறையில் சிறந்த சிகிச்சையினை வழங்கும் வைத்தியசாலையாக Scarborough வைத்தியசாலை திகழ்வதற்கு இவரின் அர்ப்பணிப்பான சேவை மிக முக்கிய பங்கினை வழங்கிக் கொண்டிருக்கின்றது.

தான் பிறந்து வளர்ந்த மண்ணில் சிதைந்தழிந்து போயிருந்த மருத்துவமனையை சீரமைத்து அதற்கு நிரந்தரமான மருத்துவர் ஒருவரை நியமித்து தனது ஊர் மக்களுக்கு அடிப்படை மருத்துவ உதவிகள் கிடைப்பதை உறுதிப்படுத்த அவர் எடுத்த முயற்சிகள் மிக முக்கியமானவை. தான் உண்டு தன் வாழ்வுண்டு என்று சுயநல வாழ்வில் தொலையாமல் தான் வாழும் சமூகத்திற்கு தன்னால் ஆன அனைத்தையும் செய்ய வேண்டும் என்பதற்காய் தொடர்ந்து இயங்கி வரும் இவருக்கு அர்பணிப்பு மிக்க சமூக சேவைக்கான விருதை வழங்கி மேன்மை கொள்கின்றது இகுருவி.

இவ்விருதை SUGSHE GROUP OF COMPANIES நிறுவன அதிபர் திரு சுகுமார் கணேசன் அவர்கள் வழங்கி கௌரவித்தார்

*This Award Sponsored By*

"Spread love where ever you go. Make those who come in search of you go back in happily. Then the world will be at peace".

Dr. Coomarasamy Kirubananthan is a towering medical personality in Scarborough , an area dense with the Tamils and his Scarborough Hospital is a landmark maternity center. Born in Allaipitty, a little island in Sri Lanka, Dr.Kiruba has transcended countless obstacles before establishing himself as an achiever. His medical service in the Canadian soil for three decades especially in the field of maternity health care is par excellence. His empathetic approach and words of optimism have attracted many to his hospital. That is the only reason why hundreds throng at the threshold of Scarborough Hospital. Moreover, Dr. Kiruba has extended his dedicated medical service to his mother land by renovating a dilapidated hospital there, appointing a permanent doctor to render basic medical assistance to the poor and needy. Amidst those who lead a pathetically selfish life, Dr. Kiruba has reached out to many through selfless service.

Ekuruvi delights in honouring his service and dedication by identifying him worthy of COMMITMENT IN SERVICE AWARD.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *Social Architect Award*

### சமுதாய சிற்பி விருது

### Sinnathamby Gunaseelan

ஆசிரியர்கள் தான் ஒரு சமூகத்தை உருவாக்குகின்ற பாரிய பொறுப்பை சுமந்துக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழ் சமூகத்தின் இன்றைய வளர்ச்சி என்பது அப்பணிப்பான ஆசிரியர் சமூகத்தால் ஏற்பட்டது என்பதை மறந்து விடவோ, மறுத்து விடவோ முடியது.

மூன்று சகாப்தமாக தொடர்ந்த யுத்தமும், அது ஏற்படுத்திய, ஏற்படுத்தி நிற்கும் உளவியல், பொருளியல் தாக்கங்களும் எங்கள் ஆசிரியர் சமூகத்தையும் விட்டு வைக்கவில்லை.

எங்கள் எதிர்கால சமூகம் உயிர்ப்புடனும், துடிப்புடனும் எழுந்து நிற்பதற்கும், சிகரங்கள் தொடுவதற்கும் ஆசிரியர் சமூகத்தின் பணி இன்றியமையாதது.

யாழ்குடா நாட்டில் பல்லாயிரக்கணக்கான மாணவர்களுக்கு கலங்கரை விளக்கமாக திகழ்ந்த ஆசிரிய பெருந்தகை சின்னத்தம்பி குணசீலன்,

இவர் தனி மனிதனாக எமது சமூகத்திற்கு ஆற்றிய, ஆற்றிவரும் பணிகள் மிக மகத்தானது.

தனது பட்டப்படிப்பை நிறைவு செய்ததில் இருந்து இதுவரை சுமார் 40,000 க்கும் அதிகமான மருத்துவ கலாநிதிகள், பல் வைத்திய கலாநிதிகள், விலங்கு மருத்துவ கலாநிதிகள், விவசாய சிறப்புப் பட்டதாரிகள், விஞ்ஞானப் பட்டதாரிகள் எனப் பல கல்வியாளர்களை உருவாக்கிய பெருமைக்குரியவராக விளங்கும் திரு. சின்னத்தம்பி குணசீலன் அவர்களுக்கு சமுதாய சிற்பி விருதை வழங்கி கௌரவித்தது மீகுருவி.

(கனடாவில் தமிழ் இருக்கைக்காக 2 மில்லியன் டொலர்களை டொரோண்டோ பல்கலைகழகத்துக்கு வழங்கிய திரு ரவி குகதாசன் அவர்கள் திரு குணசீலன் ஆசிரியருக்கு 'சமுதாய சிற்பி விருது' வழங்கி கௌரவித்தார் .)



"Teachers alone bear the great responsibility of designing a society"

One can neither forget nor deny the truth that the development of a Society is solely dependent on the dedicated service rendered by its teachers. Three decades of relentless war and the indelible scars it left behind in the psyche and economy of the people did not spare the Sri Lankan Tamil teaching community too. The role of Teachers is imperative for the resurrection of our future generation and its complete revival.

Thiru Sinnathamby Gunaseelan stands as beacon of hope to thousands of students in Jaffna. We salute his selfless service to the Tamil society of our motherland. He is a renowned teacher of Botany and is at present serving as a Senior Faculty in Biology in Koppai Teacher Training College. He has been the motivating force for the emergence of more than 40,000 Doctors, Dentists, Veterinary Surgeons, Science and Agricultural graduates and Educationists.

Ekuruvi is highly appreciative of the yeoman service of this great TEACHER and confers upon him with the BEST SOCIAL ARCHITECT AWARD

## இகுருவி விழாவில் குரு அரவிந்தனின் கனடா தமிழர் வரலாறு - நூல் வெளியீடு

ரொறன்ரோவில் சென்ற ஞாயிற்றுக் கிழமை இகுருவி வருடாந்த விழாவில் இகுருவி இதழின் எழுத்தாளர் குரு அரவிந்தன் எழுதிய 'கனடா தமிழர் வரலாறு' என்ற தொடர் கட்டுரைகளின் தொகுப்பு நூல் வடிவமாக வெளியிடப்பட்டது.

இந்த இகுருவி விழாவில் இந்தியாவில் இருந்து பேராசிரியர் ஜெயந்தஸ்ரீ பாலகிருஷ்ணன், இலங்கையில் இருந்து சின்னத்தம்பி குணசீலன் ஆசிரியர் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். குரு அரவிந்தனின் 'கனடா தமிழர் வரலாறு' நூல் வெளியிடப்பட்ட போது சிறப்புப் பிரதிகளைப் பாராளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி, ரொறன்ரோ நகராட்சி மன்ற உறுப்பினர் நீதன் சண் ஆகியோர் பெற்றுக் கொண்டனர். 150வது பிறந்த தினத்தைக் கனடிய அரசுகொண்டாடும் இந்த வேளையில் தமிழர்களின் புலம் பெயர்ந்த வரலாற்றை, அவர்களின் கடந்த 40 வருடகால பங்களிப்பைப் பற்றிய தகவல்கள் இந்த நூலில் முடிந்த அளவு இடம் பெறற்றிருக்கின்றன.





ஆங்கிலத்திலும், தமிழ் மொழியிலும் வெளிவந்த இந்த நூலில் குரு அரவிந்தனனின் 'பிறீடம் இஸ் பிறி இன் கனடா' (Freedon is Free in Canada) என்ற கட்டுரையும் இடம் பெற்றிருந்தது. கனடாவின் 150 வது பிறந்த தினத்தை 2017 இல் கொண்டாடும் கனடிய அரசு பல்கலாச்சார சமூகங்களிடையே இருந்து தெரிவு செய்யப்பட்ட கதைகளில் தமிழ் சமூகத்தைப் பிரதிபலிக்கும் குரு அரவிந்தனின் கதையும் 150 கதைகளில் ஒன்றாகத் தெரிவு செய்யப்பட்டிருந்தது Freedon is Free in Canada.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினைபைகட்டியா மாதவிலக்கு கோளாறா, குழந்தையின்மையா இனி எதற்கு கவலை



குழந்தையின்மை பிரச்னைக்குத் தீர்வு இருக்கா இல்லையா என்று யோசிப்பவர்களா கவலையை விடுங்கள்.. இப்பொழுது அனைத்திற்கும் தீர்வு வந்துவிட்டது.. கொட்டி கிடக்கு தீர்வு ஆயுர்வேத மருத்துவத்தில்... அதுவும் ஒவ்வொரு பிரச்னைக்களுக்கும் தனி தனியே மருத்துவம்.. ஆனால தகுந்த மருத்துவர்களை அணுகினால் கேள்விக்கே இடமில்லை..

என்னிடம் online பார்த்தேன் இந்த மருந்து இருக்கானு கேட்டு வந்தாங்க.தகுந்த முறையில் test report எல்லாம் கொண்டு வரசொல்லி விளக்கம் அளித்தேன்.. 1000 மூலிகைகள் இருக்கு ஒரு நோய்க்கு ஆனால் அந்த ஒரு மருந்தை தகுந்த மருத்தவர அறிவுரை இல்லாமல் நீங்களாகவே எடுத்து கொண்டீர்கள் என்றால் பூதாரகார. விளைவுகளை சந்திக்க வேண்டி வரும்..

ஒரே மருந்தை 200 நோய்களை குணப்படுத்தும் ஆனால தகுந்த அனுபானம் அளவுமுறை உடல்நிலை, சீதோசன சூழ்நிலைகளில். அனைத்தையும் மருத்துவரின் அறிவுரை படிதான் எடுக்கவேண்டும்..

இப்போ இருக்கற இளம் வயதினருக்கு ஒரு பெரிய தலைவலி நீர்கட்டி (polycystic overy),, முறையற்ற மாதவிலக்கு (irregular period's)

இவை அனைத்திற்கும் காரணம் ஹார்மோன்களின் ஆட்டமே... உடல்பருமன், தைராய்டு, மனஅழுத்தம், பிரச்சனை, உணவு பழக்கவழக்கங்கள் இவைகளை கண்டு அறிந்தாலே அவைகளை விரட்டிவிட்டு நாம் வெற்றி நடை போடலாம்..

### ''குழந்தையின்மை பிரச்னைக்கு தீர்வு...

பெரும்பாலும் நம்மிடமே இருக்கிறது. நம்முடைய உடல்நலத்தை தகுந்தபடி பேணுவதோடு, உணவு மற்றும் வாழ்க்கை முறையிலும் அக்கறை காட்டினால், இத்தகைய பிரச்னைகளில் இருப்பவர்களில் 80 சதவிகிதத்தினருக்கும் மேல், பைசா செலவில்லாமலேயே... குழந்தைப்பேறு அடைய முடியும்'' என்பதுதான் நம்முடைய மண்ணின் மருத்துவர்களான சித்த மருத்துவர்கள் சொல்லும் தீர்வாக இருக்கிறது!

### உணவும், வாழ்க்கை முறையுமே மருந்து!

''பெரும்பாலான கருத்தரிப்பு பிரச்னைகளை சிகிச்சையின்றியே தீர்த்துக்கொள்ளலாம். கருத்தரித்தலுக்கான முக்கியக் காரணமான மாதவிடாய் சிக்கல் ஏற்பட, நீர்க்கட்டிகளே பிரதான காரணம். சத்து இல்லாத 'ஜங் ஃபுட்' உணவுப் பழக்கம், அளவுக்கு அதிகமான இனிப்புகள் உண்பது, எடையைக் குறைப்பதற்காக பட்டினி கிடப்பது, நேரங்காலமில்லாமல் உண்பது, உரிய நேரத்தில் உண்ணாமல் இருப்பது.. இதுபோன்ற காரணங்களால் நீர்க்கட்டிகள் ஏற்படலாம். தினசரி உணவில் நார்ச்சத்து உள்ள காய்கறி, பழங்கள் சேர்த்து, முறையாக யோகா செய்தாலே போதும்... நீர்க்கட்டிகளைத் தவிர்க்கலாம். பெற்றோர்களே... இதை கண்டிப்பாக உங்கள் பெண் பிள்ளைகளிடம் அறிவுறுத்துங்கள்.

ஏற்கெனவே நீர்க்கட்டி இருப்பவர்கள், அதிலிருந்து குணம்பெற தினமும் 45 நிமிடம் வேகமான நடைபயிற்சி செய்யலாம்; 20 — 30 நிமிடங்கள் யோகா செய்யலாம். நார்ச்சத்து நிறைந்த உணவுப் பொருட்களை எடுத்துக் கொள்வதுடன் சிறுதானியம், கீரைகளை தவறாமல் எடுத்துக்கொள்ள வேண்டும். எண்ணெய்ப் பலகாரங்களையும் இனிப்பை யும் அறவே தவிர்க்க வேண்டும். சினைப்பை நீர்க்கட்டிகள் இருப்பவருக்கு சர்க்கரை மற்றும் தைராய்டு பிரச்னை இருக்கும்பட்சத்தில், சுயமருத்துவமின்றி சித்த மருத்துவரை ஆயுர்வேத மருத்தவர்களை ,,ஆங்கில மருத்தவரஅணுகி தீர்வுகாணலாம் ,எந்த மருத்துவமுறை என்பதைவிருப்பத்தின் அடிபடையில்நீங்கள் தேர்வு செய்து சிகிச்சை எடுக்கலாம்..

### மன அழுத்தத்தை விரட்டுங்கள்!

அடுத்த பிரச்னை, சினைப்பை அடைப்பு. இதற்கு மன அழுத்தமும் காரணமாக இருக்கலாம். எனவே, மற்ற சிகிச்சைகள் எடுப்பதற்கு முன் கவுன்சலிங் எடுத்துக்கொண்டு, மன அழுத்தத்தில் இருந்து விடுபட்டாலே, அடைப்பு தானாக நீங்கிவிடும். அதேபோல் வெள்ளைப்படுதல் ஒரு முக்கியக் காரணம். சாதாரணமாக மாதவிடாய்க்கு 4 நாட்களுக்கு முன்பு வெள்ளைப்படுவது இயல்பான ஒன்று. ஆனால், துர்நாற்றம் வீசக்கூடிய அளவுக்கு அடிக்கடி வந்தாலோ... பிறப்புறுப்பில் அரிப்பு ஏற்பட்டாலோ கண்டிப்பாக மருத்துவரிடம் சிகிச்சை எடுத்துக்கொள்ள வேண்டும். இதை சிலர் வெட்கப்பட்டுகொண்டு மருத்துவரிடம் சொல்லமறுத்து பூதாகார விளைவுகளை சந்தித்து கடைசியில் தான் வருகின்றனர்.. இது நோய் நிலை அல்ல சின்ன கிருமி தொற்று அதனால் சீக்கிரம் குணபடுத்தலாம்..

பெண்குழந்தைகளை வைத்து இருக்கும் அம்மாகள் உங்கள் குழந்தைகளுக்கு தெளிவாக எடுத்து சொல்லி புரியவையுங்கள்... இல்லை என்றால் கூட்டிகொண்டு வாருங்கள் நாங்கள் வராமல் தடுப்புமுறை பற்றி புரியவைக்கிறோம்... என் குழந்தைக்கு இல்லனு அசால்டா விடாதீங்க..

இதிலிருந்து விடுபட, வாரம் இருமுறை வெள்ளைப் பூசணிக்காயுடன் பாசிப்பருப்பு சேர்த்த கூட்டு வைத்து சாப்பிடலாம். வெள்ளைப்பூசணி சாறு எடுத்துக்கொள்வதும் நல்லது. கண்டிப்பாக கோழி இறைச்சியைத் தவிர்க்க வேண்டும். சோற்றுக்கற்றாழை சாற்றை, உணவுக்கு முன் காலையில் எடுத்துக்கொள்ளலாம். சித்த மருத்துவரின் பரிந்துரையின் பெயரில் சோற்றுக்கற்றாழை சம்பத்தபட்ட food suplimentry ஆயுர்வேத மருத்துகள் குவிந்து இருக்கு ஆனால் மருத்தவரின் அறிவுரைபடி தான் எடுக்கவேண்டும்... சாப்பிடலாம். வாரம் ஒருமுறை நல்லெண்ணெய் குளியல் அவசியம். பிறப்புறுப்பில் பூஞ்சை அல்லது நுண்ணுயிர் தொற்று இருக்கும்பட்சத்தில், உரிய மருத்துவரை அணுகுதல் நல்லது.

### சினைப்பை முட்டை வளர்ச்சி குறைவாக இருப்பது.

கருமுட்டையானது சினைப் பையிலிருந்து கருப்பைக்கு வர தாமதிப்பது, ஹார்மோன் குறைபாடுகள், தைராய்டு ஆகியவையும்பெண்களைப்பொறுத்தவரை குழந்தையின்மைக்கு முக்கியக் காரணங்களாகக் கருதப்படுகின்றன.இவை எல்லாம் normal a இருந்தாலும் சிலருக்கு endometrium சரியாக அமையாமல் தன் வேலையை காமிக்கும்..

ஆண்களைப் பொறுத்தவரை, விந்தணு உற்பத்தி எண்ணிக்கை குறைவு, விந்தணு உற்பத்தியில்லாத ஆண்மைக் குறைவு, விந்தணுவின் இயக்கத்தில் குறைபாடு ஆகியவை முக்கியக் காரணங்கள். ஆண்களின் விந்தணு உற்பத்தி அதிகரிக்க, தினமும் காலையில் மாதுளையும், மாலையில் மஞ்சள் வாழையும் எடுத்துக்கொள்ள வேண்டும். முருங்கைப்பூ மற்றும் பாதாம் பருப்பு கலந்த பாலை இரவில் அருந்த வேண்டும். பயறு வகைகளையும், புரதச்சத்து நிறைந்த உணவுகளையும் எடுத்துக்கொள்ள வேண்டும். இது எல்லாம் உணவுபழக்கத்தில் மட்டுமே... இந்த குறைபாடுகளுக்கு ஆராய்ச்சி மூலமாக நிருப்பிக்கபட்ட மருந்துகள் ஆயுர்வேதத்தில் பரந்து இருக்கிறது..

### மகத்துவம் தரும் மாதுளை... பப்பாளி!

பெண்ணின் கருப்பையை பலப்படுத்தவும், வருங்காலத்தில் குழந்தையின்மையைத் தவிர்க்கவும், ஒரு பெண் பூப்படைந்து மாதவிடாய் ஆரம்பிக்கும் காலத்தில் இருந்து வாழ்நாள் முழுக்கவே பின்வரும் உணவுக்குறிப்புகளைப் பின்பற்றலாம். உளுந்தங்களி, கருப்பைக்கு மிகவும் நல்லது;. தோல் நீக்காத கறுப்பு உளுந்தை வாரம் ஒருமுறை எடுத்துக்கொள்ளலாம். நீர்ச்சத்து நிறைந்த பழங்கள் எடுத்துக்கொள்வதுடன் மாதுளை, பப்பாளி போன்ற பழங்களை அடிக்கடி உணவில் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

ஆண்களோ, பெண்களோ... பர்கர், பீட்ஸா மற்றும் துரித உணவுகளை உண்பதும் மலட்டுத்தன்மையை உண்டாக்கலாம். அதேபோல், உடற் பயிற்சியின்மையும் மலட்டுத் தன்மைக்கான காரணமாகலாம். சீரான உடற்பயிற்சி மேற்கொள்ளும் பெண்கள், கருப்பை கோளாறுகளைத் தவிர்க்கலாம்.

### உடற்பயிற்சி செய்வது... ஆண்களுக்கு ஆபத்தா?

'ஆண்கள் உடற்பயிற்சி செய்வதால் விந்தணு உற்பத்தி குறைய வாய்ப்பிருக்கிறது' என்றொரு தகவல் உண்டு. இது தவறான தகவல். ஆனால், உடற்பயிற்சிக்குத் தகுந்த, சத்தான உணவை எடுத்துக்கொள்ளாமல் இருப்பது, உடற்பயிற்சி மையங்களில் தரப்படும் புரோட்டீன் பவுடர்களை மருத்துவரின் பரிந்துரை இல்லாமல் எடுத்துக்கொள்வது ஆகியவை விந்தணு குறைபாட்டுக்கு காரணமாகலாம்

''உடல் உஷ்ணத்தை ஏற்படுத்தும் வகையில் நெருப்புக்கு அருகில் வேலை செய்பவர்களுக்கு விந்தணு குறைபாடு ஏற்பட வாய்ப்பிருக்கிறது''

### மூலிகை வைத்தியத்தில் தீர்வு!

''விந்தணு குறைபாடு, கர்ப்பப்பை அடைப்பு மற்றும் சினை முட்டை உற்பத்தியின்மை போன்றவையே குழந்தையின்மைக்கு முக்கியக் காரணங்கள். இவற்றை மூலிகை வைத்தியத்தின் மூலம் எளிதாக நிவர்த்தி செய்யமுடியும்''.

''ரசாயன இடுபொருள் பயன்பாட்டில் விளைந்த உணவுப் பொருட்கள், மது, புகை, மன உளைச்சல், குழந்தைப்பேற்றைத் தள்ளிப்போடுதல், உடல் பருமன் நோய் போன்ற பற்பல காரணங்களினால்.. ஏழை, பணக்காரர் பாகுபாடின்றி ஆண்,


பெண் மலட்டுத்தன்மை அதிகரித்து வருகிறது. இந்தப் பிரச்னையை எளிமையாகக் குணப்படுத்தி, பிறருடைய விந்தணு மற்றும் கருமுட்டை என தேடிக்கொண்டிருக்காமல், அந்தந்த ஜோடியினரே ஆரோக்கியமான குழந்தைகள் பெற்றுக்கொள்ள மூலிகை வைத்தியத்தில் அநேக வழிகள் உள்ளன. இதற்கு பொறுமை யும், ஒத்துழைப்பும் மிக அவசியம்

வெல்லம் உள்ளிட்ட பலவற் றைப் பயன்படுத்தி பெண்ணின் சினைமுட்டை உற்பத்தியைப் பெருக்கவும் வழிஉண்டு. பப்பாளி, அன்னாசிப்பழம் இரண்டையும் குறைபாடு உள்ள பெண்கள் சாப்பிட்டு வந்தால்.. முறையான மாதவிலக்கு சுழற்சி ஏற்படும். முறையான மூலிகை வைத்தியம் செய் தால்... கர்ப்பப்பை குறைபாடுகள், அடைப்பு, கட்டிகள் போன்றவற்றை கத்தியின்றி சரிசெய்யலாம்

அதிக குளிர்பிரதேசத்தில் கருத்தருக்க வாய்ப்பு கொஞ்சம் குறைவு..


குழந்தையின்மையைத் தவிர்க்க... கணவன்— மனைவி இருவரும் உடல் மற்றும் மனரீதியில் எடுக்க வேண்டிய முயற்சிகள், குழந்தையின்மை காரணமாக எதிர்கொள்ளும் சமூகத் தாக்குதலுக்கான மனநல ஆலோசனைகள் அதைவிட முக்கியம்.. ஏன் குழந்தை இல்லை என்ற பேச்சுக்கே இடமில்லை..

Dr எழில்மதி
வஷ்டா ஆயுர்வேத சிகிச்சைமையம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் வரும் பின்னே வெகுமதிகள் வரும் முன்னே!



நக்கீரன்

யானை வரும் பின்னே மணியோசை வரும் முன்னே. இது பழமொழி. தேர்தல் வரும் பின்னே வெகுமதிகள் வரும் முன்னே. இது புது மொழி. ஒன்ரேறியோ மாகாண லிபரல் கட்சி 2003 இல் இருந்து பதவியில் இருந்து வருகிறது. அதாவது மூன்றுமுறை தேர்தலில் வென்று தொடர்ச்சியாக ஆட்சியில் இருக்கிறது. பொதுவாக இரண்டு முறைக்கு மேல் ஒரு கட்சி ஆட்சியில் இருப்பதில்லை. தலையிடிக்கு தலையணையை மாற்றுகிற மாதிரி ஆட்சியில் உள்ள கட்சியை வீட்டுக்கு அனுப்பிவிட்டு எதிர்க்கட்சியை வாக்காளர்கள் பதவியில் அமர்த்துவார்கள். ஆனால் இந்த விதிக்கு லிபரல் கட்சி விலக்காக இருக்கிறது. சென்ற தேர்தல் யூன் 12, 2014 இல் இடம்பெற்றது. கருத்துக் கணிப்புக்கள் பழமைவாதக் கட்சித் தலைவர் ரிம் குடக் (Tim Hudak) ஆட்சியைப் பிடிப்பார் என எதிர்கூறல் கூறப்பட்டது. ஆனால் கடைசி நாட்களில் நிலைமை மாறியது. அதற்கு ஒரு காரணம் ரிம் குடக் தான் பதவிக்கு வந்தால் 100,000 அரச ஊழியர்களை வீட்டுக்கு அனுப்பப் போவதாகச் சபதம் செய்தது. தேர்தல் முடிவுகள் வந்த போது கத்லீன் வின் தலைமையில் உள்ள லிபரல் கட்சி ஆட்சியைப் பிடித்தது.

41 ஆவது ஒன்ரேறியோ மாகாண நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் 2014

| | லிபரல் | பழமைவாதக் கட்சி | புதிய சனநாயகம் |
|---|---|---|---|
| 2011 | 53 | 37 | 17 |
| 2014 | 58 | 28 | 21 |
| வேறுபாடு | 5 | 9 | +4 |
| விழுந்த வாக்குகள் | 1,862,907 | 1,506,267 | 1,144,576 |
| விழுக்காடு | 38.65 | 31.25 | 23.75 |
| சாய்வு | +1.00 | 4.20 | +1.01 |
| தலைவர் | கத்லீன் வின் | ரிம் குடக் | அன்றியா ஹோவாத் |
| தெரிவு | சனவரி 26, 2013 | யூன் 27, 2009 | மார்ச் 07, 2009 |

இப்போது வெளிவரும் கருத்துக் கணிப்புக்கள் ஆளும் லிபரல் கட்சியை மூன்றாவது இடத்துக்குத் தள்ளியுள்ளது. போரம் (Forum) நிறுவனம் ஏப்ரில்10 இல் எடுத்த கருத்துக் கணிப்பு பழமைவாதக் கட்சிக்கு 38 விழுக்காடு ஆதரவும் புதிய சனநாயகக் கட்சிக்கு 31 விழுக்காடும் லிபரல் கட்சிக்கு 22 விழுக்காடு ஆதரவும் இருப்பதாகத் தெரிவிக்கிறது. முதலமைச்சர் கத்லீன் வின் அவர்களது தனிப்பட்ட செல்வாக்கு அதல பாதாளத்தில் இருக்கிறது. அடுத்த முதலமைச்சர் யார் என்ற கேள்விக்கு பற்றிக் பிறவுண் 21 விழுக்காடு ஆதரவும் அன்றியா ஹோவார்த் 19 விழுக்காடு ஆதரவும் கத்லீன் பன்னிரண்டு விழுக்காடு ஆதரவும் தெரிவித்துள்ளார்கள். இருபத்தெட்டு விழுக்காடு யாருக்கும் தங்கள் ஆதரவு இல்லை என்று கைவிரித்துள்ளார்கள்.

தேர்தலுக்கு இன்னும் 13 மாதங்கள் இருப்பதால் இந்தக் காட்சி மாறலாம். லிபரல் கட்சியின் நிதி அமைச்சர் தனது வரவு — செலவு அறிக்கையில் அறிவித்துள்ள வெகுமதிகள் லிபரல் கட்சியின் தலைவிதியை மாற்றி அமைக்கலாம். அதற்கான வாய்ப்பு இருக்கிறது.

ஒன்ரேறியோ நிதி அமைச்சர் சார்ல்ஸ் சூசாவின் 2017—2018 வரவு — செலவு அறிக்கை கடந்த ஏப்ரில் 27 அன்று மாகாண நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. செலவு 133.9 பில்லியன் (ஒரு பில்லியன் =100 கோடி). பற்றாக்குறை 4.3 பில்லியன் டொலர். இந்தப் பற்றாக்குறை அடுத்த 2018—2019 நிதி ஆண்டில் நிரப்பப்பட்டு செலவும் வருவாயும் சமன்படுத்தப்படும்.

இதன் மூலம் 2008 இல் வரவு — செலவு அறிக்கை சமன் படுத்தப்படும் என்ற வாக்குறுதியை லிபரல் அரசாங்கம் நிறைவேற்றியுள்ளது. அப்போது 19 பில்லியன் டொலர் பற்றாக் குறை இருந்தது. இந்தப் பற்றாக்குறை வரவு — செலவுத் திட்டத்தில் அரசியலும் கலந்துள்ளது. பற்றாக்குறையை சம்பளங்களை மட்டுப்படுத்துவதன் மூலமும் வருமானத்தைக் கூட்டுவதன் மூலமும் சரி செய்யப்பட்டது.

ஆனால் எதிர்க்கட்சித் தலைவர் பற்றிக் பிறவுண் "புத்தகங்களை சோடித்திருக்கிறார்கள்" என வருணித்துள்ளர். நிதி அமைச்சரின் வரவு — செலவு அறிக்கையில் பின்வரும் வெகுமதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

(1) அடுத்த மூன்று ஆண்டுகளில் நல்வாழ்வுக்கு 78 பில்லியன் டொலர் செலவழிக்கப்படும்.

(2) இருபத்துநான்கு அகவைகுக் குறைவான 4 மில்லியன் சிறார்களின் மருத்துவ திட்டத்துக்கு 465 மில்லியன் செலவழிக்கப்படும். தேவையான மருந்து விலையில்லாது கொடுக்கப்படும்.

(3) புகையிலை வரி அடுத்த 3 ஆண்டுகளுக்கு ஒரு காட்டனுக்கு 10 டொலர் அதிகரிக்கப்படும். உடனடியாக 2 டொலர் அதிகரிக்கப்படும்.

(4) உயர் பள்ளி மற்றும் உயர்தர பள்ளி மாணவர்களது வேலை தொடர்பான தொழிற் பயிற்சிக்காக 190 மில்லியன் ஒதுக்கப்படும்.

(5) நான்கு அகவை மட்டும் உள்ள குழந்தைகள் பராமரிப்புக்கு 24,000 இடங்கள் உருவாக்கப்படும்.

(6) வெளிநாட்டவர் வாங்கும் வீடுகளுக்கு 15 விழுக்காடு வரி விதிக்கப்படும்.

(7) ஏற்கனவே அறிவித்தது போல பல்கலை மாணவர்களுக்கு கல்விக் கட்டணம் இல்லை.

(8) ஓசாப் பட்டதாரிகள் 35,000 டொலர் சம்பாதிக்கப்படத் தொடங்கிய பின்னர் கடனைத் திருப்பிக் கட்டலாம். முன்னர் இது 25,000 டொலர் ஆக இருந்தது.

(9) வீட்டுக் குடிகூலி கட்டுப்படுத்தப்படும்.

(10) இரண்டு மருத்துவ மனைகள் வின்சர் மற்றும் நயக்கரா நகரங்களில் கட்டப்படும்.

(11) 2,000 வீடுகள் கட்டும் திட்டத்துக்கு பயன்பாட்டில் இல்லாத 75 — 100 மில்லியன் பெறுமதியான நிலம் ஒதுக்கப்படும்.

(12) எரிபொருளின் விலை ஒரு லிட்டருக்கு 4.3 சதம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

மின்சாரக் கட்டணைத்தை 25 விழுக்காட்டால் குறைக்கப் போவதாக ஒன்ரேறியோ மாகாண அரசு கடந்த மாதம் அறிவித்திருந்தது. அது இந்தக் கோடை காலத்தில் நடைமுறைக்கு வர இருக்கிறது. அதற்கு முன்னர் சனவரி முதல் நாள் முதல் ஒருங்கமைந்த 8 விழுக்காடு வரி(HST) குறைக்கப்பட்டது. மின்சாரக் கட்டணத்தைப் பார்த்து அதிர்ச்சியடைந்த மக்களுக்கு இந்தக் குறைப்புக்கள் பெரும் ஆறுதலையாக இருக்கும். இந்தக் குறைப்புகள் 2018 இல் எதிர் கொள்ள இருக்கும் தேர்தலை மனதில் வைத்துச் செய்யப்படுகிறது என்பதில் ஐயமில்லை. இருந்தும் என் அப்பன் குதிருக்குள் இல்லை என்று சொன்னவன் போல இதனை முதல் அமைச்சர் கத்லீன் வின் மறுத்திருக்கிறார்.

புதிய சனநாயகக் கட்சித் தலைவர் அன்றியா ஹோவார்த் அவர்களும் நல்வாழ்வுத் துறைக்கு ஆண்டுதோறும் 575 மில்லியன் டொலர்களை ஒதுக்குவோம் என்று சொல்கிறார். அவரது திட்டத்தின் படி 125 வகையான நோய்களுக்கான மருந்து விலையில்லாமல் கொடுக்கப்படும். லிபரல் அரசின் நல்வாழ்வு பராமரிப்புத் திட்டம் தங்களது திட்டத்தோடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒப்பிடும் போது கிட்டவும் வர முடியாது எனச் சொல்கிறார்.

எதிர்க்கட்சித் தலைவர் பற்றிக் பிரவுண் தான் அன்றியா ஹோவார்த் அவர்களது திட்டத்தை ஆதரித்தாலும் அதற்கான பணம் எங்கிருந்து வரப் போகிறது என்பதை விளக்க வேண்டும் என்று கேட்டுள்ளார். நாட்டில் 1,300 வித்தியாசமான மருந்துகள் விற்கப்படுகின்றன.

நிதி அமைச்சர் சார்ல்ஸ் சூசா வரவு — செலவு அறிக்கையை பேரளவு சமன்படுத்த முடிந்தமைக்கு முக்கிய காரணம் ஒன்ரேறியோ மாகாணத்தின் பொருளாதார வளர்ச்சி ஏறுமுகமாக இருப்பதே. அதன் வளர்ச்சி கனடா உட்பட ஜி7 நாடுகளது பொருளாதார வளர்ச்சியைவிட அதிகமாக இருக்கிறது. கனடாவில் வேலை இல்லாதோர் விழுக்காடு 2017 ஆண்டின் தொடக்கத்தில் 7.2 விழுக்காடாக இருந்தது. இது ஒன்ரேறியோ மாகாண வேலையற்றோர் விழுக்காட்டை (6.7 விழுக்காடு) விட 0.5 கூடுதலானது. 2009 ஆண்டு முதல் 600,000 வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளது என்றும் வேலையற்றோர் விழுக்காடு 2019 ஆண்டனலில் 6.1 விழுக்காடாகக் குறையும் என மாகாண அரசு சொல்கிறது.

இந்த ஆண்டு மார்ச் 31 வரை ஒன்ரேறியோ அரசின் கடன் சுமை 296.1 பில்லியன் டொலர்கள் ஆகும். இது அடுத்த ஆண்டு 308.3 பில்லியன் ஆக உயரும். தற்போது மாகாண அரசு வரலாற்றில் மிகக் குறைந்த வட்டி விழுக்காடு நடைமுறையில்



அறிவித்தல் கொடுக்கப்பட்டது. இதில் 250 பேர் மீது வழக்குத் தொடரப்பட்டது.

மாகாண அரசு சில்லறை விற்பனையில் இருந்து வரும் வருவாயை அதிகரிக்க முனைப்பாக உள்ளது. இதன் நிமித்தம் இலத்திரனல் விற்பனையை மறைக்க அல்லது குறைத்துக் காட்ட உதவும் மென்பொருள் (zappers) பாவனை அல்லது தொழில் நுட்பத்தைப் பயன்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது. விற்பனையைக் குறைத்துக் காட்டுவதன் மூலம் அங்காடிகள் அரசுக்குக் கட்ட வேண்டிய வரிப் பணத்தைக் குறைத்துக் காட்டுகின்றன. பாவனையாளர்களிடம் இருந்து அறவிடப்படும் 13 விழுக்காடு

வேண்டும். குடும்ப வருமானம் 83,000 டொலருக்கு குறைவாக இருந்தால் அந்த மாணவர்களுக்கு மானியம் வழங்கப்படும். ஓசாப் திட்டத்தின் கீழ் கடன் கொடுக்கும் தொகை அதிக வருமானம் உள்ள குடும்பத்தில் இருந்து வரும் மாணவர்களுக்கு 10,000 டொலர் ஆக மட்டுப்படுத்தப் பட்டுள்ளது.

இப்போது 150 பேரங்காடிகள் வைன் விற்பனையில் ஈடுபட்டுள்ளன. மேலும் 70 புதிய பேரங்காடிகளில் ஆண்டு இறுதியில் 35 வகை உள்நாட்டு வைன், 35 வகை வெளிநாட்டு உள்நாட்டு வைன் விற்பனை செய்யப்படும். 2025

பாதிப்பு, பயம், நரம்புத் தளர்ச்சி, தோல் தொடர்பான வியாதிகள், ஊட்டச்சத்துக் குறைபாடு, வயிற்றுப்புண், வாதம், மஞ் சள்காமாலை, புற்றுநோய் அபாயம், கல்லீரல் வீக்கம் எனப் பல்வேறு பாதிப்புகள் ஏற்படுகின்றன.

மாகாண அரசு ஒன்றுக்கு ஒன்று எதிர்மாறான கொள்கையை ஒரே நேரத்தில் கடைப்பிடிக்கிறது. வருவாயைப் பெருக்க மது விற்பனையை அதிகரிப்பது, அந்த வருவாயை மதுவினால் வரும் உபாதைகளுக்குச் செலவழிப்பது அரசின் கொள்கையாக இருக்கிறது. மது ஒழிப்பு கனடா போன்ற நாடுகளில் நினைத்தும் பார்க்க முடியாத காரியம் ஆகும்.

**2002 இல் நடைபெற்ற ஆய்வில் மது அருந்துவதால் கனடாவுக்கு ஓர் ஆண்டில் 14.6 பில்லியன் டொலர் இழப்பு ஏற்படுகிறது.**

இருந்தும் 11.8 பில்லியன் டொலர்களை வட்டியாயகக் கொடுக்கிறது. இந்தச் செலவினம், நல்வாழ்வு மற்றும் கல்வி நீங்கலாக, அதிக டொலர்கள் செலவழிக்கப்படுகிறது. பொது மக்கள் தங்களுக்கு வேண்டிய சேவையை கணினி வாயிலாக பெற்றுக் கொள்ளும் வசதி மேலும் அதிகரிக்கப்பட இருக்கிறது.

பாதாள பொருளாதாரத்தின் மூலம் கிடைக்கும் வருவாய்க்கு வரி கட்டாது ஏய்ப்பவர்கள் மீது மாகாண அரசு கடும் நடவடிக்கை எடுத்து வருகிறது. இதற்காக சிறப்புப் பயிற்சி பெற்ற கணக்காய்வாளர்களைப் பணிக்கு அமர்த்தி உள்ளது. மாகாண அரசு 2013 — 2014 நிதி ஆண்டுகளுக்குப் பின்னர் 930 மில்லியன் டொலர்களை வரி ஏய்ப்பவர்களிடம் இருந்து அறவிட்டுள்ளதாக புளுகுகிறது. சென்ற ஆண்டு மட்டும் 330 மில்லியன் அறவிடப்பட்டதாம். இதில் 630 மில்லியன் மத்திய அரசுக்குரிய தொகை. மிகுதி 300 மில்லியன் டொலர் மாகாண அரசுக்குரியது.

புள்ளிவிபரத் திணைக்களம் 2012 ஆம் ஆண்டில் பாதாள பொருளாதாரத்தின் பெறுமதி 42.4 பில்லியன் டொலர் அல்லது 2.3 விழுக்காடு என மதிப்பிட்டுள்ளது. 2014 ஆம் ஆண்டு தொடக்கம் வீடுகளுக்கு கூரை மாற்றுவோரை இலக்கு வைத்து நடத்திய சோதனைகளின் போது நல்வாழ்வு, பாதுகாப்பு, ஆதாயத்தைக் குறைத்துக் காட்டிய 1,700 பேருக்கு

விற்பனை வரியையும் விழுங்கி விடுகின்றன.

கனடா வருவாய் வாரியம் 12 வணிகர்கள் மீது விற்பனையை குறைத்துக் காட்டிய குற்றத்துக்காக வழக்குத் தொடரப்பட்டது. இதன் மூலம் 835,000 டொலர் வரி அறவிடப்பட்டது. இப்படியான மோசடியில் ஈடுபடுகிற வணிகர்களுக்கு முதல் குற்றத்துக்கு 5,000 டொலர் தண்டமும் அப்படியான கருவிகளை தயாரித்து அல்லது விற்பனை செய்வோருக்கு 500,000 டொலர் தண்டமும் 2 ஆண்டு சிறைத் தண்டனையும் வழங்கப்படும். ஆனால் இதுவரை யாரும் அப்படித் தண்டிக்கப்படவில்லை. கியூபெக் மாகாணத்தில் இயங்கும் உணவங்கள் தங்களது அலகுகளை ( modules) வருமான வரி வாரிய கணினிகளோடு இணைத்து இருக்கிறார்கள். இந்த ஏற்பாட்டால் முதல் ஆண்டில் மட்டும் 160 மில்லியன் டொலர் அறவிடப்பட்டுள்ளது. மேலும் 2018— 2019 வரி ஆண்டுக்கு இந்த தொகை 2.1 பில்லியன் டொலராக அதிகரிக்கலாம் என எதிர்பார்க்கப் படுகிறது.

2017 — 2018 கல்வி ஆண்டில் குடும்ப வருமானம் 50,000 டொலருக்குக் கீழே உள்ள குடும்பங்களைச் சார்ந்த மாணவர்கள் கல்லூரியில் அல்லது பல்கலையில் படித்தால் அவர்கள் கல்விக் கட்டணம் செலுத்தத் தேவையில்லை. மாணவர்கள் வீட்டில் அல்லாது வெளியில் இருந்து படிக்க

ஆண்டளவில் ஒன்ரேறியாவில் உள்ள 1,500 மளிகைக் கடைகளில் 300 மளிகைக் கடைகளில் மது விற்பனை செய்யப்படும். இனிமேல் குடிமக்கள் கடைகளில் பால்கட்டி (cheese) வாங்கும் போது வைனும் வாங்கலாம் என மகாண முதலமைச்சர் பெருமைப்படுகிறார். இதே வேகத்தில் போனால் ஒன்ரேறியோ தண்ணீரில் தள்ளாடும் காலம் மிக விரைவில் வரலாம். மேற்கு நாட்டவர் அளவோடு குடிப்பார்கள். எங்கடை ஆட்கள் அப்படியில்லை. கல் தோன்றி மண் தோன்றா காலத்தே முன் தோன்றிய மூத்த பெருங்குடி மக்கள்.

2002 இல் நடைபெற்றற ஆய்வில் மது அருந்துவதால் கனடாவுக்கு ஓர் ஆண்டில் 14.6 பில்லியன் டொலர் இழப்பு ஏற்படுகிறது. இதில் 7.1 பில்லியன் டொலர்கள் மறைமுக செலவாகவும் 3.3 பில்லியன் டொலர்கள் மருத்துவமனை பராமரிப்புச் செலவாகவும் மேலும் 3.1 பில்லியன் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கும் செலவாகிறது. அதே சமயம் புகை பிடிப்பதால் 17 பில்லியன் டொலர் இழப்பு ஏற்படுகிறது.

மது அருந்திவிட்டு வண்டிகள் ஓட்டுவதால் வாகன விபத்துக்கள் ஏற்படுகின்றன. ஆயிரக்கணக்கான உயிரிழப்புக்கள், குடும்பச் சிக்கல்கள், சமூகச் சிக்கல்கள், வன்முறை, மனச்சோர்வு, சிந்திக்கும் திறனில்

கத்லீன் வின் ஒரு அசாதாரண அரசியல்வாதி என்பதில் ஐயம் இல்லை. நிறையப் படித்து பட்டங்கள் வாங்கியிருக்கிறார். முதலமைச்சராக வருமுன் பல அமைச்சுகளுக்கு பொறுப்பாக இருந்திருக்கிறார். கடுமையாக உழைப்பாளி. பார்ப்பதற்கு மிக எளிமையாக இருக்கிறார். உருவு கண்டு எள்ளாமைக்கு முதலமைச்சர் நல்ல எடுத்துக்காட்டு. 2003 இல் மாகாண நாடாளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்ட கத்லீன் வின் 2013 இல் ஒன்ரேறியோ மாகாணத்தின் முதல் பெண் முதலமைச்சர் ஆவார். ஓரினச்சேர்க்கைப் பெண் முதலமைச்சர் என்பது இன்னொரு சாதனை. அவருக்கு 3 வளர்ந்த பிள்ளைகளும் 3 பேரப்பிள்ளைகளும் கணவியும் இருக்கிறார்கள். பொதுவாக அவரது அரசியல் எதிரிகள் அவரை குறைத்து மதிப்பிடுவதும் கத்லீன் வின் அதனை மீறி வெற்றிகளைக் குவிப்பதையும் வழக்கமாகக் கொண்டுள்ளார்.

மாகாண முதலமைச்சர் கருத்துக் கணிப்பில் அதல பாதாளத்தில் இருப்பதைப் பார்த்துவிட்டு பல மாகாண நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேர்தலுக்கு முன் முதலமைச்சரை கழட்டிவிட யோசித்தார்கள். அவர்களுக்கு இந்த வரவு — செலவு அறிக்கை நம்பிக்கையைக் கொடுத்திருக்கும். ஆட்சியின் சாதனைகளை வைத்துக் கொண்டு அடுத்த தேர்தலில் அவர்கள் கரைசேர வாய்ப்பு இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்லை ஆனந்தன்

# வலி சுமக்காத மேனியர்





வடமாகாணத்தின் கல்வி நிலை கடந்த ஐந்து வருடங்களாக 9ஆவது மாகாணமாக இருந்து வருவது என்பது எமது கல்வியின் இருப்பைக் கேள்விக்குரியதாக்கியுள்ளது

அண்மையில் வெளியாகிய கல்வி பொதுத் தராதர பெறுபேறுகளின் முடிவின்படி வடமாகாணம் 9 ஆவது நிலையிலும் கிழக்கு மாகாணம் 8 ஆவது நிலையிலும் இருப்பதாகப் புள்ளி விபரங்கள் காட்டுகின்ற அதேவேளை சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற முதல் 25 வலயங்களில் வடமாகாணத்தில் உள்ள எந்த ஒரு வலயமும் இடம் பெறவில்லை என்பது தான் வலியைத் தருகின்றது.

2009 ஆம் ஆண்டிற்கு முன்னர் தமிழீழ விடுதலைப் புலிகளின் நிர்வாகக் கட்டமைப்பு இருந்த காலத்தில் முதல் ஐந்துக்குள் இருந்த வட மாகாணம் இன்று ஏன் இந்த நிலையை அடைந்து காணப்படுகின்றது என்பது பற்றி கல்வித் துறை சார்ந்த எவருமே சிந்தித்ததாகத் தெரியவில்லை. ஏனெனில் எங்களுக்குள் கடந்த 5 வருடங்களாக ஒரு போட்டித் தன்மை காணப்படுகின்றது.. ஒன்பதாவது இடத்தில் வடக்கா கிழக்கா முன்னில வகிப்பது என்ற போட்டியில் வடமாகாணம் தொடர்ந்து தனது நிலையைக் காப்பாற்றி வருகின்றது.

வடமாகாணம் கல்வியில் பின்னடைவைச் சந்தித்துள்ளது பற்றிய எமது கவலையை வடமாகாணத்தில் உயர் பதவி வகிக்கும் ஒரு கல்வி அதிகாரியிடம்; தெரிவித்தபொழுது அவர் தெரிவித்த கருத்து மிக வேடிக்கையாகவும் நகைப்பாகவும் இருந்தது. அவர் "வடமாகாணம் கல்வியில் கீழ் நோக்கிப் போகவில்லை என்பதை நீங்கள் புரிந்து கொள்ளவேண்டும்.இது பற்றி ஊடகங்களும் சில அரசியல்வாதிகளும் தான் மிகைப்படுத்தி எழுதிக் கொண்டிருக்கின்றார்கள். எங்களுடைய பெறுபேறுகள் தொடர்ந்தும் 60 வீதத்திற்கு மேல்தான் இருக்கின்றது ." என்று கூறியபொழுது நான் அவரைப் பார்த்து " அதிர்ஸ்டவசமாக இலங்கையில் பத்து மாகாணங்கள் இல்லாமல் போய்விட்டது.. அவ்வாறு இருந்திருந்தால் வடமாகாணம் கீழே போய் இருக்குமா அல்லது மேலே போய் இருக்குமா என்று நீங்கள் தான் கூறவேண்டும். அழிதுவேளை வடமாகாணம் கீழே போகவில்லை மற்றைய மாகாணங்கள் மேல்நோக்கிப் போய்க் கொண்டிருக்கின்றன." என்று நான்- கூறியபொழுது அவருக்குச் சிறிது கோபம் வந்து விட்டது.

அதேபோன்று யாழ்ப்பாண வலயத்தில் தான் அதிகூடியள வில் 119 மாணவர்கள் 9 ஏ எடுத்ததாகப் பெருமையுடன் கூறிய ஒரு கல்வி அதிகாரியிடம் யாழ் வலயத்தில் மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்குகின்ற தேசிய பாடசாலைகளான வேம்படி மகளிர் கல்லூரியில் 52மாணவர்களும் யாழ் இந்துக் கல்லூரியில் 36 மாணவர்களும் திருக்குடும்பக் கன்னியர் மடத்தில் 3 மாணவர்களுமாக 91 மாணவர்கள் 9 ஏ சித்தி பெற்றிருக்கின்றார்கள் அதேவேளை இவர்களில் கூட 50 வீதத்திற்கும் குறைவானவர்களே 9 ஏ சித்தியடைந்ததனர் என்பது வேறு விடயம்.. அதுவும் புலமைப் பரிசில் பரீசையில் பெற்ற வெட்டுப் புள்ளிகளுக்கு மேலாகவே பெற்ற மாணவர்களை இந்த தேசிய பாடசாலைகளும் உள்வாங்கித் தமது கற்றல் செயற்பாட்டை மேற்கொள்ளும் பொழுது ஆகக் குறைந்தது 75 வீதத்திற்கும் அதிகமான மாணவர்களை அல்லவா அவர்கள் 9 ஏ சித்தி பெற வைத்திருக்க வேண்டும். இந்த நிலையிலும் யாழ்ப்பாண வலயத்தில் இந்த மூன்று தேசிய பாடசாலைகளின் கல்வி அபிவிருத்தி தொடர்பாக யாழ் வலயம் எவ்வித நடவடிக்கையையும் எடுக்கவில்லை என்பது யாவரும் அறிந்த விடயமே. அவர்களுக்கு எந்தவகையிழிலுனும் வழிகாட்டல்கள் மற்றும் பின்னூட்டல்கள் வழங்கப்படாத நிலையில் தேசியப்பாடசாலைகளின் பெறுபெறுகளுக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் உரிமை கோரமுடியாது. இந்த நிலையில் தேசியப் பாடசாலைகளின் பெறுபேறுகள் தவிர யாழ்வலயத்தில் 30 மாணவர்களே 9 ஏ சித்தியடைந்தனர் என்ற உண்மையை ஒவ்வொருவரும் எற்றுக் கொண்டு அதற்கான பரிகார நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும்..

இலங்கையின் மூளை என்று வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணம் இன்று என்ன நிலையில் இருக்கின்றது என்பதைக் கல்வி அதிகாரிகளும் அதிபர்களும் கல்விச் செயலாளரும் மாகாணக் கல்விப் பணிப்பாளரும் தான் சிந்திக்க வேண்டும். அப்படிப் பார்க்கப்போனால் முதலாவது இடத்தில் வடமராட்சி வலயமும் இரண்டாவது நிலையில் வவுனியா தெற்கு வலயமும் மூன்றாவது நிலையில் யாழ் வலயமும் இருக்கின்றது என்பதையும் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

மேலும் யாழ்ப்பாண மாவட்டம் கல்விப் பெறுபேற்றில 21 ஆவது மாவட்டமாக காணப்படுவதும் கல்வியுடன் தொடர்புடைய அனைத்துத் தரப்பினருக்கும் தலைக் குனிவை ஏற்படுத்திய ஒரு விடயமாகவே பார்க்கப்படுகின்றது.

அந்த வகையில் 2016க்குரிய க.பொ.த. சாதாரண தர [illegible] மொத்தமாகப் [illegible] அதன் பகுப்பாய்வு தொடர்பாகப் பார்த்து வலி சுமக்கவேண்டியவர்கள் இன்று மௌனமாக இருப்பது தான் கல்வியாளர்கள் மற்றும் பெற்றோர் மட்டத்தில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

| | வலயம் | எல்லாப் பாடங்களிலும் விசேட சித்தி (9A) | எல்லாப் பாடங் களிலும் சித்திபெறாதோர் (9 F) |
|---|---|---|---|
| 1 | யாழ்ப்பாணம் | 119 (29) | 113 |
| 2 | தீவகம் | 0 | 38 |
| 3 | தென்மராட்சி | 12 | 72 |
| 4 | வலிகாமம் | 18 | 165 |
| 5 | வடமராட்சி | 49 | 52 |
| 6 | கிளிநொச்சி | 7 | 170 |
| 7 | துணுக்காய் | 0 | 26 |
| 8 | முல்லைத்தீவு | 7 | 53 |
| 9 | வவுனியா வடக்கு | 0 | 57 |
| 10 | வவுனியா தெற்கு | 34 | 12 |
| 11 | மன்னார் | 18 | 15 |
| 12 | மடு | 0 | 6 |
| | மொத்தம் | 264 | 779 |

இந்த அட்டவணையின் படி வடமாகாணத்தில் 264 மாணவர்கள் ஒன்பது பாடங்களிலும் ஏ சித்தி பெற்றுள்ள அதே நேரத்தில் 779 மாணவர்கள் சகல பாடங்களிலும் சித்தி பெறத் தவறியமைக்கு யார் பொறுப்பேற்கவேண்டும்.கல்வித் துறையின் அதி உச்ச நிலையில் இருக்கும் மாகாண முதலமைச்சரா அல்லது கல்வி அமைச்சரா அல்லது கல்விச் செயலாளரா அல்லது மாகாணக் கல்விப் பணிப்பாளரா அல்லது சம்பந்தப்பட்ட வலயங்களின் கல்விப் பணிப்பாளர்களா அல்லது அதிபர்களா அல்லது சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களா அல்லது ஆசிரியர்களா என்பது தெரியவில்லை. ஏனெனில் எங்களுடைய சொந்தப் பிள்ளை புலமைப் பரிசில் பரிட்சையில் சித்தி பெற வைப்பதற்காகவும்இக. பொ.த. சாதாரண மற்றும் உயர்தரப் பரீட்சைகளில் அதிகூடிய பெறுபேறுகளைப் பெறுவதற்காக அவர்கள் எடுத்துவரும் முயற்சிகள் வார்த்தைகளில் வடிக்க முடியாது... ஆனால் இவ்வளவு பாரிய பொறுப்பைச் சுமந்து நின்று வடமாகாணத்தின் கல்வித் தரத்தை உயர்த்தி வடமாகாணத்தின் கௌரவத்தை நிலைநாட்டவேண்டியவர்கள் அந்த வலியைச் சுமக்காது வாளாவிருப்பதை எவ்வளவு காலத்திற்குத் தான் வடமாகாண சமுகம் பார்த்துக் கொண்டு இருக்கப் போகின்றது.?

வடக்கு கிழக்கு மாகாணத்தில் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியில் பின்வரும் வசதிகளும் வாய்ப்புக்களும் மறுக்கப்பட்டிருந்தன:

1. பொருளாதாரத் தடை
2. கல்வி உபகரணங்கள்கற்றல் கற்பித்தல் சாதனங்களை எடுத்துச் செல்வதற்கான தடைகள்
3. ஆசிரியர் பற்றாக்குறை
4. புதிய கல்வி மறுசீரமைப்பு மற்றும் நவீன கற்றல் கற்பித்தல் முறைகள் தொடர்பான பயிற்சிகள் கொழும்பில் நடத்தப்படும் பொழுது அதில் பங்கு பற்றுவதற்கு யாழ்ப்பாணம்இவன்னிப் பிரதேசற்கனளச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகளும், இராணுவக் கெடுபிடிகளும்
5. வகுப்பறைக் கட்டிடங்கள்இ ஆய்வு கூடங்களஇதளபாடங்கள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகள் இன்மை
6. போக்குவரத்து வசதிகளுக்கு விதிக்கப்பட்டிருந்த தடைகள்
7. இளம் ஆசிரியர்களும் உயர்தர மாணவர்களும் திடீர் சுற்றி வளைப்புக்களின் பொழுது கைது செய்யப்படுதல்

போன்ற இத்தகைய பாரதூரமான பாதகமான ஒரு சூழ் நிலையில் அரசியல்வாதிகளின் தலையீடுகள் இன்றி விடுதலைப்புலிகளின் அறிவுறுத்தல்களில் அன்று மிகச் சிறப்பாகச் செயற்பட்ட கல்வி அதிகாரிகள் , சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள் மற்றும் அதிபர்கள், இன்று பாடசாலைகளில் எல்லா வசதிகளும் அதிகரித்திருந்த நிலையில் கல்வித் தரம் கீழ் நோக்கிப் போய்க் கொண்டிருக்கின்ற நிலையில் ஏன் மௌனம் சாதிக்கின்றனர். அன்று விடுதலைப் புலிகளின் நிர்வாகக் காலத்தில் தாம் தவறுகள் விட்டால் தண்டிக்கப்பட வேண்டிவரலாம் என்ற அச்சத்தில் சரியானதைச் சரியான நேரத்தில் சரியாகச் செய்து வந்ததால், அன்று பரீட்சைப் பெறுபேறுகள் மட்டுமல்லாது பாடசாலைகளின் மாணவர்களின் ஒழுங்கு கட்டுப்பாடுகளும் மிகச் சிறப்பாகப் பேணப்பட்டிருந்தன..ஆனால் இன்று என்ன தவறுகள் விடப்பட்டாலும், பாடசாலைகளின் கல்வித் தரம் எப்படித்தான் கீழ்நோக்கிப் போனாலும், மாணவர்களின் ஒழுக்க விழுமியங்கள் எப்படித்தான் சீரழிந்து போனாலும், எமக்கென்ன என்று கண்டும் காணாதது போல் இருக்கின்ற நிலை மாறவேண்டும். வடமாகாணத்தினதும்,கிழக்கு மாகாணத்தினதும் கல்வியின் தரத்தை மேலும் உயர்த்தவேண்டும் என்ற துடிப்புடன் செயற்பட ஒவ்வொருவரும் முன்வர வேண்டும்..அப்பொழுதுதான் எமது குழந்தைகளின் இழந்து போய்க் கொண்டிருக்கும் கல்வியை மீளக் கட்டி எழுப்பமுடியும்...அந்த வலியை எமது கல்விச் சமுகம் சுமப்பதற்கு முன்வருமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கௌரவமாகவே கொள்ளப்படும்.
Sinnathamby Gunaseelan

Laleesan Laleesan : சாதனைப் பயணத்தை நிறைவு செய்து கனடாவில் பழைய மாணவர்களின் அன்பு மழையில் நனைந்து திளைத்து இன்று 19.04.2017 மீண்டும் யாழ். மண்ணில் கால் பதிக்கும் எங்கள் குணசீலன் சேரை வருக வருக என வரவேற்பதில் மகிழ்வெய்துகின்றேன்

Singarajah Vasantharuban: ஒருபடி மேல் உயர்ந்து வரும் குருவே வாழ்க வளமுடன்

Leenappu Ariyarajah Aruldasan: பாராட்டுக்களும் வாழ்த்துக்களும். சம காலத்தில் யாழ் பல்கலைக்கழகத்தில் சின்ன கிளை என்று சொல்லுகிறீர்கள் அது உங்களுடைய தன்னடக்கம் ஆசானே! ஆனால், அதுவே எங்களது மூலவேர்!!! A/L இற்கு போய் Bio stream ஐ தேர்ந்தெடுத்து Botany உங்களிடம் கற்பதென்பது ஓர் அதிஷ்டமான வரமே!! நன்றி Tamil News ekuruvi, எங்கள் கல்விக்கடவுளை உலகறியச்செய்தமைக்கு..இன்னுமொரு தாவரவியல் வகுப்பில் நடுங்கி நடுங்கி இருக்க ஆவலாக இருக்கிறது...

Nalayini Sugirthan : Love to hear sir's voice.... I'm really proud of you ....!!! Feeling of science hall tution centre...!!!! Good advices for parents!!!!!

Nageswary Siva : It was a great opportunity to listen Gunaseelan sir's valuable speech at JC Banquet Hall today. Felt like in the Botany class. Only difference sir didn't ask any questions from his students. Thank you sir for your advise.

# இகுருவி விருதுவிழா சின்னத்தம்பி குணசீலன் ஆசிரியருக்கான விருது

கடந்த வருடம் இலங்கையில் தமிழர் வாழும் இடங்களில் நடந்த புதிய வெளிச்ச நிகழ்வின் போது, வடக்கு கிழக்கில் மாணவர்களின் கல்வித்தரம் வீழ்ச்சியடைந்ததை அவதானித்தோம். யுத்தத்தின் பின்னரான கல்வியில் ஆசிரியர்கள் பற்றாக்குறை, அவர்களின் விழிச்சி நிலையினை யாழில் பல பாடசாலைகளில் நடத்திய புதிய வெளிச்ச நிகழ்வில் நாம் பெருமளவில் உணரக்கூடியதாக இருந்தது.

ஆசிரியர்களுக்கு தொடர்ச்சியான பயிற்சிகளை வழங்குதல்,வெளியிலிருந்து புதிய ஆசிரியர்களை அனுப்புதல், அல்லது அங்கிருக்கும் சிறந்த ஆசிரியர்களை இங்கண்டு அவர்களை கொண்டாடுதல். இவை மூன்றின் மூலம் நாம் மீண்டும் மாண்வர்களின் கல்வி வளர்ச்சியில் ஆசிரியர்கள் ஊடாக மாற்றம் கொண்டுவரலாம்,

யாழில் வடமராட்சியிலிருந்து, வலிகாமம், தென்மராட்சி மற்றும் வன்னி போன்ற அனைத்து இடங்களிலும் மாணவர்கள் மத்தியில் மூன்று சகாப்தமாக மாணவர்களாலும், அச் சமூகத்தாலும் கொண்டாடப்படும் ஆசிரியராக திரு சின்னத்தம்பி குணசீலன் ஆசிரியரை புதிய வெளிச்சமூடாக நாம் அறிந்தோம் . அது மட்டுமல்லாது எனது அன்புக்கும் மதிப்புக்குமுரிய ஆசானும் ஆவர்.

ஆசிரிய சேவையில் 30 வருடங்களுக்கு மேலாக சேவையாற்றிய 30 ஆயிரத்துக்கு மேற்பட்ட மருத்துவ பட்டதாரிகளை உருவாக்கிய சின்னத்தம்பி குணசீலன் ஆசிரியரை கனடாவுக்கு அழைத்து இகுருவி "சமுதாய சிற்பி விருது" வழங்கி கௌரவித்தது.

இதன் தொடர்ச்சியாக சமூகவலைத் தளங்களிலும், நேரிலும், தொலைபேசிகளில் வாழ்த்துக்கள் தெரிவித்தவர்கள் காலத்தின் தேவையை மிக பலமான பதிவாக பதிவிட்டுள்ளார்கள். பலர் அமெரிக்காவிலிருந்தும், கனடாவின் வேறு மாநிலங்களிலிருந்தும் குணசீலன் ஆசிரியரை வந்து பார்த்து தமது அன்பையும் நன்றியையும் தெரிவித்திருந்தார்கள். (ஆயிரத்துக்கும் அதிகமான Share & Likeகளும் எமக்கும் தாயகத்துக்கும் பிணைப்பை மிக அதிகமாக்கியது). தாயகத்திலும் இவ்விடயம் மிகப் பெரும் வரவேற்பை பெற்றிருந்தது.அங்குள்ள பத்திரிகைகளிலும், இணையத் தளங்களிலும், முகநூல் பக்கங்களிலும் பெரு வரவேற்பை பெற்றது .

இது ஒரு மிகப் பெரிய உன்னதநிலை. வைத்தியர்கள், பல் வைத்தியர்கள், மற்றும் பட்டதாரிகள் நுற்றுக்க்கணக்கானவர்கள் எமக்கு தமது பெரு நன்றியையும் ஆதரவையும் தொலைபேசியுடாகவும், நேரிலும் தெரிவித்தார்கள்.

நானும் ஒரு ஆசிரியரின் மகனாகவும், அவரது மாணவனாகவும், புலப்பெயர் சமூகமாகவும் அவருக்கு வழங்கிய விருதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

புதிய வெளிச்சம் தொடரும். சமூக, கல்வி, பொருளாதாரத்தில் உள்ள உளவியல் பிரச்சனைகளை இனங்கண்டு தொடர்ந்தும் உங்கள் ஆதரவுடன் பயணிப்போம்

திரு சின்னத்தம்பி குணசீலன் ஆசிரியர் அவர்கள் பற்றி இந்நாட்களில் முகநூல்பக்கங்களில்ஒருலட்ச்சத்துக்கும் அதிகமான வாழ்த்துக்களும், அவர் பற்றிய பதிவுகளும் தெரிவித்தவர்களில் ஒரு சில மட்டும்

Dr Prabu : சமுதாய சிற்பி எனக் குணசீலன் ஆசிரியர் கெளரவிக்கப்பட்டிருப்பது மிகவும் சந்தோசத்தினைத் தரும் விடயமொன்றாகும். மாணவர்களின் ஆசிரியராக மாத்திரமன்றி நல்ல ஆலோசகராகவும் புதிய முயற்சிகளை ஆர்வத்துடன் ஊக்குவிக்கின்ற ஓர் வழிகாட்டியாகவும் வாழ்கிறார். அவரின் ஆசியுடன் ஆரம்பிக்கப்பட்ட சுவடி எண்மிய நூலகமே இன்று சுவடி நிறுவகமாக (Suvadi & Seer Bio) வளர்ந்திருக்கிறது. சமுகப் பொறுப்பினை உயிரியலுடன் கலந்தூட்டிய எம் ஆசானுக்குக் கிடைக்கும் கௌரவம் உண்மையாய் உழைக்கின்ற எம் மண்ணின் அத்தனை நல்லாசான்களுக்கும் கிடைக்கிற மாணவராக இருந்தவர்.

Ro Rohini: சாதனைகள் படைத்து விருதினை தமதாக்கி நாடு திரும்பும் நம் ஆசானை பெருமையுடன் பாராட்டி வரவேற்கின்றேன்...

ப.தெய்வீகன்: குணசீலன். யாழ் மண் பெற்றெடுத்த மிகப்பெரிய ஆளுமை. கற்றல் — கற்பித்தல் நடவடிக்கைகளில் புதிய பரிணாமங்களை யாழ் மாணவர்கள் மத்தியில் தோற்றுவித்து அதன் ஊடாக இமாலய வெற்றிகளை குவித்த பெரும் சிகரம். யாழ்ப்பாணத்தின் மருத்துவத்துறையை இன்னொரு தளத்துக்கு கொண்டு சென்ற பெரும் பங்காளி. இன்னும் பல நூற்றாண்டுகளுக்கும்கூட அவரத பெயர் சொல்லும் சாதனைகளை மிகக்குறைந்த வயதிலேயே சிம்பிளாக சாதித்தவர்.

அவரை அண்மையில் கனடாவுக்கு அழைத்து கௌரவித்தவர்களை உண்மையில் கௌரவிக்கவேண்டும். தென்னிந்திய சினிமா நட்சத்திரங்களை கூட்டி வந்து காலில் விழுவதிலும் பார்க்க, இப்படியான எங்கள் மண்ணின் ஆளுமைகளை கௌரவம் செய்யவேண்டும். இவர்களை நாங்கள்தான் கொண்டாடவேண்டும்.

Maruthalingam Piratheepan: நிறைவான பணி மேலும் தொடர வாழ்த்துக்கள்

Dr Senthiru Sivaganeshan : With Guaseelan sir who makes ordinary students'dreams to do extra ordinary things.So proud to be your student sir.

Theepa Arikaran: Well done! He is the best teacher! I like the cake! How did it taste sir?

Siva Parameswaran: வாழ்வா இல்லை சாவா என்றிருந்த இக்கடடான 88 ,89 களில், கல்வி மட்டும் தான் உனக்கொரு விடிவை கொட்டுக்கமுடியும் என்று உணர வைத்து, அதனை எப்படி சுலபமாகவும் சுவையாகவும் கற்கலாம் என்றும் சொல்லிக்கொடுத்தவர்களில் முதன்மையானவர் நீங்கள்! நலமுடன் பல்லாண்டு வாழ வேல்லன் விநாயகனை வேண்டுகின்றேன்!!

Amutha James: சும்மா வேரின்













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org















Nalaayini Mohan : Finally I had a chance to meet my Teacher Gunaseelan (after 30 years) with his wife Vani. Thank you Kavitha ( Kavitha & myself were first students, when he was in final year) & Majuran for today's event. Without eKuruvi, we could not see him. Thank you so much. I believe, eKuruvi Aya will post all the photos and video (specially Sir's speech)

Senthuran Paramasamy: எனது தாவரவியல் குரு குணசீலன் மாஸ்ட்டரை இன்று சந்தித்ததை பெரும் பேறாக கருதுகிறேன். கடினமான ஆனால் கருணையுள்ளம் கொண்ட ஒரு மனிதர் என்னை ஆளாகியவர்களில் முக்கியமானவர். அவரின் பெருமை சொல்லில் அடங்காது. ஆசிரியராக, ஆசிரியர்கட்கு ஆசிரியராக இருப்பவர் இன்று நான் ஆசிரியராக அதிபராக இருப்பதற்கு காரணகர்த்தா. என்னுள் ஒரு விதையாக இருந்த அந்த ஆசிரியராகும் கனவுக்கு உரமிட்ட , தொடர்புகள் ஏதுமின்றி என்னை ஒரு ஏகலைவன் போல வழிநடத்திய குண சீலன். அவரிடம் நானும் எனது மனைவியும் கல்வி கற்றுருக்கிறோம் என்பதில் பெருமகிழ்ச்சி.

Mathulan Balachandran : one of the memorable teacher & very kind family friend . I am very happy sir.you are a God.

Ruby Karthik: எமது பெருமதிப்பிற்கும் பேரன்பிற்கும் உரிய ஆசான் குணசீலன் அவர்களிற்கு கனடா நாட்டில் சமுதாய சிற்பி விருது வழங்கி கௌரவிக்கப்பட்டதையொட்டி அவரை வாழ்த்துகின்றோம். பெருமகிழ்ச்சியடைகின்றோம். ஆசான் குணசீலன் அவர்களிடம் கல்வி கற்கும் வாய்ப்புக்கிடைத்ததை பெரும்பேறாக கருதுகின்றேன். கல்வித்துறையில் தற்போதுள்ள நிலைக்குவர மிகமுக்கியமானவராகவும் படிப்பதற்குரிய தூண்டுகோலாகவும் விளங்கியவர் ஆசான் குணசீலன் அவர்கள். அவருக்கு எனது எண்ணற்ற நன்றிகள். வாழ்நாளில் இதுவரை அவரைப்போன்ற வேறொரு ஆசிரியரை சந்திக்கவில்லை. அவரை ஒரு பண்பாளனாக, நல்லிதயம் கொண்டவராக, மிகச்சிறந்த ஆசிரியராக வளர்த்தெடுத்து எமக்குத்தந்த அவரது பெற்றோர்களை பாராட்டுகின்றோம். அத்துடன் அவரது எல்லா நற்பண்புகளும் மென்மேலும் மிளிரவும், உறுதுணையகவும் விளங்கும் அவரது துணைவியாருக்கும் எமது பாராட்டுக்களும் நன்றிகளும். அவர் எல்லா நலன்களும் பெற்று நல்ஆரோக்கியத்துடன் நீண்டகாலம் வாழவும், அவரது கல்விச்சேவை மென்மேலும் தொடரவும் இறைவனை வேண்டுகிறோம்.

ரூபி & கார்த்திக் : Selvarajah Gnanaraja நெருககடிகள் நிறைந்த காலத்தில் பெற்றுக்கொண்ட கலவிச் செல்வத்தினையும் பழைய நினைவுகளையும் மீட்டு நன்றி சொல்ல ஒரு அருமையான வாய்ப்பு

Mayuran Thirunavukkarasu: தங்களின் வகுப்பறையில் மீண்டும் வாழ்ந்துகொண்டிருக்கும் உணர்வை ஊட்டும் உங்கள் உரை— எங்களின் வரம் :) வாழ்த்துக்கள் Sir

Jeyaseelan Thanabalasingham: நானும் ஆசானுடைய மாணவன் என்பதில் பெருமையடைகின்றேன். அவருக்கு எனது இதயபூர்வமான வாழ்த்துக்கள்

Rajavathany Kamalanathan: எனது இதயபூர்வமான வாழ்த்துக்கள் ஆசானுக்கு!

Saraswathy Nadarajah: Wonderful teacher who has a lot of respect for his own teachers. We are proud of him

Vairamuthu Selvarajah : உயிரியலின் மீயொலியே நீடு வாழி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருவி விழா புகைப்படங்கள்..

இருவி விழா வர்த்தக விழாவாக வழமைபோல இம்முறையும் மண்டபம் நிறைந்த தமிழ் வர்த்தகர்கள், கல்வியாளர்கள், அரசியல் பிரமுகர்கள், எழுத்தாளர்கள் பங்குகொண்ட மிகப்பெரும் விருதுவிழாவாக கடந்தமாதம் ஏப்ரல் 02 ம் திகதி நடைபெற்று முடிந்தது .

புதிய வெளிச்ச தேடல்களுடன் வழங்கப்பட்ட விருதுகள், பேராசிரியர் ஜெயந்தஸ்ரீ பாலகிரிஷ்ணன் அவர்கள் தாயகம் சென்று வந்த பின்னரான அவரது உரை, என அனைத்துமே மிக நேர்த்தியாகவும், அரங்கமே அசையாமல் இரவு 10.30 மணிவரை நடைபெற்றது. இருவி ஐயாவுக்கு கனடிய பிரதமர் வாழ்த்துக்களை தெரிவித்திருந்தார்



இந்நிகழ்வினை இளம் சட்டத்தரணிகளான Caoutham Vasan மற்றும் Rishani Vettyvel ஆகியவர்கள் தொகுத்து வழங்கினார்கள்



பார்வையாளர்களை கவர்ந்த Kalaimanram Academy of Fine Arts and Yoga குழுவினர் வழங்கிய நாட்டிய நடனம்



தமிழ் தாய் வாழ்த்து மற்றும் கனடிய தேசிய கீதம் பாடிய ஆதித்தியா பிரபா, மற்றும் தாமிரா ரஜிகரன்



ஜெயகௌரி ஜெயச்சந்திரன் அவர்கள் வரவேற்புரை வழங்குவதை காணலாம்



Councillor நீதன் சாண் அவர்கள் பேராசிரியர் ஜெயந்தஸ்ரீ பாலகிரிஷ்ணன் அவர்களை கௌரவிப்பதை படத்தில் காணலாம்



பேராசிரியர் ஜெயந்தஸ்ரீ பாலகிரிஷ்ணன் அவர்கள் இருவி ஐயாவுக்கு கனேடிய பிரதமரின் வாழ்த்து மடலை வழங்குவதை படத்தில் காணலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Souls Unplugged இசைக்குழுவில் Divya vivekanandan மற்றும் Hariss



இகுருவி நிகழ்வுக்கு ஆதரவு தந்த Markham NS dental மற்றும் Ajax NS dental கிளைகளின் பல் வைத்தியர் Dr நளினி சுதர்சன் மற்றும் சுதர்சன் கோபால் அவர்களுக்கு ekuruvi சார்பாக நன்றி தெரிவிப்பதை படத்தில் காணலாம்



Inforce Life நிறுவன அதிபரும் supervisa.today என்னும் இணையத்தை அறிமுகப்படுத்தி அதனூடாக சூப்பர் விசா தொடர்பான சேவைகளை வழங்கிவரும் சந்திரன் இராசலிங்கள் அவர்களுக்கு இகுருவி நன்றி தெரிவிப்பதையும் காணலாம்



Thermocare Heating and Cooling Inc. மூலம் பல வருடங்களாக தமிழர்களுக்கு தேவையான Heating and Cooling சேவையினை வழங்கி வருகின்ற தயாளன் இராசையா அவர்களுக்கு இகுருவி நன்றி தெரிவிப்பதையும் காணலாம்





வீடு விற்பனை துறையில் பல வருடங்கள் தேர்ச்சி பெற்ற அனுபவமுள்ளவரான தீபன் ராஜ் அவர்களுக்கு இகுருவி நன்றி தெரிவிப்பதையும் காணலாம்.

A+ Travel & Tour நிறுவனத்தின் அதிபரும் A+ Driving School நடத்துனரும் வீடு விற்பனை துறையில் உள்ள Pat Kandiah அவர்களுக்கு இகுருவி நன்றி தெரிவிப்பதையும் காணலாம்.



The Guardian Mortgage Alliance நிறுவன அதிபரும் ,வீட்டு அடைமான மோர்ட்கேச் துறையில் தேர்ச்சி பெற்றவருமான Gini Annarasa அ[illegible]களுக்கு இகுருவி நன்றி தெரிவிப்பதையும் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரூஜ் பார்க் கொன்சர்வேட்டிவ் வேட்பாளர் தேர்தலில்

## புதிய தலைமுறையினரின் அமோக ஆதரவுடன் விஜய் வெற்றி





கடந்த மாதம் நடைபெற்ற ஸ்காபரோ – ரூஜ் பார்க் தொகுதிக்கான ஒன்ராறியோ புரோகிறசிவ் கன்சர்வேட்டிவ் கட்சி நியமன வேட்பாளர் தேர்தலில் விஜய் தணிகாசலம் அவர்கள் அதிகூடிய பெரும்பான்மையுடன் அமோக வெற்றியடைந்துள்ளார்.

இவரின் இவ்வெற்றி, இத்தொகுதியில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் என நம்பப்படுகிறது. ஆத்துடன், ஆட்சி மாற்றம் தொடர்பாக ஒன்ராறியோ மாநிலத்தில் வாழும் மக்கள் மத்தியில் ஒரு கருத்தியல் மாற்றம் ஏற்பட்டுள்ள இக்கால கட்டத்தில், விஜய் தணிகாசலம் அவர்களின் இவ்வெற்றியானது 2018ஆம் ஆண்டு ஆட்சி அமைக்கும் என நம்பப்படும் புரோகிறசிவ் கன்சர்வேட்டிவ் கட்சி வட்டாரத்தில் மிகவும் உன்னிப்பாகக் கவனிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.






# கடன்தொல்லை?

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாணந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

**நாங்கள் ஒரு புதிய ஆரம்பத்திற்கு வழிகாட்டுகிறோம், இனி**

- நிம்மதியான தூக்கம்
- மீண்டும் தொலைபேசி அழைப்புகளுக்கு பதிலளிக்கலாம்
- ஏக்கத்தை விட்டொழிக்கலாம்
- உங்கள் மேலிருக்கும் அந்தச்சுமையை அகற்றிவிடலாம்
- உங்களைப் பற்றி பெருமையாயும், ஆனந்தமாயும் உணருங்கள்
- இனி கட்டவேமுடியாத Billகளைப்பற்றி கவலையில்லை.
- நண்பர்கள், உறவினர்களிடம் கடன் வாங்கும் சிறுமையும் இனி இல்லை

அனைத்து கடன் பிரச்சனைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

**V. SRI**
Certified Insolvency Counsellor

**CREDIT SOLUTION CENTRE**
Trustee in bankruptcy இணைந்து ஒரே கூரையின் கீழ் இயங்கும் ஒரு தமிழர் நிறுவனம்

80 Corporate Drive, Suite 309
Scarborough, ON M1H 3G5
Tel: 416.439.0224
Fax: 416.439.0226
creditsolutioncentre@gmail.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## கனடா தமிழர் வரலாறு - 12

# கனடாவில் தமிழர்களின் அரசியல் பங்களிப்பு

கனடிய அரசியலில் ஈடுபாடு கொண்ட தமிழர்களைப் பற்றிக் குறிப்பட வேண்டும். அவ்வப்போது சில தமிழர்கள் அரசியலில் போட்டி போட்டாலும் அவர்கள் எல்லோரும் மக்களால் தெரிவு செய்யப்படவில்லை. தமிழர்கள் ஒன்றுபட்டு ஒற்றுமையாகச் செயற்பட்டால் எதையும் சாதிக்க முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டதால் ராதிகா சிற்சபைஈசன் அவர்களைத் தமிழரின் பாராளுமன்றப் பிரதிநிதியாகத் தேர்தலில் போட்டியிட நிறுத்தினர். அதன் பலனாகவே கனடிய பாராளுமன்றத்திற்கு தமிழர்களின் முதற் பிரதிநிதியாகச் சென்றவர் ராதிகா சிற்சபைஈசன் அவர்கள். தற்போது சட்டத்தரணியான ஹரி ஆனந்தசங்கரி; அவர்கள் பாராளுமன்றப் பிரதிநிதியாக இருக்கின்றார். மார்க்கம் நகரசபையின் உறுப்பினராக லோகன் கணபதி அவர்கள் இருக்கின்றார். ரொறன்ரோ மாநகரசபை உறுப்பினராக நீதன் சண் அவர்கள் இருக்கின்றார். ரொறன்ரோ கல்விச்சபை அங்கத்தவராக பார்த்தி கந்தவேள் அவர்களும், நோர்த்யோக் கல்விச்சபை அங்கத்தவராக யுனிற்ரா நாதனும் இருக்கின்றார்கள். தற்போது இருக்கும் தமிழர்களின் சனத்தொகைக்கு இந்தப் பிரதிநிதித்துவம் போதாது என்றே எண்ணத் தோன்றுகின்றது. தமிழர்கள் ஒற்றுமையாகச் செயற்பட்டால் தமிழ் உணர்வு கொண்ட இன்னும் பல பிரதிநிதிகளை அனுப்ப முடியம். பல்லின மக்கள் வாழும் கனடாவில் பல தமிழர்கள் அரசியலில் ஈடுபட்டுத் தேர்தலில் போட்டியிட ஆர்வம் கொண்டவர்களாக இருப்பதையும் அவதானிக்க முடிகின்றது.

ஒரு சாண் வயிற்றுக்கு எது தேவையோ அந்த உணவுப் பொருட்களுக்குக் கனடா பிரபலமானது. இங்கே பல்லின மக்களும் வாழ்வதால் அவர்களுக்குத் தேவையான உணவுப் பொருட்கள் எல்லாம் தடையின்றி இறக்குமதி செய்யப்படுகின்றன. துணிக்கடைகளில் மலிவு விற்பனை செய்வது போல இங்கே உள்ள உணவுப் பொருட்களும் அவ்வப்போது மலிவு விற்பனை செய்யப்படுகின்றன. மக்களும் காத்திருந்து அப்படியான நேரங்களில் தேவையான உணவு வகைகளை வாங்கி வைத்துக் கொள்வார்கள். இதைவிட பெரிய அங்காடிகளில் பொருட்கள் வாங்கும்போது. வேறு ஒரு அங்காடியில் விலை மலிவாக இருந்தால் அதைக் குறிப்பிட்டு (Price Matching) அந்த மலிவு விலைக்கே பொருட்களைப் பெற்றுக் கொள்ள முடியும். இதைவிட கூப்பன்கள் இருந்தால் மலிவு விலையிலோ அல்லது ஒன்றெடுத்தால் மற்றது இலவசமாகவோ பெற்றுக் கொள்ள முடியும். பெரும் அங்காடிகள் தங்களின் சூழலில் உள்ள இனத்தவர்களுக்கு எப்படியான பொருட்கள் தேவையோ அப்படியான பொருட்களை ஒரு பகுதியில் விற்பனைக்கு வைத்து தங்கள் வருமானத்தைப் பெருக்கிக் கொள்கின்றார்கள். இதைவிட அனேகமான வியாபர நிலையங்கள் வாடிக்கையாளரின் நலன் கருதி விடுமுறை நாளான ஞாயிற்றுக் கிழமைகளிலும் பதினொரு மணிக்குத் திறந்து மாலை ஐந்து மணிக்கு மூடுவார்கள். இப்படியான வசதிகள் இருப்பதால், குடும்ப அங்கத்தவர்கள் ஞாயிற்றுக்கிழமைகளில் ஒன்றாகச் சென்று தமக்குத் தேவையான பொருட்களை இலகுவில் வாங்க முடிகின்றது.





தமிழர்கள் அதிகம் வாழும் இடங்களில் தமிழர்களின் கடைகளும் இருக்கின்றன. உணவகங்களில் இடியப்பம், தோசை, இட்டலி, பிட்டு, புறியாணி, கொத்து றொட்டி போன்ற உணவு வகைகளைச் சுடச்சுடப் பெற்றுக் கொள்ள முடியும். கோழியும், முட்டையும் இங்கே மலிவாகக் கிடைப்பதால், சிக்கின் புறியாணிக்கும், தண்டூரிச் சிக்கினுக்கும் இங்கே பஞ்சமே இல்லை. ஐக்கிய அமெரிக்காவில் இருந்து வரும் தமிழர்கள் அங்கே அது போன்ற கடைகள் இல்லாததால், திரும்பிச் செல்லும்போது இப்படியான உணவு வகைகளை வாங்கிக் கொண்டு செல்வதுண்டு. அமெரிக்க எல்லையைக் கடக்கும்போது அவர்கள் கேட்டாலும் சமைத்த உணவு என்று சொன்னால் கொண்டு செல்வதற்குத் தடை இருக்காது. கனடாவிலும் அனேகமான தமிழர்களின் வீடுகளில் சமையல் செய்வதைக் குறைத்து விட்டார்கள். சிறிய குடும்பங்களுக்கு வீட்டிலே சமைப்பதைவிட கடைகளில் வாங்கும் உணவு வகைகள் மலிவாக இருப்பதே காரணமாகும். தமிழர்களின் பல கடைகளில் தமிழிலும் பெயர்பலகைகள் பெரிதாக எழுதப்பட்டிருக்கின்றன. வெள்ளிக்கிழமைகளில் பத்துக் கறிகள், வடை பாயாசத்துடன் சைவ உணவு இங்கே கிடைக்கின்றது. வாடிக்கையாளர்களுக்கு வாழையிலைச் சாப்பாடு அதுவும் பஸ்மதியா, குத்தரிசியா என்று கேட்டுக் கொடுக்கின்றார்கள். இலங்கையிலே சாப்பிட்ட அதே ருசியுடன் கூடிய றோஸ்பாண் மாசிச்சம்பலும், பருப்புடனும் சுடச்சுடத் தினமும் பெற்றுக் கொள்ளலாம். இடியப்பம் சொதி, சம்பலுடனும், இட்டலி சாம்பாருடனும் மலிவாகக் கிடைக்கிறது. சுருங்கச் சொன்னால் தாயகத்தில் எப்படியான உணவுப் பழக்கங்களுடன் தமிழர்கள் இருந்தார்களோ அதை எல்லாம் இங்கே கனடாவில் பெற்றுக் கொள்வதால் சாப்பாட்டைப் பொறுத்தவரையில் எவ்வித குறையுமின்றி இருக்கிறார்கள். ஆனால் அடுத்த தலைமுறையைச் சேர்ந்த சிலர் தமிழர்களின் பாரம்பரிய உணவு வகைகளைத் தவிர்த்து கனடிய சூழலுக்கேற்ப தங்கள் உணவு முறையை மாற்றிக் கொண்டிருக்கின்றார்கள். கனடாவில் தமிழர்களின் திருமணம், அந்தியேட்டி போன்ற நிகழ்வுகளில் தமிழரின் பாரம்பரிய உணவு வகைகளே வைக்கப்படுவதால், இப்படியானவர்களின் அந்த நிகழ்வுகளுக்கு வருவதற்கு அடுத்த தலைமுறையினர் தயங்குகின்றார்கள்.

ரொறன்ரோவில் மார்க்கம் — பின்ச் வீதிகளுக்கு அருகாமையில் உள்ள ஜி.ரி.ஏ பெரிய அங்காடியில் (GTA Square Mall) தமிழர்களுக்குத் தேவையன பொருட்களை ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ளக்கூடிய வசதிகள் இருக்கின்றன. தமிழர்களின் உணவு வகைகளைக் கொண்ட உணவகம், தமிழ் புத்தகங்கள் விற்பனையாகும் புத்தகசாலை, தமிழ் பத்திரிகை வெளியிடும் நிறுவனம், தமிழில் உரையாடக்கூடிய தமிழ் சட்டத்தரணிகள் அலுவலகம், வீடு விற்பனை முகவர் அலுவலகம், தனியார் கல்வி நிலையம், புடவை முதலான துணி வகைகளைக் கொண்ட துணிக்கடைகள், துணிகளைத் தைத்துக் கொடுப்பதற்கான தையலகம், பிறந்த தினக் கொண்டாட்டம் போன்ற சிறு நிகழ்ச்சிகளை நடத்தக் கூடிய மண்டபம், போதுமான அளவு வாகனத் தரிப்பிடம், மற்றும் இலவச தமிழ் பத்திரிகைகளைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வசதிகளைக் கொண்ட இந்த அங்காடியைச் சுற்றிவரத் தமிழ் குடும்பங்களைச் சேர்ந்த பலர் குடியிருக்கின்றார்கள். இதைவிட குடிமனைகளுக்கு அருகே இரண்டு கோயில்களும், பல உணவகங்களும் இருப்பதும் இவ்விடத்தின் சிறப்பாகும்.

இங்கே கனடாவில் உள்ள தமிழ் பிள்ளைகளின் பிறந்த தினங்களை தொடக்கத்தில் வீடுகளில் கொண்டாடியவர்கள் இப்பொழுதெல்லாம் அலங்கார மண்டபம் வாடகைக்கு எடுத்துக் கொண்டாடுகின்றார்கள். அதற்கான எல்லா வசதிகளும் மண்டபத்தில் இருப்பதல் பணத்தகை; கொடுத்தால் அதற்கான ஏற்பாடுகளை அவர்களே செய்து கொடுக்கின்றார்கள். ஆயிரம் பேரை அழைத்துச் சாப்பாடு போட்டேன் என்று சொல்லிப் பெருமைப் படுபவர்களும் இந்த மண்ணில் உண்டு. ஒரு சிலர் மட்டும் அத்தினத்தில் அப்பணத்தைச் சேமித்து ஊரிலே உள்ள போரினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அனுப்புகின்றார்கள். அனேகமான மன்றங்கள் அங்கத்தினரிடையே நடைபவனி மேற்கொண்டு அதில் வரும் நிதியை சேகரித்து இங்கே உள்ள வைத்திய சாலைகளுக்கு அன்பளிப்புச் செய்கின்றார்கள். அந்தப் பணம் புதிய நோய்கள் பற்றிய ஆராய்ச்சிகளுக்கு உதவியாக இருக்கின்றது. இதைவிட இசை, நடன நிகழ்ச்சிகள் நடத்தியும் சிலர் இப்படியான நல்ல காரியங்களுக்கு அந்தப் பணத்தைச் செலவிடுகின்றனர். இதைவிட இரத்தானம் செய்வது, உணவு வங்கிக்கு உணவு சேகரித்துக் கொடுப்பது, பொது பூங்காக்களைத் துப்பரவு செய்வது போன்றவற்றையும் தன்னார்வத் தொண்டர்களாகச் செய்கின்றார்கள். அந்த வகையிலே கனடாவில் உள்ள பல்லின மக்களுடன் சேர்ந்து தமிழர்களும் தங்கள் பங்கிற்குக் கனடாவைக் கட்டி எழுப்புவதற்கு தங்களால் முடிந்த அளவு உதவுகின்றார்கள்.

குரு அரவிந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெயந்தி



# புரட்சி சிறுமிக்கு கனடா அளித்த கௌரவ குடியுரிமை

அமைதிக்கான நோபல் பரிசைப் பெற்ற பாகிஸ்தானியரான மலாலா யூசப்சாய்க்கு கனடாவின் கௌரவ குடிமகள் அந்தஸ்தை வழங்கிச் சிறப்பித்தார்.

இந்த கௌரவத்தை ஏற்றுக் கொண்ட மலாலா, கனடா மக்களை, கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவை வெகுவாகப் பாராட்டிப் பேச ... கனடா நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கையிலிருந்து எழுந்து நின்று கைதட்டி மலாலாவைப் பலமுறை பாராட்டினர்.

"இன்னும் பேச நிறைய இருக்கிறது. இப்படி அடிக்கடி எழுந்து நின்று கைதட்டிப் பாராட்டினால் உங்களுக்கு சிரமமாக அமையும்'' என்று மலாலா சொன்னதற்கும் எழுந்து நின்று கைதட்டி கனடா நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமர்க்களப்படுத்தினார்கள்.

"கனடா வரலாற்றில் இளம் வயதில் பிரதமராயிருப்பவர் ஜஸ்டின் ட்ரூடோ. அவரைச் சந்தித்ததில் எனக்கு மிகப்பெரும் மகிழ்ச்சி. அகதிகளுக்குப் புகலிடம் தருவதில் ஆர்வமாக இருக்கும் இவரது பெரிய மனது பாராட்டிற்கு உரியது.

"கனடா பிரதமர் இளைஞர்... அவரை சந்திக்கும் போது அவருடன் கை குலுக்க மறந்து விடாதே.. அவர் நேரில் எப்படி இருக்கிறார் என்பதை எங்களிடம் விவரிக்க வேண்டும்' என்று சொல்லி அனுப்பினார்கள். கனடா பிரதமர் எப்படி இத்தனை இளமையாக இருக்கிறார் என்று மக்கள் அனைவரும் பேசிக் கொண்டிருக்கிறார்கள். பிரதமரைப் பற்றி பேசத் தொடங்கியதில் எனக்கு அவர் வழங்க இருக்கும் "கனடாவின் கௌரவ குடிமகள்' அந்தஸ்தையே மறந்து விட்டார்கள் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்... கனடா பிரதமர் ஜஸ்டின் யோகா செய்கிறார்... கையில் அழகாகப் பச்சை குத்திக் கொண்டிருக்கிறார்'' என்று மலாலா தொடர்ந்த போது ஜஸ்ட்டினின் மனைவி ஸோஃபீ கண்களை விரித்து சுருக்கி சிரித்து சிணுங்கி கணவனைப் பார்த்து பெருமைப் பட்டுக் கொண்டார்.

"அகதிகள் மற்றும் பாதுகாப்பற்ற குழந்தைகளுக்கு ஆதரவு அளிக்கும் கனடாவின் குடியேற்றக் கொள்கை தொடர்ந்து சிறப்பாக செயல்பட வேண்டும் என்று வேண்டி கேட்டுக் கொள்கிறேன்... எனக்கு கனடாவின் கௌரவக் குடிமகள் அந்தஸ்து வழங்கப்பட்டிருந்தாலும் நான் இங்கு வர வேண்டுமானால் விசா அனுமதி தேவைப்படும். அதைப் பற்றி பிறகு பேசிக் கொள்ளலாம்'' என்று மலாலா கலாய்க்க, மீண்டும் எழுந்து நின்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் கைதட்ட மலாலாவின் முகத்தில் கொஞ்சம் நாணம் குடியேறியது.

"கனடா மக்களே.. தொடர்ந்து உங்களது இதயங்களையும், இல்லங்களையும் உலகின் மிகவும் பாதுகாப்பற்ற குழந்தைகளுக்கும், குடும்பங்களுக்கும் திறந்து வையுங்கள் என வேண்டுகிறேன். பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுங்கள். பெண்கள் உயர உதவுங்கள்'' என்று மலாலா தனது உரையினை முடித்தார்.

மலாலா சொற்பொழிவை, இருக்கையில் அமர்ந்து கேட்ட நேரத்தைவிட, மலாலாவின் கருத்துக்களுக்கு... கனடா பிரதமர் குறித்த மலாலாவின் புகழ்ச்சிகளுக்கு... கனடா பிரதமர், அவர் மனைவி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் எழுந்து நின்று கைதட்டி கலகலப்புடன் ஆரவாரித்த நேரமே அதிகம்.

கனடாவின் கௌரவ குடிமகள் தகுதியைப் பெறும் ஆறாவது நபராவார் மலாலா.

இதற்கு முன்னர் அத்தகைய தகுதியைப் பெற்றவர்களில் நெல்சன் மண்டேலாவும், தலாய் லாமாவும் அடங்குவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

மலாலா அவையினரை வசப்படுத்தும் வித்தையை நன்றாகவே கற்றுக் கொண்டிருக்கிறார் என்பதற்கு கனடா நாடாளுமன்றத்தில் அவர் ஆற்றிய சொற்பொழிவுதான் சாட்சி.

யார் இந்த புரட்சி சிறுமி ?

நான் மலாலா, நானும் மலாலாதான் என்னும் குரல் கேட்கிறது உலகெங்கும். மடோனா, ஏஞ்சலினா ஜூலி போன்ற உலகப் புகழ்பெற்ற பெண் கலைஞர்கள் முதல் சாதாரணமான ஆட்கள் வரைக்கும் மலாலாவிற்கு ஆதரவு தெரிவிக்கிறார்கள். ஒரு நடிகருக்கு, ஒரு அரசியல் புரட்சியாளருக்கு, ஒரு விளையாட்டு வீரருக்கு இதுபோல உலகம் முழுவது மிருந்து ஆதரவுக் குரல்கள் வந்திருக்கும். ஆனால் ஒரு சிறுமிக்கு, இவ்வளவு பெரிய ஆதரவு கிடைத்திருப்பது இதுவே முதல்முறை. யார் இந்த மலாலா—? ஏன் இவ்வளவு பேர் மீண்டும் மீண்டும மலாலா, மலாலா என்கிறார்கள்.

மலாலா யூசுப்சாய் _1997 ஜூலை 12ஆம் நாளில் பாகிஸ்தானின் வடமேற்குப் பகுதியில் பிறந்தவர். இப்போது அவருக்குப் பதினைந்து (19) வயது. கடந்த அக்டோபர் 9, 2012 அன்று தாலிபான் பயங்கரவாதிகளால் சுடப்பட்ட மலாலா, லண்டன் மருத்துவமனைக்கு எடுத்து செல்லப்பட்டு காப்பாற்றப்பட்டவர் . பயங்கரவாதிகள் திட்டமிட்டு ஒரு 15 வயதுச் சிறுமியைக் கொல்ல முற்பட வேண்டியதன் காரணம் என்ன?

பெண்களைப் படிக்கவிடாமல் தடுத்தது எது? மதம். மதங்கள்தானே மனிதனை இன்னும் சிந்திக்கவிடாமல் வைத்திருக்கின்றன. உலகின் பல பகுதிகளில் இன்றும்கூட மதவாதம் மத அடிப்படையிலான விசயங்கள் மக்களின் வளர்ச்சியைத் தடை செய்து வைத்திருக்கின்றன.

அப்படித்தான் பாகிஸ்தானில் இஸ்லாமிய மதவாதிகள் ஆதிக்கம் செலுத்துகின்றனர். அந்த மதத்தைப் பின்பற்றுகிறோம் என்று சொல்லும் தாலிபான் பயங்கரவாதிகள், பெண்கள் படிக்கக்கூடாது; தெருவில் நடமாடக் கூடாது; காய்கறிக் கடைக்குக்கூட போகக்கூடாது என்று தடை விதித்திருக்கின்றனர். அதை எதிர்த்துப் பேசியதும், எழுதியதும் செயல்பட்டதும்தான் மலாலா சுடப்பட்டதற்குக் காரணம்.

பாகிஸ்தானின் வடமேற்குப் பகுதியிலுள்ள ஸ்வாட் பகுதியின் மிங்கோரா என்னும் ஊரில் பிறந்தவர். மலாலா யூசுப்சாயின் தந்தை —_ கவிஞர் ஜியாவுதீன் யூசுப்சாய் பள்ளி ஒன்றை நடத்தி வருகிறார்.

ஆப்கானிஸ்தானில் ஆதிக்கம் செலுத்தி, தோற்று பின்னர் பாகிஸ்தானின் சில பகுதிகளில் ஆதிக்கம் செலுத்தி வரும் தாலிபான் படையினரின் மதவாதக் கருத்துகள் மீது ஜியாவுதீன் யூசுப்சாய்க்கு எப்போதும் எதிர்க்கருத்து உண்டு. யூசுப்சாய் என்பது அப்பகுதி பழங்குடி மக்களின் கூட்டமைப்பு ஆகும். ஜியாவுதீனுக்கும் தன் மகள் மீது பெரும் மதிப்பு உண்டு. அதே பற்று மலாலாவுக்கும் உண்டு.

தாலிபான்களின் ஆதிக்கத்தால் தனது கல்வி உரிமை பாதிக்கப்படுகிறது என்று மலாலாவுக்குப் புரியும்போது, அதை எதிர்த்துக் கேட்கும் துணிச்சல் அவளுக்குப் பிறந்தது.

தன் மகள் தன்னிடம் கேட்ட கேள்வியைக் கண்ட ஜியாவுதீன் பெஷாவரில் ஒரு பத்திரிகையாளர் சந்திப்பில் மலாலாவைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பேசவைத்தார். உலகமே கண்டு நடுங்கும் தாலிபான்களை நோக்கி, என்னுடைய அடிப்படையான உரிமையான கல்வியைத் தடுக்க இந்தத் தாலிபான்களுக்கு என்ன தைரியம் இருக்க வேண்டும்? என்று கேட்டாள் மலாலா. இந்தக் கேள்வியை மலாலா கேட்டபோது, அவளுக்கு வயது 11.

அடுத்த ஆண்டு உலகப் புகழ்பெற்ற பி.பி.சி. செய்தி நிறுவனம், ஒரு மாணவியே தங்களின் கல்வி குறித்து எழுதினால் நலம் என்று தேடியது. 2009—ஆம் ஆண்டு தொலைக்காட்சி, இசை, பெண் கல்வி ஆகியவற்றைத் தடைசெய்துவிட்ட தாலிபானின் ஆட்சியில் பெண்களின் நிலைபற்றி எழுத ஜியாவுதீனின் பள்ளியில் ஒரு மாணவியைத் தேர்ந்தெடுத்தனர். அந்தப் பெண்ணின் குடும்பத்தினர் தயக்கம் காட்டவே தன் மகளையே எழுத வைத்தார் ஜியாவுதீன்.

தனது 12ஆவது வயதில் பி.பி.சி.யில் ஒரு பள்ளி மாணவயின் டைரிக் குறிப்பு என்ற தலைப்பில் எழுதத் தொடங்கினாள் மலாலா. முதலில் தன்னை யாரென்று அடையாளம் காட்டாமல்தான் எழுதத் தொடங்கினார்.

மலாலா கொடுத்த செய்தியும், அங்கு நடக்கும் கொடுமையும் உலகின் கவனத்தை ஈர்த்தது. சமூகத்திற்கு நம் பங்குக்கு என்ன செய்வது என்று தந்தையுடன் அடிக்கடி பேசிய மலாலாவின் மனது, டாக்டராகும் கனவிலிருந்து அரசியல் துறையில் மக்கள் பணியாற்றும் முடிவுக்கு வந்தது.

**தாலிபான்களின் ஆதிக்கத்தால் தனது கல்வி உரிமை பாதிக்கப்படுகிறது என்று மலாலாவுக்குப் புரியும்போது, அதை எதிர்த்துக் கேட்கும் துணிச்சல் அவளுக்குப் பிறந்தது.**

தைரியமாகப் பொது இடங்களில் தன் கருத்தைத் தெரிவிக்கத் தொடங்கினாள் மலாலா. பெண் கல்வியின் அவசியத்தையும், கல்வி என்பது அனைவரின் அடிப்படை உரிமை என்றும் பேசினாள். பாகிஸ்தானின் இளம் அமைதிப்பரிசு _ 2011 மலாலாவுக்குக் கிடைத்தது.

மலாலாவுக்கு ஆதரவுக் குரல்கள் பெருகிய நேரத்தில்தான் தாலிபான்கள் அவளது உயிருக்கும் குறிவைத்தனர். சுடப்பட்டாள் மலாலா; உலகம் துடித்தது; மக்கள் எழுந்தனர்.

மலாலாவுக்கு உலகெங்கும் ஆதரவுக்குரல் வெடித்தது. நான் மலாலா என்று பதாகை தாங்கியடி மாணவ, மாணவிகள் வலம் வந்தார்கள் . உலகப் பெரும் தலைவர்கள் மலாலாவைக் காக்கக் குரல் எழுப்பினார்கள்

உலகெங்கும் அவள் கால்கள் நடக்கத் தொடங்கின . மலாலா



தன் உரிமைக்காக உயிர்துறக்கத் துணிந்தார்.

உலகம் அவளை ஏற்றிப் போற்றுகிறது.

பல எதிர்ப்புகளும் கொலை மிரட்டல்களும் தொடர்ந்து வந்தாலும் பெண் கல்வியை வலியுறுத்தி இன்றும் போராடி வருகிறார் மலாலா. இந்த இளம் பெண்ணின் சாதனையைப் பாராட்டி 2014—ம் ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசு வழங்கி கவுரவிக்கப்பட்டது. இளம் வயதில் நோபல் பரிசு பெற்ற பெருமைக்கும் உரியவரானார்.

தற்போது மலாலாவை மேலும் பெருமைப்படுத்தும் வகையில் ஐநா, அமைதிக்கான இளம் தூதராக அவரை நியமிக்கவிருக்கிறது. தற்போது பிரிட்டனில் கல்வி பயின்று வரும் மலாலா, வளரும் உலக நாடுகளில் பெண் கல்வியை வளர்க்க நிதி திரட்டி உதவி வருகிறார்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடாவில் கவனமில்லாது தவறவிட்ட

# உங்கள் பணம் உங்களை தேடுகின்றது ! தெரியுமா?

மேலே குறிப்பிடப்பட்ட இந்த தலைப்பு செய்தி பலருக்கும் ஒரு புதிராகவே இருக்கும்.

ஆனால் கனடாவின் ஆங்கில ஊடகங்கள் பலவற்றில் பல தடவைகள் இவை தொடர்பான தகவல் கட்டுரைகள், விரிவாக ஏற்கனவே வெளிவந்திருந்தது. வெளிவந்த கட்டுரைகள் சிலவற்றின் தலைப்புகள் பின்வருமாறு:

"Canadians have billions
In Unclaimed money.
Here's how to find out
If you are one of them."

"கனடியர்களின் மில்லியன் டொலர்கள் பணம்

மொத்தமாக கோரப்படாது உள்ளது.

நீங்களும் அவர்களில் ஒருவரா?

என்பது எப்படி கண்டுபிடிப்பது என்பது இங்கு உள்ளது"

- TORONTO STAR, July 04, 2014

"Lost Money? Find here !!

"பணத்தினை இழந்தீர்களா?

இங்கே கண்டு பிடியுங்கள்"

- The Globe 2 Mail, July 19, 2011

"Canadians are missing billions
and no one seems to care."

"கனடியர்கள் மில்லியன் டொலர்களை தவற விட்டுள்ளனர்.

ஆனால், எவரும் கண்டு கொண்டதாக தெரியவில்லை"

"MACLEANS" Magazine, யூலை 03, 2014

பல வருடங்களாக தவற விடப்பட்ட ஆயிரக்கணக்கான மக்களும் எங்கே இருக்கின்றீர்கள்? என்ற ஆதங்கத்துடன் கடினய மத்திய வங்கி அவர்களின் விபரங்களை எதுவிதமான செலவுமில்லாமல் அவர்களே தேடிப் பார்க்க கூடிய அளவுக்கு வசதியாக தங்கள் இணையதளத்தில் வெளியிட்டுள்ளனர்.

கனடாவில் உள்ள தமிழர் பலரின் பெயர்களும் அங்கு இருக்கின்றது என்ற ஆதங்கத்தில் அதனை புரிந்துக் கொண்டு அவர்களின் நன்மை கருதி இதனை வெளிக்கொணர்கின்றேன்.

ஏதோ ஒருவழியில் வங்கிகளில் உள்ள தங்கள் பணம் எவ்வளவு தொகையாக இருந்தாலும், அந்த கணக்குடன் எதுவிதமான தொடர்புகளுமில்லாது, தொடர்ந்து வங்கிகள் அனுப்பும் அறிவுரை கடிதங்களையும் உதாசினம் செய்து கொண்டு தொடர்ச்சியாக பத்து வருடங்கள் இருந்தால், பத்து வருடங்கள் இருந்தால், பத்து வருட முடிவில் அந்த பணம் கனடா மத்திய வங்கியின் கோரப்படாத கணக்கிற்கு (Unclaimed Bank Balance - Bank of Canada) மாற்றப்பட்டு விடும்

முதியர்கள், நிரந்தரமாக நினைவுகள் இழக்கும் நிலைமை வரை நோய்வாய்பட்டவர்கள் என்ற வரிசையில் உள்ளவர்களே இங்கே அநேகமாக பணத்தினை தவறவிட்டவர்கள் ஆவார்கள்.

சி.பி.சி. செய்தி நிறுவனம் (C.B.C. News) அதற்கான காரணங்களை தெளிவாக ஆய்வு செய்து பின்வருமாறு வெளியிட்டுள்ளது.

மறதிகள்

(FORGETFULNESS)

விலாச மாற்றங்கள்

(CHANGE OF ADDRESS)

மனித மாறாட்டங்களும், தவறுகளும்

(HUMAN ERRORS & CONFUSIONS)

ஒழுங்கில்லாது வாரிசு நியமனம் செய்து மரணமாகியவர்கள்

(POOR ESTATE PLANNING)


தங்களின் பாசத்திற்குரியவர்களுக்கு தெரியப்படுத்தாது நோய்களில் நினைவு இழப்பவர்களும் மரணமாகின்றவர்களும்

(AVOIDING DIFFICULT CONVERSATION WITH LOVED ONCE)

பதிவுகள் அழிதல் அல்லது தவறுதல்!

(MISSING OR DAMAGE RECORDS)

குறிப்பிடப்பட்ட ஒரு நபரின் பெயரில் கோரப்படாத பணம் கனடிய




மத்திய வங்கியில் (Bank of Canada) தேங்கி உள்ளது என்பதனை எப்படி கண்டுபிடிப்பது?

அதுவே அடுத்த முக்கியமான கேள்வி!

அது மிக சுலபம் !

"கூகுள் தேடல்" (GOOGLE SEARCH) பகுதிக்குள் சென்று,

"UNCLAIMED BALANCES - BANK OF CANADA"என்ற சொற்தொடரை தட்டச்சு செய்து முதல் தகவல் பக்கத்தினை வெளிக் கொணருங்கள். தொடர்ந்து, "SEARCH OUR UNCLAIMED BALANCE REGISTRY" என விசேட எழுத்தில் கீழே காட்டும் சொற்தொடரினை கிளிக்

சிவ. பஞ்சலிங்கம், B.Com,



செய்து அந்த பக்கத்தினை வெளியேக் கொணருங்கள்.

பெயர், பதிவு செய்யும் இடத்தில் தாங்கள் தேடும் பெயரினை தட்டச்சு செய்யுங்கள். அங்கு அந்த பெயர் இருந்தால் தெளிவாக காட்டும். அதனை கிளிக் செய்யுங்கள்!

எந்த முகவரியில் வசிக்கும் போது, எந்த விலாசத்தில் உள்ள வங்கியிலிருந்து எவ்வளவு தொகை பணம் கவனிப்பாரில்லாது மத்திய வங்கியின் மூடப்படாத கணக்கிற்கு எப்போது தொடக்கம் மாற்றப்பட்டு, அங்கு தேங்கி உள்ளத என்ற சகல விபரங்களும் காட்டும்.

சரி, அடுத்த கட்டத்திற்கு வருவோம். அந்த பணத்தினை வெளியே எடுப்பது எப்படி?

அவர்களுடைய இணையதள பிரிவிகளில், "பணம் கோரும் விண்ணப்ப படிவம்" மின் அஞ் சல் வடிவத்தில் தரப்பட்டு, அதனை எப்படி வெளியே எடுப்பது போன்ற சகல விவரங்களும் தெளிவாக தரப்பட்டுள்ளது.

தேவை ஏற்பட்டால், பின்வரும் அந்த பிரிவுடன் கடிதமூலமும் தொடர்பு கொண்டும் வழிகாட்டல்களை பெற்று நடவடிக்கையினை முன் எடுக்கலாம்.

UNCLAIMED BALANCES SERVICES
BANK OF CANADA
234. WELLINGTON STREET
OTTAWA. ONTARIO K1A 0G9
PHONE : 1-800-303-1282
FAX : 613-782-7713
Email : info@bankofcanada.ca

பணத்தினை வெளியே எடுப்பதற்காக கோருபவர்களை இங்கு மூன்று பின்வரும் பிரிவுக்குள் உள்ளடக்கலாம்.

1. பணத்தினை பெற உரித்துடையவரே நேரடியாக கைச்சாத்திட்டு பணம் பெறுதல் (Individual Claim).

இந்த நிலைமையில் இருப்பவர்களுக்கு இதனை கோரும் போது பாரிய சட்ட பிரச்சனைகள் எவையும் இருக்க மாட்டாது. குறிப்பிடப்பட்ட விண்ணப்ப படிவத்தினை இணையத்திலிருந்து எடுத்து நிரப்பி எந்த வங்கி கிளையில் இருந்து பணம் மத்திய வங்கின் கோரப்படாத கணக்கிற்கு சென்றதோ, அந்த வங்கியின் அங்கீகாரத்துடன் தமது அடையாளங்களை நிரூபித்து இலகுவாக பணத்தினை மீள பெறலாம்.

2. பணத்தினை பெற உரியவர் மரணமாகியிருந்தால் வாரிசுகள் பெறுதல் (To make estate claim)

இந்த நிலைமையில் பணம் பெற உரித்துடைய வாரிசு முதலில் தமது விபரங்களை கனடிய மத்திய வங்கிக்கு அனுப்பி அதற்குரிய விண்ணப்ப படிவங்களை பெற்று நிரப்பி அனுப்புதல் வேண்டும்.

பணம் பெற உரித்துடைய வாரிசு என்பது "மரண சாசன பத்திரம் " (Last Will & Treatment) மூலம் நிரூபிக்கப்படல் வேண்டும். இப்பத்திரம் இல்லாதவர்கள் நீதிமன்ற ஆணை மூலம் வாரிசு என்பது சட்டரீதியாக உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

பணத்தின் உரிமையாளர் உயிரோடு இல்லை என்பதும் மரண சாசன பத்திரம் மூலம் நிரூபிக்கப்படல் வேண்டும்.

ஒன்றுக்கு மேற்பட்ட வாரிசுகளாக இருந்தால், சமமாக பகிர்ந்து வழங்கப்படும்.

3. சில குறிப்பிட்ட நிறுவனங்களின் பணமாக இருந்தால் நிறுவனமே கோருவது (To make a Corporate Claim)

மத்திய வங்கிக்கு குறிப்பிட்ட நிறுவனம் தங்களின் தகவல்களை அனுப்பி அவர்கள் கேட்கும் சட்ட ரீதியான ஆவணங்களை சமர்ப்பித்து கோரலாம்.

ஒவ்வொருவர் பெயரிலும் கோரப்படாத பணம் கணக்கில் உள்ளது என்ற தகவலை எந்த சந்தர்ப்பத்திலும் கனடிய மத்திய வங்கி அவரவரைத் தேடி அறிவிக்க மாட்டாது.

$1000 டொலர்களுக்கு மேற்பட்ட தொகையாக இருந்தால் நூறு வருடங்களுக்கு உரிந்துடையவர்கள் எப்போது வருவார் என எதிர்பார்த்து கணக்கில் பணம் காத்து இருக்கும். அதற்குள் உட்பட்ட தொகையாக இருந்தால் முப்பது வருடங்களுக்கு இருக்கும்.

இந்த பணத்தினை தேடிப் பார்ப்பதற்கும் மீள பெறுவதற்கும் எதுவிதமான செலவுகளும் இருக்காது. ஆனால் ஆதாரங்கள் மூலம் பணம் பெற நிரூபிப்பதற்குரிய ஆவணங்கள் ஏதாவது தேவைப்படின் அதற்குரிய செலவுகள் ஏற்படலாம்.

பத்திரங்கள் ஒழுங்காக சமர்ப்பித்தால் 10 — 12 கிழமைக்குள் தவற விட்ட பணத்தினை மீள பெற்று விடலாம்.

உங்கள் குடும்பங்களில் எவரின் பணங்கள் தவற விடப்பட்டதா? என்பதனை காலம் தாழ்த்தாது பரிசீலனை செய்துப் பாருங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீடு வாங்க விற்க அழையுங்கள்






Mohan PANCHALINGAM
Sales Representative
Dir: 647.321.7575
E: mohan_panch@hotmail.com

RE/MAX® COMMUNITY
Realty Inc, Brokerage

Bus: 416.287.2222
Fax: 416.282.4488
1265 Morningside Ave., # 203
Toronto ON M1B 3V9
Each Office Independently Owned and Operated



## "When it comes to lending, we make it happen"

- 2nd Mortgages
- Bad Credit, No Problem
- No Income, No Problem
- Consolidate Debts
- Tax & Mortgage Arrears
- Pay Off High Interest Credit Cards
- Renovations
- Private Mortgages

We specializes in private mortgage lending with unlimited funds. Satisfaction is guaranteed and we will get you on the road of financial freedom and peace of mind.

GGC
Good Grade Capital Incorporated
FSCO Admin. Lic. #:12577
www.ggcapitalinc.com
akila@ggcapitalinc.com

- New Immigrants Welcome
- Bad Credit
- Self Employed
- Open Mortgage
- Pre Approval
- Non-residents

## MORTGAGE APPROVED... I AM HERE TO FIND THE RIGHT PRODUCT FOR YOU....

- 1ST AND 2ND MORTGAGES
- PURCHASES, REFINANCES AND RENEWALS
- COMMERCIAL LOAN
- BUSINESS OPERATING LINE
- CONSTRUCTION LOAN
- OWN PRIVATE FUNDING
- EQUIPMENT LEASING & FINANCING
- WE OFFER CONSTRUCTION DRAW MORTGAGES...
- CONSUMER PROPOSALS AND BANKRUPTCIES
- HOME EQUITY TAKE OUT
- CREDIT SETTLEMENTS

GOOD GRADE MORTGAGES
Your Mortgage Architects
www.goodgrademortgages.ca
Akila@goodgrademortgages.com

Akila Senthil, AMP
CEO, Principal Broker
Broker Licence #: M08002166
C: 416-895-4321
T: 905-366-4322, F: 905-366-4326
2600 Skymark Ave, Building 10, Unit 104A, Mississauga ON L4W 5B2
2761 Markham Road, Unit A3, Toronto ON M1X 0A4




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாம் ரூட்ஸ் 2017

| மே 7 | ஸ்காபரோ கொன்வென்ஷன் சென்டர்







மே மாதம் 7 ஆம் நாள் ஸ்காபரோ கொன்வென்ஷன் சென்டரில் மீண்டும் பாம் ரூட்ஸ் நிகழ்ச்சி இடம்பெறவுள்ளது. இதன்போது சிறிலங்காவில் இருந்து குறிப்பாக வட கிழக்கில் இருந்து புகைப்படங்கள் காட்சிக்கு வைக்கப்படும். கனடாவை தளமாகக் கொண்ட Miracle Family Care என அழைக்கப்படும் கனடியத் தமிழர் தொண்டு நிறுவனத்தின் ஊடாக நிவாரணப் பணிகளுக்கு நிதி திரட்டப்படும். $ 10 மற்றும் $ 50 பெறுமதியான நுழைவுச் சீட்டுக்களை நிகழ்ச்சி நடைபெறும் மண்டப வாசலில் வாங்கலாம்.

**ஜனனி பாஸ்கரன்**

பாம் ரூட்ஸ் என்பது புகைப்படம் எடுத்து அதனை சேகரிப்பு/ ஏலம் அடிப்படையில் விற்று நிதிசேகரிக்கும் நிறுவனமாகும். . இது 2013 ஆம் ஆண்டில் புகைப்படக்காரர் ஜனனி பாஸ்கரனால் தொடங்கப்பட்டது, இது சிறிலங்காவில் வடக்கு / கிழக்கில் வாழும் குழந்தைகளுக்கு நிதி திரட்டுவதை நோக்கமாக் கொண்டது. இதற்காக, ஜனனி தனது பங்களிப்பை ஆற்ற விரும்பினார், சமூகத்தின் பிரதிநிதிகளாகவுள்ள குழந்தைகளுக்கு முறையான கல்வி மற்றும் சுற்றுச் சூழலை உருவாக்க விரும்பினார். இதன் மூலம் குழந்தைகளின் தற்போதைய வாழ்க்கை நிலையை மாற்றவும் எதிர்காலத்தில் அவர்கள் வலுவான தலைவர்களாக வரவும் வழிகோலும் என நம்புகிறார்.

பாம் ரூட்ஸ் இப்போது நான்காவது ஆண்டில் தடம் பதித்துள்ளது. சிறிலங்காவின் வடக்கு / கிழக்கு பகுதியில் மேற்கொள்ளப்படும் பல்வேறு திட்டங்களுக்கு ஆதரவாக 20,000 டொலர்களை வெற்றிகரமாக சேகரித்துள்ளது. அறுபதுக்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு கல்விக் கட்டணத்தை வழங்கியுள்ளது. பாதுகாப்பான சூழலில் பெண் குழந்தைகளை வளர்ப்பதில் கவனம் செலுத்தும் நிறுவனங்களுக்கு ஆதரவு அளித்துள்ளது. அன்றாட வாழ்க்கை செலவினங்களுக்காக போராடும் கைம்பெண்களுக்கு நிதியுதவி அளித்து வருகிறது.

2016 ஆம் ஆண்டில், பாம் ரூட்ஸ் நிறுவனத்தோடு பணியாற்றி வருவதற்காக இ—குருவி பிஸ்தா மார்கெட்டிங் எக்ஸ்செலன்ஸ் வழங்கும் Connecting Roots என்ற விருதை ஜனனி வென்றார்.





# MORTGAGE



Residential / Commercial / Industrial / Investment Properties

- 1st, 2nd and 3rd Mortgages
- Refinance
- Secured Line of Credit
- New House Commitment
- Home Equity Loan

Mortgage In Any Situations

We Deal with all banks

| Category | Starting Rate |
|---|---|
| 5 Years Variable | 2.2% |
| 3 Years Variable | 2.25% |
| 5 Years Fixed Rate | 2.69% |
| 3 Years Fixed Rate | 2.25% |
| 2nd Mortgage | 6.99% |

NESAN

MORTGAGE ALLIANCE

Thavaneesan Subra

Independently Owned and Operated

416-908-5656

Lic# M15001465, Brokerage # 10530

mortgage@nesan.ca

www.nesan.ca

SUBRA MORTGAGE SOLUTIONS INC.

Office: 647-351-0399

Toll: 1-844-878-2721 Fax: 647-351-3099

SUBRA ACCOUNTING & TAX SOLUTIONS INC.

Bus: 416-660-5656

Our Off: 1585 Markham Rd, Unit #407A, Toronto, M1B 2W1

INCOME TAX SERVICES:

Personal Tax Returns (T1)

Corporate Tax Return (T2)

ACCOUNTING SERVICES:

Bookkeeping, Business Registration

Payroll & Many More...

www.subra.com

solutions@subra.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சுப்பர் விசாவும், சுப்பர் விசாவுக்கான காப்புறுதியும்

இந்த புதிய 'சுப்பர் விசா' என்றால் என்ன? அதில் உள்ள நிபந்தனைகள் யாது?

கனடாவில் வசிக்கும் நாம் எங்கள் பெற்றோர் அல்லது பேரன்மார்களுக்கு ஸ்பொன்சர் செய்ய மட்டுமே இந்த திட்டம் அனுமதிக்கும். இத்திட்டம் சகோதரர்களுக்கு ஸ்பொன்சர் செய்து அழைக்க வேண்டுமாயின் அனுமதிக்காது.

முன்னைய ஸ்பொன்சரில் வழங்கப்பட்டது போல நிரந்தர வதிவுரிமை என்ற சொல்லுக்கு சாதாரணமாக பெற்றோரை அழைக்கும்

விடயத்தில் இனிவரும் காலங்களில் இடமில்லை. இவ்விசா பத்து வருடங்களுக்கு மட்டுமே வழங்கப்படும். இரு வருடங்களுக்கு ஒருமுறை அதனை புதுப்பித்தல் வேண்டும். இக்குறிப்பிட்ட பத்து வருடங்களுக்குள் விரும்பினால் தாயகத்துக்கோ அல்லது ஏனைய நாடுகளுக்கோ அவர்கள் போய் வரலாம்.

கனடாவிலிருந்து பெற்றோருக்கு ஸ்பொன்சர் செய்பவர்களுக்கு நிரந்தர தொழில் ஒரு குறிப்பிட்ட எல்லைவரை நிரந்தர வருமானம் உள்ளவர் என்பது நிரூபிக்கப்படல் வேண்டும். அந்த எல்லை எவ்வளவு என்பது கனேடிய குடிவரவு தகவல் பிரிவுகளில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதை டொரோண்டோவில் உள்ள மிகப் பெரும் காப்புறுதி நிறுவனங்களில் ஒன்றான Inforce Life நிறுவனம், இதற்கான இலவச ஆலோசனைகளை வழங்குகின்றது, இக்காப்புறுதி கம்பனிகளில் குறைந்தது ஒரு வருடத்திற்கேனும் மருத்துவ காப்புறுதி ஒப்பந்தம் ஒன்றினை இங்கு அழைப்பவர் தமது சொந்த பணத்தில் கைச்சாத்திட்டு எடுத்து சமர்ப்பித்தல் வேண்டும். ஏனெனில், அவர்கள் ஒன்ராரியோ மாகாண அரசின் இலவச காப்புறுதியை (OHP Health Card) பெற முடியாது. அதேபோல கனடாவிற்குள் வந்த பின்பு அரசின் இலவச பண உதவியும் பெற முடியாது. இவர்களுக்கு என்று ஸ்பொன்சர் பண்ணியரே பொறுப்பானவர் ஆவார்.

தாயகத்தில் கனேடிய தூதராலய நேர்முக விசாரணையில் திருப்தியாக பதில் அளித்திருத்தல் வேண்டும். முக்கியமாக மருத்துவ பரிசோதனை பூரணமானதாக இருத்தல் வேண்டும்.

துரிதகதியில், அதாவது இரு மாதங்களுக்கிடையில் சகல




நிபந்தனைகளும் திருபதியாக இருந்தால் விசா வழங்கி விடுவர் என குடிவரவு தகவல் பிரிவுகளின் செய்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இவ்வகை சுப்பர் விசாக்களை தமிழ் மொழி மூலம் உங்களுக்கு விரிவா தெளிவுபடத்தி உங்களுக்கான சுப்பர் விசாக்களைத் தயார் செய்து, துரிதப்படுத்தி தரும் முன்னோடி நிறுவனமாக Inforce Life நிறுவனம் அதற்க்கான தனி நிறுவனமாக www. supervisa.today என்ற இணையம் மூலமும் ஆலோசனைகளை வழங்குகின்றார்கள். காப்புறுதித் துறையில் பல ஆண்டுகள் அனுபவம் உள்ள இந் நிறுவனம் 1000 க்கும் மேற்பட்ட சுப்பர் விசாக்களை




தனது 100க்கும் மேற்பட்ட ஊழியர்கள் மூலம் வழங்கியிருக்கிறது. இதை இவர்களது இணையதளத்துக்குச் செல்வதன் மூலம் உறுதிப்படுத்திக் கொள்ளலாம்.

Super Visa Insurance Requirements

In order to obtain a Super Visa, visitors to Canada must have private medical insurance. The insurance must:

Be valid for a minimum of one year

Come from a Canadian insurance company

Cover health care, hospitalization and repatriation

Provide a minimum coverage of $100,000

Be valid for each entry to Canada

Be available for review by a port of entry office

மேலே கேட்கப்பட்டிருக்கும் தகமைகளுக்கு ஏற்றவாறு உங்களோட உடனிருந்து தங்களது தகமைவாய்ந்த முகவர்கள் மூலம் உங்களது வேலைப்பழுவை இலகுவாக்குகிறார்கள்.

www.supervisa.today நிறுவனம் தமது இணையதளத்தில் தங்களது அனுபதையும் தெரிவித்திருகிறார்கள் அதனை உங்களின் வாசிப்புக்காக கீழே தருகிறோம்.

SuperVisa Today is one of Canada's top Super Visa insurance brokers. We have been offering coverage to visitors of Canada for more than 15 years and specialize in getting you Super Visa insurance quickly and efficiently. With thorough knowledge of Super Visa insurance requirements, our advisors work to get you coverage at the most competitive rates on the market. SuperVisa Today takes pride in our ability to recommend personalized plans to suit your travel needs and is committed to delivering quality advice you can trust.

இவர்களின் சேவைகளைப் பெற்றுக் கொள்ள

10 Milner Business Court, Suite 707
Scarborough, ON M1B 3C6
support@supervisa.today
1-416-321-6000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனேடிய தமிழர் வர்த்தக சம்மேளன விருது விழா 2017

**இகுருவி ஐயாவின் புகைப்படங்களின் ஒரு பார்வை மேலதிக புகைப்படங்களை இகுருவி இணையத்தளத்தில் பார்வையிடலாம்**



**Most Outstanding Real Estate Professional**

Presented by Rajeef Koneswaran and Logan Velumailum of RE/MAX Community Realty Inc. to Sujan Shan



**Most Outstanding Insurance Professional**

Presented by Srithran Thurairajah of Life100 to Senthooran Punithavel - The Cooperators.



**Hall of Fame Award**

Presented to Dr. Ravi Gukathasan by MP Gary Anandasangaree and Past Winner, Monty Muthulingam.



**Guest of Honour**

Rajendra Theagarajah - Deputy Chairman of the Cargills Group



**Most Outstanding Mortgage Professional**

Presented by Vilosan Sivatharman of Chapel Ridge, Akila Senthil of Good Grade Mortgages, John Seevaratnam of PC Lending and Investment, and Mayuran Tharmabalan, CA, to Para Ganeshananda - TD Bank.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய சாதனைகள் படைக்கும் ஈழத் தமிழர்கள் Vegan Business

சைவ உணவும் சைவ உணவகங்களும் தமிழர்களுக்குப் புதியவையல்ல. பல்லாயிரக் கணக்கான வருடங்கள் வரலாற்றுப் பெருமைமிக்க தமிழர் பண்பாடும் விழுமியங்களும் பலராலும் விதந்து போற்றப்பட்டு வருகின்றன. உடல் ஆரோக்கியத்திற்கும் மன அமைதிக்கும் ஆகம மரபுக்கமைவான சமய நல்வாழ்விற்கும் சைவ உணவு மிகவும் உதவிவருவது கண்கூடு.


புலம்பெயர் நாடுகளில் வாழும் தமிழர்கள் பலரும் தொடர்ந்தும் சைவ உணவுகளையே தினமும் உண்டு வருவகிறார்கள். இத்தகைய உணவுப்









பழக்கமுள்ளவர்களுக்காக விசேட சைவ உணவகங்கள் ரொறன்ரோ நகரின் பல பகுதிகளிலும் இயங்கி வருகின்றன. உணவு வகை மட்டுமன்றி, மச்சம் எதுவும் பாவிக்கப்படாமல் உற்பத்தி செய்யப்படும் ஏனைய பல பொருட்களும்கூட படிப்படியான மக்கள் வரவேற்பைப் பெற்று வருகின்றன.

அண்மைக்கால அறிமுகமாக, எதுவித இரசாயன மற்றும் வேதியற் பொருட்களைப் பாவிக்காமல், இயற்கைவகை பசளைகளை மட்டுமே பாவித்து வளர்க்கின்ற தூய சைவ உணவு வகைகளை Organic Food என்று அழைக்கிறார்கள். இயற்கைவகை பசளைகளைப் பாவித்து, இயற்கை முறையில் வளர்க்கப்படும் காய்கறி, மரக்கறி மற்றும் பழ வகைகள் இதற்குள் அடங்குகின்றன. இந்த ஓகானிக் வகை மூலப்பொருட்களைப் பாவித்து உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கும் மிகுந்த வரவேற்பு உண்டு.

இதன் ஒரு புதிய சாதனைத் தடமாக, Vegan Food என்றழைக்கப்படும் நனிசைவ உணவு வகை தற்போது மேற்குலகில் வேகமான வரவேற்பைப் பெற்று வருகின்றது. இயற்கைப் பசளைகளிலும்கூட எந்தவொரு உயிரினங்களிலுமிருந்து பெறப்பெடும் பால், தோல், இறைச்சிவகை உட்பட எந்தப் பொருளையும் பாவிக்காமல் நூறுவீத இயற்கை உற்பத்திப் பொருட்களை மட்டுமே பயன்படுத்தி வளர்க்கப்படும் இத்தகைய நனிசைவ மரக்கறி உணவுப் பொருட்கள் மேற்தட்டு வர்க்கத்தினரின் கவனத்தை ஈர்த்து வருகின்றன. உணவு வகை மட்டுமன்றி, இப்படி உயினங்களின் எந்தப் பொருளையும் பயன்படுத்தாமல், நூறுவீத நனிசைவ மூலப்பொருட்களில் உற்பத்தி செய்யப்படும் ஏனைய பல பொருட்களுக்கும் மிகுந்த வரவேற்புக் கிடைத்து வருகிறது. திருவள்ளுவர் காலத்திலிருந்து பாரம்பரியமாக மதிக்கப்படுகின்ற ‘கொல்லாமை’ வழியொற்றி இந்த “வேகன்” Vegan ’ உணவுப் பொருட்களும், கைப்பை, சப்பாத்து, முகப்பூச்சு மற்றும் ஏராளமான தினசரி பாவனைப் பொருட்களும் ரொறன்ரோவிலும் புகழ்பெற்று வருகின்றன.

இத்தகைய வரலாற்றுப் புகழுடன் நவீன சாதனை உற்பத்தியாக வெளிவருகின்ற ‘வேகன்’ பாவனைப் பொருட்களை விற்கின்ற வர்த்தக நிறுவனத்தை ரொறன்ரோவின் ‘டவுண்ரவுன்’ மத்திய பகுதியில், ஈழத்தமிழர் ஒருவரே திறந்து, வெற்றியுடன் நடத்தி வருகிறார் என்பது ஈழத்தமிழர்களுக்குப் புகழ்சேர்க்கும் ஒரு செய்தியே.

ஸ்காபரோவின் மிக நீண்டகாலமாக இயங்கிவருகின்ற தளபாட உலகின் தனிக்காட்டு ராஜாவான சன் பிளவர்ஸ் நிறுவன உரிமையாளர்கள் திரு. திருமதி. — வின்சென்ட் டி போல் தம்பதியினரின் புதல்வனான 35 வயதே நிரம்பிய திரு. ஹெலனிக் வின்சென்ட் டி போல் அவர்களே இத்தகைய வேகன் வர்த்தக அங்காடியை ரொறன்ரோ டவுண்ரவுனில் நிறுவி வெற்றியுடன் நடத்தி வருகிறார்.



பார்க்டேல் (Parkdale) பகுதி என அழைக்கப்படும் ரொறன்ரோவின் இதயப் பகுதியில், இந்த வர்த்தக நிறுவத்தை நடாத்தி வருகின்ற ஹெலனிக் அவர்கள், ரொறன்ரோ மக்கள் மத்தியில் இத்தகைய பொருட்களுக்குக் கிடைத்து வருகின்ற வரவேற்பு காரணமாக தனது மைத்துனர் பிரித்தீஸ் வயாஸ் (Pritesh Vyas) அவர்களுடன் இணைந்து மேலதிக இணையத்தளங்கள் மற்றும் கிளைகளையும் திறக்கும் முயற்சியில் இறங்கியுள்ளார்.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் வெளியான ரொறன்ரோ ஸ்ரார் பத்திரிகையில், ஹெலனிக் அவர்களுடன் இடம்பெற்ற செவ்வி, மிகுந்த முக்கியத்துவம் கொடுத்து பிரசுரிக்கப்பட்டிருந்ததை இங்கே குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும். அந்தச் செய்திக் குறிப்பில்:

“Toronto's west end has gone vegan..... And Parkdale may soon be dubbed Vegandale. That's if Hellenic Vincent De Paul, 35, has his way. It's stocked with fashion and household goods that contain no animal products. That means faux leather bags, jackets and pants. The basement is devoted to cruelty-free shoes, both leather-looking boots and vegan sneakers (dyes and glues often contain animal products in your fave sneaks).

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவியலுக்கான பேரணி:



# அரசியல் தலையீட்டிற்கு எதிராக உலகளவில் ஆர்ப்பாட்டங்கள்






அறிவியல்ரீதியான உண்மைகள் மீது உலக அளவில் அரசியல் தாக்குதல் இருப்பதாகக் கருதும் ஆயிரக்கணக்கான விஞ்ஞானிகள், அதனை எதிர்த்து உலகெங்கிலும் நடைபெறும் ஆர்ப்பட்டங்களில் பங்கேற்றனர்.

அறிவியலுக்காக முதன்முறையாக ஒரு பேரணி மேற்கொள்ளப்பட்டது, அதுவும் சுற்றுச்சூழலை பாதுகாக்கும் நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் புவி தினத்தையொட்டி அது நடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

விஞ்ஞானத்திற்கான கொண்டாட்டம் இது என்று கூறும் பேரணி ஏற்பாட்டாளர்கள், அறிவியல் சமூகத்தை பாதுகாக்கவும், ஆதரிக்கவும் விடுக்கப்படும் ஒரு அழைப்பு இது என்று கூறுகின்றனர்.

அமெரிக்கத் தலைநகரில் நடைபெற்ற இந்தப் பேரணி, அதிபர் டொனால்ட் டிரம்புக்கு எதிரானது இல்லை என்று கூறும் நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள், மாறாக, டிரம்பின் நிர்வாகம் இந்த இயக்கத்தை நடத்த ஒரு கிரியா ஊக்கியாக இருந்திருப்பதாகத் தெரிவித்தனர்.

வாஷிங்டன் டிசியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பேசிய கலிஃபோர்னியா அகாடமி ஆஃப் சயின்ஸின் நிர்வாக இயக்குனர், டாக்டர் ஜொனாதன் ஃபோலே, பகுத்தறிவுக்கு மாறான வகையிலான கேள்விகளுக்கு ஆராய்ச்சி உட்படுத்தப்பட்டுள்ளதாகவும், அரசியல்வாதிகளின் தாக்குதல்கள் "அடக்குமுறைக்கு ஒப்பானது". என்று குறிப்பிட்டார்.

"நமது ஆரோக்கியம், பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழலை பாதுகாக்கும் அறிவியலை அவர்கள் குறிப்பாக இலக்கு வைக்கிறார்கள். நமக்கு ஏற்படும் பாதிப்புகளிலிருந்து அறிவியல் தான் பாதுகாக்கிறது," என்கிறார் அவர்.

"சிலர் பாதிக்கப்படுவார்கள், சிலர் இறக்கக்கூட நேரிடும்," என்று சொல்கிறார் டாக்டர் ஃபோலே. காலநிலை மாற்றம், மாசுபாடு, மருந்து என, பல்வேறு விதங்களில் அறிவியலுக்கு ஆதரவு தெரிவிக்கும் பல்வேறு ஆண்களும் பெண்களும் சனிக்கிழமையன்று நடைபெற்ற பெண்களின் பேரணியால் உந்துதல் பெற்று, தங்கள் கவலைகளை ஓங்கி ஒலிக்கச் செய்ய ஒன்றிணைகிறார்கள்.

இந்த அறிவியலுக்கான பேரணியின் வியன்னா மற்றும் ஆஸ்ட்ரியா ஏற்பாட்டாளர்கள், அமெரிக்க வெள்ளை மாளிகையில் டொனால்ட் டிரம்ப் நுழைவதற்கு சிறிது காலத்திற்கு முன்னர், பேஸ்புக் மூலமாக தங்கள் இயக்கத்தில் மக்கள் இணைய ஊக்கப்படுத்தினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

காலநிலை மாற்றத்தை புரளி என்று முன்னர் குறிப்பிட்டிருந்த டொனால்ட் டிரம்பின் கருத்துகள், மக்கள் விஞ்ஞான ஆதாரங்கள்கொண்ட உண்மைகளை சந்தேகிக்கத் தொடங்கிவிட்டதாக அறிவியல் சமூகத்தினரிடையே கவலைகளை எழுப்பியுள்ளன.

லண்டனில், விஞ்ஞானிகள் மற்றும் விஞ்ஞான ஆர்வலர்கள் கலந்து கொண்ட அணிவகுப்பு, விஞ்ஞான அருங்காட்சியகத்திலிருந்து பாராளுமன்ற சதுக்கம் வரை சென்றது.

தங்கள் ஆராய்ச்சியை இழிவுபடுத்தும் அரசியல்வாதிகள் மத்தியில் ஒரு "ஆபத்தான போக்கு" நிலவுவதாக ஆர்பாட்டத்தில் பங்கேற்ற பலர் கருதுகின்றனர்.

விஞ்ஞானிகளையும் அவர்களின் ஆராய்ச்சிகளையும் பொது மக்களுக்கு நெருக்கமாக கொண்டுவருவது தான், அறிவியலுக்கான இந்த பேரணியின் நோக்கமாகும்.

பொதுமக்களை தொடர்பு கொள்வது விஞ்ஞானிகளுக்கு சவாலாக இருக்கும் என்றும், விஞ்ஞானிகளை அரசியல்வாதிகளாக மாற ஊக்குவித்து, அதன் மூலம் அவர்களின் குரலை பொதுத்தளத்தில் திறம்பட ஒலிக்கவைக்கமுடியும் என்று நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் கருதுகின்றனர்.

அறிவியல்ரீதியான உண்மைகள் மீது உலக அளவில் அரசியல் தாக்குதல் இருப்பதாகக் கருதும் ஆயிரக்கணக்கான விஞ்ஞானிகள், அதனை எதிர்த்து உலகெங்கிலும் நடைபெறும் ஆர்ப்பட்டங்களில் பங்கேற்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறைவுற்ற பிபிசி தமிழோசையும் அருகிப் போகும் வானொலிப் படைப்பாற்றலும்



கானா பிரபா

76 ஆண்டுகளாக வானொலி வாழ்வு கண்ட பிபிசி தமிழோசை கடந்த மாதம் ஏப்ரல் 30, 2017 ஆம் திகதியோடு தன் சிற்றலையை நிறுத்திக் கொண்டிருக்கிறது. இந்த வானொலியோடு பிறந்து வளர்ந்தவர்களோ அல்லது அதற்குச் சில ஆண்டுகள் முந்திப் பிறந்தவர்களோ இன்றும் தமது வாழ்வின் அங்கமாகக் கொண்டிருக்கும் நிலையில் இந்த இழப்பு ஏற்பட்டிருக்கிறது.

தன்னுடைய ஒலிபரப்பு நிறுத்தத்துக்குக் காரணமாக பெருகி வரும் வானொலி, தொலைக்காட்சி ஊடகங்களை ஆதாரம் காட்டினாலும் அவை எந்த வகையில் பதிலீடாக இருக்கப் போகிறது என்ற கேள்விக்கான பதில் வெள்ளிடை மலை.

இன்று பிபிசி தமிழோசை மட்டுமல்ல பொதுவாகவே வானொலி ஊடகத்துறைக்கு இதுவொரு சவால் நிறைந்த காலம். அரை மணி நேரமோ ஒரு மணி நேரமோ ஒலிபரப்பாகும் நிகழ்ச்சிக்கு நாட் கணக்கில் திட்டமிடுதல், நாலைந்து மணி நேர ஒலிப் பயிற்சி, ஒத்திகையோடு ஒலிப்பதிவு. இதற்கெல்லாவற்றுக்கும் மேலாகத் தாமே சுய வானொலிப் பிரதியாக்கம் செய்து படைத்தல் இவையெல்லாவெற்றோடும் தான் வளர்த்தெடுக்கப்பட்டது இந்த வானொலிக்கலை.

24 மணி நேர வானொலிகள் ஆக்கம் பெற்ற காலத்தில் கூட இயன்றவரை சமரசமின்றியே இந்த வானொலிப் பண்பு பின்பற்றப்பட்டது.

ஆனால் இன்றுள்ள நிலை என்ன?

YouTube இல் இருந்து பாட்டெடுத்து ஒலிபரப்பினால் போதும் நிகழ்ச்சியை நிரப்பி விடலாம் என்ற நோக்கத்தில் புதியவர்கள் களமிறங்குகிறார்கள்.

என்னதான் மினக்கெட்டு ஒரு வானொலிப் படைப்பைத் தயாரித்தாலும் நேயர்களது ஆதரவு இல்லையே என்ற ஆதங்கத்தோடு பழையவர்கள் ஒதுங்கிக் கொள்கிறார்கள். அல்லது அரைத்த மாவை அரைக்கும் நிலை. இன்று கொட்டிக் கிடக்கும் 24 மணி நேர, பகுதி நேர வானொலிகளில் இயங்கும் மிகச் சிலரே அல்லது மிகச் சில நிகழ்ச்சிகளே வானொலிப் படைப்பாக அரங்கேறுகின்றன.

சிரித்திரனின் முன்னர் இலங்கை வானொலி வர்த்தக ஒலிபரப்பைக் கிண்டலடித்துச் சொன்னது போல "பல்வேறு பெயர்களில் தமிழ்த் திரையிசைப் பாடல்கள்" என்ற நிலை தான் பெரும்பாலும்.

இணையத்தில் கொட்டிக் கிடக்கும் சூடான, உசுப்பேற்றும், எந்த விதமான தரவுப் பிழை உறுதிப்படாத தகவல்களை வைத்து ஒரு வானொலி நிகழ்ச்சியைத் தயாரிக்கலாம் என்று இன்னொரு சாரார்.

ஒரு ஆளுமையைப் பேட்டி எடுப்பதிலேயே முற் தயாரிப்பு ஏதுமின்றித் தன் பாட்டில் வண்டி கட்டி ஓடும் யுகம் தான் இன்றைய வானொலிப் பண்பில் விரவி நிற்கின்றது.

போதாக்குறைக்கு அடுத்த தலைமுறைக்குத் தமிழ் வளர்க்கிறேன் பேர்வழி என்று இரண்டும் கெட்டானாகவும் சில வானொலி முன்னுதாரணங்கள்.

பிபிசி தமிழோசை வழியாகக் கற்க வேண்டிய ஏராளம் வானொலிப் பண்புகள் இருந்திருக்கின்றன.


குறித்த நேரத்துக்குள்ளாக உலகை மேய்ந்து விட்டு வருதல், அந்தச் சில மணித் துளிகளிலேயே சொல்ல வேண்டிய செய்தியைக் கச்சிதமாகவும், தெளிவாகவும் தருதல், வானொலி நேயர்களோடு ஒரு உறவுப் பாலம் அமைத்தல், அரசியல் மட்டுமன்றி, விஞ்ஞானம், தகவல் தொழில் நுட்பம், சினிமா சார்ந்த பெட்டக நிகழ்ச்சிகள், நாடகம் மற்றும் மொழி பெயர்ப்பு வடிவங்கள் என்று பல்துறை சார்ந்த ஊடக வெளிப்பாட்டைக் கொண்டு வந்தது.

பிபிசி தமிழோசை எல்லாத் தரப்பிலிருந்தும் விமர்சனங்களை எதிர்கொண்டது அதே வேளை எதிர்க்கருத்துகளையும் சார்பற்றுப் பகிர்ந்தது. அந்த நிலை அல்லது பண்பு இன்றுள்ள வானொலிகள் எவருக்கும் இல்லையெனலாம்.

பிபிசி தமிழோசை அகவை எழுபது கண்ட போது நான் எழுதிய பகிர்வு தொடர்ந்து

தம்பி! அந்த பிபிசியைத் திருப்பி விடு" அப்பா சொல்லுறார். மேசையில் படித்துக் கொண்டிருந்த என்னை உசுப்பிவிடப் பக்கத்தில் வெள்ளை விரிப்பில் உடல் போர்த்தியிருந்த வானொலியின் காதைத் திருகி சிற்றலை வரிசையில் பிபிசியைப் பிடிக்கிறேன். தாயகத்தில் இருந்த காலம் வரை இது எங்கள் வீட்டின் அறிவிக்கப்படாத கடமைகளில் ஒன்று. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தையும் ஆகாசவாணியையும் அரசியல் தத்தெடுத்துக் கொள்ள லண்டன் பிபிசியும், பிலிப்பைன்ஸ்வெரித்தாஸ் வானொலியும்தான் எங்களுக்கு அப்போது வானொலிக்காந்திகள். பெரும்பாலான வீடுகளின் திண்ணையில் ரேடியோவை இருத்தி வைத்துச் சுற்றும் சூழக்காதைத் தீட்டிக் கொண்டிருக்கும் ஊர்ப்பெருசுகள் லண்டன் தமிழோசையின் முக்கிய தலைப்புச் செய்திகளில் இருந்து அடுத்த அரைமணி நேரம் புகையிலை உணர்த்தலில் இருந்து, வெங்காயநடுகை வரை எல்லா கிராமிய சமாச்சாரங்களையும் ஓரமாகப் போட்டு விட்டு வானொலியின் சொல்லை வேதம் கற்கும் மாணவன் போன்ற சிரத்தையோடு காது கொடுத்துக் கேட்டுக் கொண்டிருப்பார்கள். தமிழோசை ஒலிபரப்பு முடிந்ததும் செய்தியின் பின்னணியில் தோரணையில் ஆளாளுக்கு அரசியலை அலச ஆரம்பிப்பார்கள். இது எங்களூரின் வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்ததொன்று.

பிபிசி தமிழோசையின் நிலையக் குறியிசையை மாற்றிய போது கூட அது பொறுக்காது பொங்கினார்கள் நேயர்கள், அவ்வளவுக்கு அன்னியோன்னியம். அத்தோடு புலம்பெயர் 24 மணி நேரத் தமிழ் வானொலி என்றாலும் அதில் பிபிசி தமிழோசை இருக்க வேண்டும் என்பது எழுதி வைக்கப்படாத விதி.



தமிழ் கூறும் நல்லுலகில் இருந்து புலம்பெயர்ந்து ஈழத்தமிழர்களும், தமிழ் நாட்டுத் தமிழர்களும் மேற்குலக நாடுகளில் குடியேற ஆரம்பித்த காலப்பகுதி 1980களின் நடுப்பகுதி என்று சொல்லலாம். ஆனாலும் அதற்குப் பலவருடங்களுக்கு முன்னரே உலகில் தமிழ் வானொலிகள் பல, அமெரிக்காவில் இருந்தும் பிலிப்பீன்ஸ் இல் இருந்தும் இங்கு பிரிட்டனில் இருந்தும் ஒலிபரப்பாகிக்கொண்டிருந்தன. அமெரிக்காவின் வொய்ஸ் ஓஃப் அமெரிக்கா தமிழ் வானொலி, சீனாவின் பீக்கிங் தமிழ் வானொலி, பிலிப்பீன்ஸின் மனிலா தமிழ் வானொலி ஆகியன இப்போது ஒலிபரப்பைத் தொடராவிட்டாலும் BBC என்ற எழுபது வயதுத் தமிழ் மூதாட்டி மட்டும் 1941 இல் இருந்து இன்றுவரை லண்டனில் இருந்து தமிழ் முழக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# BBC தமிழ்

## பிபிசி தமிழோசை

செய்துகொண்டிருக்கிறாள்.

1985குப்பிறகு தமிழ் பேசும் மக்கள் புலம்பெயர்ந்து மேற்குநாடுகளுக்கும் அவுஸ்திரேலியா போன்ற நாடுகளுக்கும் இலட்சக்கணக்கில் குடியேற ஆரம்பித்தார்கள். குடியேறிய நாடுகளில் எல்லாம் ஆலயங்களும் தமிழ்க்கடைகளும் நிறுவப்பட்டமை போல புதிய பல வானொலி நிலையங்களும் புலம்பெயர் தமிழர்களால் நிறுவப்பட்டன. இத்தனை புதிய தமிழ் வானொலிகளின் இளம் ஒலிபரப்பாளர்களும் இலண்டன் BBC தமிழோசையின் மீது வைத்திருக்கும் மதிப்பும், மரியாதையும் தமிழோசையின் தனித்துவத்திற்கு ஒரு சான்று என்று சொல்லலாம்.

இரண்டாவது உலகப்போர் காலத்தில் தனது காலணித்துவ நாடுகளுக்கு அவரவர் மொழியிலேயே உலகச்செய்திகளை வழங்க வேண்டும், நாடு நாட்டுடன் நல்லுறவு பேசட்டும் என்ற உயர்ந்த நோக்கத்தோடுபிரிட்டிஷ் அரசாங்கம் 1940 களில் ஆரம்பித்தது BBC World Service பன்மொழி உலக ஒலிபரப்புச் சேவை. இதில் ஒன்றான தமிழ்மொழி ஒலிபரப்பு 1941 ஆம் ஆண்டு மே மாதம் 3 ஆம் திகதி ஆரம்பித்தது. வாரம் ஒரு தடவை வியாழக்கிழமைகளில் மட்டும் ஒலிபரப்பாகிக் கொண்டிருந்த தமிழோசை தினசரி ஒலிபரப்பாக விரிவுபடுத்தப்பட்ட போது நிரந்தரத் தயாரிப்பாளர் பதவிக்கு சங்கர் சங்கரமூர்த்தி என்ற ஒரு துடிப்பான அறிவிப்பாளர் தமிழ் நாடு அகில இந்திய வானொலியில் இருந்து கொண்டுவரப்பட்டுப் பதவியில் அமர்த்தப்பட்டார். ஆங்கிலத்தில் எழுதப்படும் பிபிசி செய்திப் பிரதிகளை தமிழில் மொழிபெயர்க்கும் போது அவர் பயன்படுத்திய அழகு தமிழ்ச் சொற்கள் அவற்றை வான் அலைகளில் படிக்கும் போது கேட்கும் அவர் காட்டும் நெளிவு சுழிவுகள் செய்திகள் ஒரு திரைப்படத்தைப் போலகேட்போர் மனதைப் பதிய வைத்தன. இதனால் தமிழோசையை விரும்பிக் கேட்போர் எண்ணிக்கை பல்லாயிரக்கணக்காக அதிகரித்தது.

பிரித்தானிய வெளியுறவு அமைச்சின் நிதியுதவியோடு நடத்தப்படும் பிபிசி பன்மொழிச் சேவையில் ஒன்றான தமிழோசையை நேயர்கள் தெளிவாகக் கேட்கிறார்களா, அந்த நிகழ்ச்சியில் எவற்றையெல்லாம் ரசிக்கிறார்கள் போன்ற தகவல்களை BBC நிர்வாக அதிகாரிகள் நேயர்கள் அனுப்பும் கடிதங்களின் வாயிலாக அறிந்துகொள்கிறார்கள். தமிழ்க் கடிதங்களை ஆங்கிலத்திலே மொழி பெயர்த்து அச்சிட்டுக் கொடுப்பதற்கு Listener research department என்ற ஒரு பிரிவு இயங்கி வந்தது. சீர்காழி கோவிந்தராஜன் போன்ற இசைமேதைகள் லண்டனுக்கு வரும்போது அவர்களை வெறுமனே பேட்டி மட்டும் கண்டு அனுப்பிவிடாமல் தானே சில பாடல்களை எழுதி அவர்களைக்கொண்டு பாடவைத்து ஒலிபரப்புவார் கவிஞரான சங்கர்சங்கரமூர்த்தி அவர்கள். "தேம்ஸ் நதிக்கரையில் இருந்து தேடிவரும் ஓசை தமிழோசை", "மகாராணி மெச்சும் ஒரு மாட்டுப் பொண்ணு டயானாக்கண்ணு" போன்ற பாடல்களை இவர் எழுதி சீர்காழி கோவிந்தராஜனும் அவர் புதல்வர் சிவசிதம்பரமும் எங்கள் BBC கலையகத்தில் பாடி நேயர்கள் மத்தியில் மிகவும் பிரபல்யம் பெற்ற பாடல்கள். தமிழோசைத் தலைவர் சங்கர் சங்கரமூர்த்தி அவர்கள் தமிழோசைத் தலைவர் , தயாரிப்பாளர் என்ற பதவிகளில் இருந்து ஓய்வு பெற்ற பிறகு திரு.மகாதேவன், திருமதி ஆனந்தி. சூரியப்பிரகாசம், திரு சம்பத் குமார் ஆகியோரும் தமிழோசையின் தலைமைப் பதவியில் பணியாற்றினார்கள். இப்போது இந்தப் பதவியில் இருப்பவர் திருமலை மணிவண்ணன் அவர்கள். செய்திகளை முந்தித் தருவது, செய்திகளை நடுநிலையாக வழங்குவது, உறுதிப்படுத்தப்படாத செய்திகளை வழங்க மறுப்பது இவை BBC தமிழோசையின் அசைக்க முடியாத தூண்கள்.

உலகத்தமிழ் ஒலிபரப்புக்களில் BBC தமிழோசை ஒரு சிகரம் என்று மதிக்கப்படுவதற்கும் எழுபது ஆண்டுகளாக அது வானலைகளில் நிலைத்து நிற்பதற்குமான ரகசியம் இது ஒன்று தான். "தமிழோசை" என்ற தலைப்பைக் கேட்கும் பொழுதெல்லாம் தமிழ் ஒலிபரப்புக்கு இந்தப் பெயரைச் சூட்டிய சோ.சிவபாதசுந்தரனாரை வியக்காமல் இருக்க முடியாது. "தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்" என்று பாரதி எப்படித் தீர்க்க தரிசனத்துடன் பாடினானோ என்று நினைத்துக் கொள்வேன்! இப்படியாகத் தன் மன ஓசையில் பகிர்ந்து கொண்டார் அமரர் சுந்தா.வீ.சுந்தரலிங்கம் அவர்கள்.

எத்தனையோ ஜாம்பவான்களால் கட்டியிழுத்த இந்தத் தமிழோசை என்னும் தேர் இன்று தரிப்பிடத்தில் நிற்கிறது. அது தந்த சேவையை மறவோம்.


DEBT FREE CREDIT SOLUTION

Seeking freedom from DEBT?

We offer Total Debt FREE SOLUTIONS



Elankeeran .T

Certified Insolvency Counsellor

By Canadian Association of Insolvency and Restructuring Professionals (CAIRP)

- கடன் தொகையினை 80% வரை குறைத்து அதனை வட்டியின்றி ஒரு மாதத் தவணையில் கட்ட ஏற்பாடு செய்தல்.
  We provide expert advice on how to consolidate and reduce debt payments safely without borrowing money.
- பாதுகாப்பான முறையில் கடனை அடைப்பது பற்றிய அறிவுரையும் ஆலோசனையும் தரப்படும்.
  We shield you from your creditors and offer you a guranteed protection.

SETTLEMENT
CONSUMER PROPOSAL
BANKRUPTCY

Cell. 416.834.7227 Fax. 1.877.800.789
Tel. 416.434.1522 freedebt.toro@gmail.com

Head Office:
10 Milner Business Court, Suite 334
Toronto, ON. M1B 3C6

Branch Office:
101 Palstan Road
Mississauga, ON. L4Y 4E7

www.TotalDebtFree.ca


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் போராளிகள் குறித்த தமிழரசுக் கட்சியின் முடிவு?!

புருஜோத்தமன் தங்கமயில்

முன்னாள் போராளிகளை இணைத்துக் கொண்டு அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு இலங்கைத் தமிழரசுக் கட்சி தீர்மானித்துள்ளதாக அந்தக் கட்சியின் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்திருக்கின்றார். தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் மட்டக்களப்பில் கடந்த சனிக்கிழமை (ஏப்ரல் 29) நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் முன்னாள் போராளிகள் தொடர்பிலான தீர்மானம் கீழ்கண்டவாறு கூறுகின்றது,

“தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்துஇறுதிமோதல்களின் போது அரச படையிடம் சரணடைந்து புனர்வாழ்வு பெற்ற போராளிகளின் வாழ்க்கை முறையை சரியான முறையில் மேம்படுத்தப்பட வேண்டும். அவர்கள் சமூகத்தில் உள்ளீர்ப்புச் செய்யப்பட்டு சரியான முறையில் நடத்தப்பட வேண்டும். அரசியல் வாழ்க்கைக்கு சரியான விதத்தில் உரிய நேரத்தில் கதவு திறக்கப்பட்டு அவர்கள் உள்ளீர்க்கப்பட வேண்டும்.”

இறுதி மோதல்கள் நிறைவுக்கு வந்து எட்டு ஆண்டுகள் கடந்துள்ள நிலையில், தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில் முடிவுகளை எடுக்கும் பிரதான கட்சியான தமிழரசுக் கட்சி முன்னாள் போராளிகளை கட்சியில் உள்ளீர்ப்பது தொடர்பில் பேசியிருப்பது சிறிய ஆசுவாசப்படுத்தலைக் கொடுக்கின்றது. ஆனால், அந்த ஆசுவாசப்படுத்தல் என்பது மேலோட்டமானதாக இருந்துவிடுமோ என்கிற அச்சமும் சேர்ந்தே எழுகின்றது. அது, தேர்தல் அரசியலும், அதுசார் நிகழ்ச்சி நிரலும் முன்னாள் போராளிகளை தொடர்ந்தும் ‘ஆலைக் கரும்புகளாகப் பாவித்துவிட்டு சக்கைகளாக வெளித்தள்ளிவிடுமோ’ என்கிற சந்தேகத்தின் போக்கில் எழுவது. ஆக, சந்தேகத்துக்கு அப்பால் எந்த அரசியல் கூற்றையும் எதிர்கொள்ள வேண்டிய தேவையில்லை என்கிற நிலையில், தமிழரசுக் கட்சியின் முன்னாள் போராளிகள் தொடர்பிலான தீர்மானத்தினையும் சற்று ஆழமாக ஆராய வேண்டியிருக்கின்றது.

2015ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ஷ அகற்றத்துக்கு பின்னரான சூழலில் முன்னாள் போராளிகளில் குறிப்பிட்டளவானவர்கள் அரசியல் அரங்கில் நேரடியாக இயங்குவது தொடர்பில் பெரும் ஆர்வம் கொண்டிருந்தனர். அந்த நேரடி அரசியல் இயங்குநிலை தங்களின் மீதான அச்சுறுத்தலையும், சந்தேகங்களையும் நீக்கம் செய்யும் என்றும் அவர்கள் நம்பினார்கள். ஆனால், அதனை எங்கிருந்து எவ்வாறு ஆரம்பிப்பது என்பது தொடர்பில் தெளிவற்ற நிலையே இருந்தது. அது இன்னமும் தொடரத்தான் செய்கின்றது.

இறுதி மோதல்களின் பின்னர் முன்னாள் போராளிகளை ஒரு புள்ளியில் இணைத்து, அவர்கள் எதிர்கொள்கின்ற உடல் உள சிக்கல்களையும், வாழ்வாதாரம் என்கிற அடிப்படையையும் சீர்செய்து கொடுக்க வேண்டிய கடப்பாடு தமிழ்த் தேசிய அரசியல் அரங்கிற்கும், அதுசார் அனைத்துத் தளங்களுக்கும் இருந்தது. ஆனால், அந்தக் கடப்பாடு எந்தவொரு தருணத்திலும் நிறைவேற்றப்பட்டிக்கவில்லை. இது தொடர்பில் முன்னாள் போராளிகளின் ஆதங்கங்களை நாம் தொடர்ச்சியாக கண்டும் கேட்டும் வந்திருக்கின்றோம்.



முன்னாள் போராளிகள் தொடர்பில் அரசியல் கட்சிகளும், சிவில் சமூக அமைப்புக்களும், புலம்பெயர் தளத்திலுள்ளவர்களும் குறிப்பிட்டளவில் காய்களை நகர்த்தியிருக்கின்றார்கள். அதற்கான காட்சிகளை நாம் கடந்த காலங்களில் கண்டோம். ‘விச ஊசி’ விடயத்தை தமிழ்த் தரப்பு எப்படி கையாண்டது என்பதே அதற்கான நல்ல சான்று.



முன்னாள் போராளிகளை தமிழ்த் தேசிய அரசியல் எந்த இடத்தில் நிற்கின்றது என்பதற்கான குறியீடாகவும் கொள்ள முடியும். தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்ட விடுதலைக்கான போராட்டமொன்று பல தரப்புக்களினால் இணைந்து மூர்க்கமாக தோற்கடிக்கப்பட்டுள்ள நிலையில், அந்தப் புள்ளியிலிருந்து வெற்றிகரமான பக்கத்திற்குநகருவதற்கு மறுக்கின்ற மனநிலையோடுதான் தமிழ்த் தேசிய அரசியல் அல்லாடிக் கொண்டிருக்கின்றது. அதனை, முன்னாள் போராளிகளின் இன்றைய நிலை பிரதிபலிக்கின்றது. தமக்குள் ஏற்பட்டிருக்கின்ற பிரச்சினைகளை அடையாளம் கண்டுகொண்டு அவற்றைத் தீர்ப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வதே ஆரோக்கியமுள்ள சனக்கூட்டமொன்றின் முன்னோக்கிய பயணத்தின் ஆரம்பம். ஆனால், அந்தப் பிரச்சினைகள் பற்றி உரையாடுவதையோ, அதற்கான தீர்வினைக் காண்பதையோ தவிர்ப்பது என்பது நோய்க்கூறுகளை அப்படியே வைத்துக் கொள்ள நினைக்கும் மனநிலையாகும். அது, செயற்திறனின்மையின் வெளிப்பாடு. தோல்விகளின் தொடர்ச்சிகளுக்கான அத்திவாரம்.

ஈழத்தமிழ் மக்களின் குறிப்பிட்டளவான பகுதியினரின் வாழ்க்கையோடு ஒவ்வொரு தருணமும் இரத்தமாகவும் சதையோடும் சம்பந்தப்படுகின்ற முன்னாள் போராளிகள் தொடர்பிலான அரசியல்-சமூக முடிவு என்பது சுயநல அரசியல்களுக்கும், குறும் வெற்றி வாதத்திற்கும் அப்பாலானதாக இருக்க வேண்டும். அது, தமிழ் மக்களின் ஒட்டுமொத்த முன்னேற்றத்திற்கும் ஆக்கபூர்வமான பங்களிப்பினை வழங்க வேண்டும். மாறாக, தீர்மானங்களின் ஒரு சரத்தாக அல்லது தேர்தல் மேடைகளில் பேச்சுக்களாகமாத்திரம்முன்னாள் போராளிகள் கையாளப்பட்டுவிட்டு நிகாரிக்கப்பட்டால், அவர்களின் நிலை பற்றிய உரையாடல், அவர்களின் வாழ்தலுக்கான அடிப்படைகளை சரிசெய்து முன்னோக்கி கொண்டு வருவதற்குப் பதிலாக, அவர்களை ஒரு பேசு பொருளாக மட்டுமே வைத்துக் கொண்டிருக்கின்றது. அதனூடு தங்களது அரசியல் நிகழ்ச்சி நிரலை வலுப்படுத்திக் கொள்ளலாம் என்பது

2015 பொதுத் தேர்தல் காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும், சிரேஷ்ட ஊடகவியலாளர் என்.வித்தியாதரன் ஒருங்கிணைப்பாளராக இருந்த ஜனநாயகப் போராளிகள் கட்சிக்கும் இடையில் வெளிப்படையான சந்திப்பொன்று இடம்பெற்றது. அந்தச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திப்பு இடம்பெற்ற தருணமும் சூழலும் பொருத்தமற்றது என்கிற போதிலும், அந்தச் சந்திப்பின் போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் நடந்து கொண்ட விதம் எரிச்சலூட்டியது. குறிப்பாக, ரெலோ அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் நடந்து கொண்ட விதம் (அவரின் உடல்மொழி) முன்னாள் போராளிகளை கேவலப்படுத்தும் தோரணையில் இருந்தது. அது முன்னாள் போராளிகளின் அரசியலுக்கான உரிமையை மறுதலிக்கும் மனநிலையின் வெளிப்பாடாகவும் இருந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதான மே தினக் கூட்டம் அம்பாறையின் ஆலையடிவேம்புப் பகுதியில் கடந்த திங்கட்கிழமை (மே 1) நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் 15 தீர்மானங்கள் அடங்கிய பிரகடனம் வெளியிடப்பட்டது. அதில், 13வது தீர்மானம், “முன்னாள் போராளிகள் சமூகத்தில் மீளிணைக்கப்படும் செயற்பாடு சீரான முறையில் நடைபெறவேண்டும். அவர்களுக்கான வாழ்வாதார வசதிகள் செய்து கொடுக்கப்பட்டு ஜனநாயக, அரசியல் செயற்பாட்டுக்குள்ளும் அவர்கள் உள்ளீர்க்கப்பட வேண்டும்.” என்கின்றது. இந்தப் பிரகடனம் வாசிக்கப்படும் போது, இரா.சம்பந்தனுக்குப் பக்கத்தில் செல்வம் அடைக்கலநாதனும் அமர்ந்திருந்தார். முன்னாள் போராளிகளை தமது கட்சிக்குள் இணைத்துக் கொள்வதற்கு தமிழரசுக் கட்சி தீர்மானித்து அறிவிப்பை வெளியிட்டு இரண்டு நாட்களில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மே தினப் பிரகடனத்திலும் முன்னாள் போராளிகள் குறித்த விடயம் உள்ளடக்கப்பட்டிருக்கின்றது.

நாடு மூன்று முக்கிய தேர்தல்களை எதிர்வரும் இரண்டு ஆண்டுகளுக்குள் எதிர்கொள்ளலாம். அதாவது, புதிய அரசியலமைப்பு மீதான பொது வாக்கெடுப்பு, உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் மற்றும் மாகாண சபைத் தேர்தல்கள். இதில், அரசியலமைப்பு மீதான பொது வாக்கெடுப்பு நடைபெறுவது தொடர்பில் உறுதியாக கூற முடியாது. ஆக, அது தொடர்பில் கூட்டமைப்பு இப்போது அவ்வளவு கவனம் செலுத்தவில்லை. ஆனால், உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் இந்த ஆண்டின் இறுதிப் பகுதியிலும், மாகாண சபைத் தேர்தல்கள் வரும் ஆண்டிலும் நடைபெறவுள்ளன. ஆக, அந்தத் தேர்தல்களை நோக்கி முன்செல்ல வேண்டிய தேவையொன்று கூட்டமைப்புக்கும் ஏற்பட்டிருக்கின்றது. அதனை தேர்தல் அரசியலில் நிராகரிக்கவும் முடியாது.

இப்போது உடனடியாக வரவிருக்கின்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் ஏக அங்கீகாரம் பெறுவது தொடர்பில் கூட்டமைப்பு தன்னுடைய கவனத்தை செலுத்த எத்தணிக்கின்றது. ஏனெனில், அங்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் தன்மையொரு போட்டியாளராக களமிறக்கவுள்ளது. அத்தோடு, தமிழரசுக் கட்சிக்கு கூட்டமைப்பின் ஒட்டுமொத்த ஆளுகையையும் வைத்துக் கொண்டு தனிப்பெரும் கட்சியாக முன்னெறுவது தொடர்பில் பெரும் ஆர்வம் உண்டு. அதில், எம்.ஏ.சுமந்திரன் முனைப்போடும் செயற்பட்டு வருகின்றார். அதன்போக்கிலும், முன்னாள் போராளிகள் தொடர்பிலான அணுகுறை முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகின்றது.

வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களிலும், மாகாண சபைத் தேர்தல்களிலும் முன்னாள் போராளிகள் சிலரை கூட்டமைப்பு தன்னுடைய வேட்பாளர்களாக களமிறக்கும். அதனூடு தன்மீதான விமர்சனங்களை அல்லது அழுத்தங்களை பகுதியளவில் குறைத்துக் கொள்ளலாம் என்றும் கருதுகின்றது. அதனை, முறையான ஒழுங்கு முறையில் செய்வது வரவேற்கப்பட வேண்டியதுதான். ஆனால், தேர்தல்களில் வேட்பாளர்களாக ஒருசில முன்னாள் போராளிகளை அடையாளத்துக்காக நிறுத்திவிட்டு, அவர்கள் சார் வாழ்வியலை ஒட்டுமொத்தமாக புறந்தள்ளிவிட்டு நகர்வதற்கான முனைப்புக்கள் எழுந்தால் அது மிகவும் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தலாம். அது, முன்னாள் போராளிகள் தற்போதுள்ள விரக்தி மனநிலையின் அளவினை அதிகரித்து வேண்டாத சுட்டங்களை உருவாக்குவதற்கும் ஏதுகையாக அமையலாம்.

12000 முன்னாள் போராளிகள் இருக்கின்றார்கள். அவர்களோடு நேரடியாக சம்பந்தப்பட்டவர்கள் அல்லது இரத்த உறவுகளாக 60,000—100,000 பேர் இருக்கின்றார்கள். அதுபோல, காணாமல் ஆக்கப்பட்டவர்கள் என்கிற கணிசமான தொகையோடும் தமிழ் மக்கள் விடைகள் தேடி அல்லாடிக் கொண்டிருக்கின்றார்கள். ஆக, ஈழத்தமிழ் மக்களின் குறிப்பிட்டளவான பகுதியினரின் வாழ்க்கையோடு ஒவ்வொரு தருணமும் இரத்தமாகவும் சதையோடும் சம்பந்தப்படுகின்ற முன்னாள் போராளிகள் தொடர்பிலான அரசியல்—சமூக முடிவு என்பது சுயநல அரசியல்களுக்கும், குறும் வெற்றி வாதத்திற்கும் அப்பாலானதாக இருக்க வேண்டும். அது, தமிழ் மக்களின் ஒட்டுமொத்த முன்னேற்றத்திற்கும் ஆக்கபூர்வமான பங்களிப்பினை வழங்க வேண்டும். மாறாக, தீர்மானங்களின் ஒரு சரத்தாக அல்லது தேர்தல் மேடைகளில் பேச்சுக்களாக மாத்திரம் முன்னாள் போராளிகள் கையாளப்பட்டுவிட்டு நிகாரிக்கப்பட்டால், அவர்களின் நிலை இன்னும் மோசமானதாக மாறும். அதனை, தமிழரசுக் கட்சியும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் நிகழாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Thermocare Heating and Cooling Inc.





தயாளன் இராசையாவின் நேரடி நிர்வாகத்தின்கீழ் Thermocare Heating and Cooling Inc. பல வருடங்களாக தமிழர்களுக்கு தேவையான Heating and Cooling சேவையினை வழங்கி வருகின்றனர். காலநிலைகள் மாறுகின்ற போதெல்லாம் வீட்டின் வெப்பநிலைகளை மாற்றியமைக்க வேண்டிய கட்டாயத்துக்கு ஒவ்வெரு வீட்டு உரிமையாளர்களும் உட்படுத்தப்படுகிறார்கள். அதேபோல் பல வீடுகளுக்கு வருகின்ற நகரசபை நீர் கல்சிய அடர்த்தி குடியதாகவும் உள்ளது அதற்கு WATER SOFTENERS கருவிகள் பாவிப்பது அவசியமாகின்றது. நல்ல குடிநீரைப் பெறுவதற்கு WATER FILTER SYSTEM உறுதுணையாக இருக்கிறது.

மேற்கூறிய விடயங்களை ஒரு வீட்டு உரிமையாளரால் தனியே செய்து விடமுடியாதென்பதும் நாம் அறிந்த விடயமாகும். இவ்வகையான சேவைகளை நியாயமான கட்டணத்துடன் தமிழர்களுக்க வழங்கி வருகிறது தயாளனின் Thermocare Heating and Cooling Inc. நட்பான Customer Service, செயல்திறன்மிக்க தொழில் நுட்ப வல்லுனர்களைக் தன்னகத்தே கொண்டு ஒவ்வொரு வீட்டுத் தேவைகளையும் பூர்த்தி செய்கிறது Thermocare Heating and Cooling Inc.. அதற்கு உதாரணமாக அண்மையில் இவர்களின் வாடிக்கையாளர்களில் ஒருவரான Thomas Noirot இவர்களின் சேவை குறித்து தனது கருத்தினை இணையத்தில் பதிவிட்டிருக்கிறார்.

Thomas Noirot - 8 months ago

*Those guys are very honnest and professional. my AC is very old , they were able to bring it back to life then when it died again they honnored the warranty and tried to fix it again for free. unfortunately its dead but i did appreciate their honnesty and professionalism. They also dispatched someone in a timely manner on both occasions.*

Thermocare Heating and Cooling Inc. நிறுவனத்திடம் பின்வரும் சேவைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

## FURNACE

உங்கள் வீட்டுக்கோ அல்லது வர்த்தக நிறுவனங்களுக்கோ புதிதாக தரவாய்ந்த FURNACEகளை நிர்மணிப்பது அத்துடன் அவற்றை பராமரிப்பது அதேபோல் ஏற்கனவே இருக்கும் FURNACEகளையும் உரியமுறையில் பராமரித்தும் திருத்தியும் தருகிறார்கள்.

## AIR CONDITIONER

FURNACEகளைப் போலவே அனைத்து வகைப் AIR CONDITIONERகளையும் திருத்திப் பராமரிப்பதுடன் கட்ட்டங்களின் சதுரஅடிக் கணக்குகளை அளவிட்டு அதற்குத் தகுந்தாற்போல் AIR CONDITIONERகளை புதிதாகவும் நிறுவித் தருகிறார்கள்.

## THANKLESS / HOT WATER HEATERS

தற்பொழுது வாடிக்கையாளர்கள் மத்தியில் வரவேற்பைப் பெற்று வரும் THANKLESS / HOT WATER HEATERS SYSTEMSகளையும் பொருத்தித்ருவதுடன் பலவருட உத்தரவாதத்தையும் தருகிறார்கள்.

## WATER SOFTENERS

WATER SOFTENERSகளை இவர்கள் மூலம் பொருத்துவதன் மூலம் உங்களின் நீர் தரம்மிக்கதாக மேம்படுத்தப்படுகிறது. உங்களின் LAUNDRY போன்றவை பளிச்சிடும் தூய்மையுடன் கிடைக்கும்.

## WATER FILTER

இலத்தவர்களின் குடிநீர் WATER FILTER மூலமகா மேலும் சுத்திகரிக்கப்பட்டு உங்களுக்கு சுகாதரமான குடிநீரை வழங்குகிறார்கள் Thermocare Heating and Cooling Inc. நிறுவனத்தினர்.

இவர்களை பற்றிய விபரங்களை www.thermocare.ca என்ற இணையதளத்தில் பெற்றுக்கொள்ளலாம். இவர்களின் சேவைகளுக்கு 416 640 1174 என்னும் தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம் மற்றும் மின்னஞ்சல்: thermocare@hotmail.ca


**அனைத்து விதமான உடல் பிரச்சனைகளுக்கும் பக்க விளைவுகளற்ற முழுமையான தீர்வுக்கும் நமது 5000 வருட பாரம்பரிய மருத்துவ முறையான ஆயுர்வேத மருத்துவமே சிறந்தது என்பது நம் எல்லோருக்கும் தெரியும்**




**Treatments Available For**

PSORIASIS, ECZEMA and all types of skin problems, ARTHRITIS, LOW BACK ACHE, SCIATICA, STROKE, GYNAECOLOGIC PROBLEMS, PCOS, MALE AND FEMALE INFERTILITY, KIDNEYSTONE, PILES, ULCER, HEADACHE, DIABETES, HYPERTENSION, OBESITY, HAIR FALL, DANDRUFF, SPECIAL TREATMENT FOR STRESS RELIEF & ALL KINDS OF MALE SEXUAL PROBLEMS.

இவ்விடத்தில் பாரம்பரிய கேரளா முறைப்படி இங்குள்ள தட்ப வெப்ப நிலைக்கேற்ப சிறந்த முறையில் சிகிச்சையளிக்கப்படுகிறது

கேரளா பாரம்பரிய முறை பஞ்சகர்மா சிகிச்சை, உடலில் உள்ள நச்சுத்தன்மைகளை நீக்கி புத்துணர்வு அளிக்கும் – ஷிரோதாரா சிகிச்சை, நாட்பட்ட தலைவலி, தலைமுடி உதிரல். போன்றவற்றை நீக்கவல்லது.

மற்றும் ஆயுர்வேத தைலங்களால் அனைத்து வித வாத நோய்களுக்கும் மசாஜ் சிகிச்சையளிக்கப்படும்.



VASISHTA AYURVEDIC

**Vasishta Ayurvedic Wellness Inc**
**2199 Midland Avenue, Unit# 1 Scarborough ON, M1P 3E7**
**For Appointments : (647) 532-1255**
**(416) 291-6730**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# We're Growing !

BE PART OF OUR ADVENTURE

RE/MAX® ACE
REALTY INC. BROKERAGE INDEPENDENTLY OWNED AND OPERATED




RE/MAX® ACE
REALTY INC. BROKERAGE INDEPENDENTLY OWNED AND OPERATED

416-270-1111 416-270-7000
3-1286 Kennedy Road Toronto, ON M1P 2L5
www.remaxace.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org